தந்தி: "வசந்தா" கோயமுத்தூர். போன்: நெ, 25.

வசந்தா மில்ஸ் லிமிடெட்.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: சிங்காநல்லூர்.

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு செக்ரடரீஸ்:

R. K. ஷண்முகம் செட்டி அண்டு பிரதர்ஸ்.

1934-ஸ் கள்ளிக்கோட்டையில், நடந்த கண்காட்சியில் நூல் ரகங்களுக்காக தங்க மெடல், நற்சாட்சிப் பத்திரம் பெற்றிருக்கிறோம்.

நூற்றல்:

20 நெ. முதல் 44 நெ. வரை, ஒத்தை, முறுக்கு, காரம் சலவை நூல் தயாரிக்கிறோம்.

எல்லா விதமான ஜவுளி ரகங்களும்:

வேஷ்டிகள், லாங்கிளாத்,
டவல், சர்ட்டிங்,
மல், சதர்,

தயாரிக்கிறோம்.

எங்களுடைய வி. 116 நெ. லாங்கிளாத் மார்க்கட்டில் பெயர் பெற்றது.

600 நெ. காடா தயாரிக்கும் உரிமை எங்களுடையதே.

போலிகளைக்கண்டு ஏமாருதீர்கள்.

நம் நாட்டுத் தொழிலை ஆதரியுங்கள்.

Occupational Duties Overseas

Can be even more trying than fighting for Victory

H. E. The Governor's

Amenities & Relief Fund

Earnestly appeals for further subscriptions

SINCE

Indian and British Troops positively

NEED

AMENITIES.

Please send a remittance to the Honorary Treasurer,

H. E. THE GOVERNOR'S AMENITIES & RELIEF FUND,

C/o Imperial Bank of India, 1st Line Beach,

MADRAS.

தோஷமற்ற, உயரிய, பூரிப்புள்ள

வைரங்கள்

அழகிய வேலைப்பாடமைந்த

பவுன் நகைகள்

நவீன முறைகளால் தயாரிக்கப்படும்

வெள்ளி சாமான்கள்

இவைகளுக்கு எங்களைக் கலந்து ஆலோசிக்கவும்.

உம்மிடியார்

உம்மிடி ராமய்ய செட்டி, குருசாமி செட்டி கம்பனி

24/25. சைனு பஜார் :: மதருஸ்

தமிழிசைச் சங்கம் (சென்னை)

மூன்றாவது ஆண்டு விழா (1945)

திறப்பாளர்: திரு. டி. வி. கல்யாணசுந்தரனார்

வரவேற்புக் கழகத் தலைவர்: திரு. எம். ராதாகிருஷ்ண பிள்ளை, [மாஜி மேயர்.]

இடம்: செயின்ட் மேரிஸ் ஹால், அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி., சென்னை.

நிகழ்ச்சி விபரம்

23—12—45

மாலை 3—மணி: டி. ஆர். சாவித்திரி சிவகங்கா அண்டு பார்ட்டி — (பாட்டு) நாகேந்தரன், கோபி
திறப்பு விழா: மாலை 4-25 மணிக்கு [நாத் அண்டு பார்ட்டி (பாட்டு)
மாலை 5—மணி: வி. சாந்தகுமாரி அண்டு பார்ட்டி — பாட்டு

24—12—45

மாலை 3-30 மணிக்கு குளிக்கரை பிச்சையப்பா அண்டு பார்ட்டி — நாகஸ்வரம்.
மாலை 5-30 மணி: எம். எம். தண்டபாணி தேசிகர் (ராஜமாணிக்கம் பிள்ளை வயலின்) அண்டு [பார்ட்டி — பாட்டு.

25—12—45

மாலை 3-30 மணி: ஸ்ரீமதி வைக்கம் சரஸ்வதி அண்டு பார்ட்டி — பாட்டு
மாலை 5-30 மணி: மதுரை மணி அய்யர் அண்டு பார்ட்டி — பாட்டு

26—12—45

மாலை 3-30 மணி: கும்பகோணம் ஏ. டி. சுல்தான் பார்ட்டி — பாட்டு
மாலை 5-30 மணி: வேலூர் எஸ். மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை அண்டு பார்ட்டி — பாட்டு

27—12—45

மாலை 3-30 மணி: திருவாரூர் பி. ஆர். திலகம் அண்டு பார்ட்டி — பாட்டு
மாலை 5-30 மணி: என். சி. வசந்தகோகிலம் அண்டு பார்ட்டி — பாட்டு

28—12—45

மாலை 3-30 மணி: தஞ்சை கே. பி. கிருஷ்ணமூர்த்தி பிள்ளை அண்டு பார்ட்டி — பாட்டு
மாலை 5-30 மணி: பந்தநல்லூர் ஜெயலக்ஷ்மி அண்டு பார்ட்டி — பரதநாட்டியம்

29—12—45

மாலை 3-30 மணி: சுவாமிமலை எஸ். எஸ். கல்யாண சுந்தர தேசிகர் அண்டு பார்ட்டி — பாட்டு
மாலை 5-30 மணி: கே. பி. சுந்தராம்பாள் அண்டு பார்ட்டி

30—12—45

பி. எஸ். வேதாச்சலம் செட்டியார் அண்டு பார்ட்டி — பாட்டு
மாலை 5-30 மணி, செம்பை வைத்யநாத பாகவதர் (டி. சௌடையா வயலின்) அண்டு பார்ட்டி

31—12—45

மாலை 3-30 மணி: அமிர்தவல்லி கமலா அண்டு பார்ட்டி — பாட்டு
மாலை 5-30 மணி: எம். எஸ். சுப்புலக்ஷ்மி அண்டு பார்ட்டி — பாட்டு

சீசன் டிக்கெட்டுகள்: முதல் வகுப்பு: ரூ 30; 2வது வகுப்பு: ரூ 20; 3வது வகுப்பு - ரூ 12.

டிக்கெட்டுகள் கீழ்க்கண்ட இடத்தில் கிடைக்கும்:

தமிழ் இசைச் சங்கம், 8/9, சிங்கண நாய்க்கர் தெரு, ஜி. டி. சென்னை. சங்கக் காரியாலயத்தில் ரூ. 5 அதிகப்படியாகச் செலுத்தி முதல் வகுப்பு சீசன் டிக்கெட்டுக்காரர்கள் இடத்தை 'ரிசர்வ்' செய்து கொள்ளலாம்.

ஆதரவாளர்களுக்கு சங்கக் காரியாலயத்தில் மட்டுமே குறைந்த கட்டணத்தில் டிக்கெட்டுகள் விற்கப்படும்.

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்

கம்பெனி, லிமிடெட்.

(தலைமை ஆபீஸ்: பம்பாய்)

தீ, ஆயுள், கப்பல், விபத்துகள்

முதலிய இன்ஷூரன்ஸ்கள் செய்யப்படுகின்றன.

தலைவர் :- ஸர். சுனிலால் வி. மேதா.

உபதலைவர் :- ஸ்ரீ ஜே. ஆர். டி. டாடா.

ஆயுள் இலாகா சம்பந்தமான விவரம்

1944-ம் வருஷத்தில் செய்யப்பட்ட புது பிஸினஸ்	ரூ. 6 கோடிக்கு அதிகம்.
1944-ம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ந் தேதி வரைக்கும் செய்யப்பட்ட பாலிஸிகளின் மொத்த தொகை	ரூ. 21 கோடிக்கு அதிகம்.

பொருளாதார புள்ளி விவரங்கள்

செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 71,21,055.
மொத்த நிதி	ரூ. 6 கோடிக்கு அதிகம்.
மொத்த இருப்பு (சுமார்)	ரூ. 8 கோடி
ஆரம்பம் முதல் கிடைத்த பிரிமியம் வருமானம்	ரூ. 22 கோடிக்கு அதிகம்.
கொடுக்கப்பட்ட மொத்த உரிமைத் தொகை	ரூ. 11 கோடிக்கு அதிகம்.

இன்ஷியூர் செய்வதற்கோ அல்லது பிரதிநிதியாக இருப்பதற்கோ சிறந்த இந்திய கம்பெனி.

சென்னை கிளைநிலையம்,
4 & 5 முதல் லைன் பீச்.

கே. கணபதி,
பிராஞ்சு மானேஜர்.

மிகச்சிறந்த ஆயுர்வேத ஔஷதங்களும் சிகிச்சைகளும்!

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

★

ஆர்யவைத்தியர்

பி. வி. ராமவாரியர்

ஆர்யவைத்ய பார்மசி

திருச்சி ரோடு :: கோயமுத்தூர்

★

கேட்லாக் இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

THE VASANTHA DYEING WORKS,

181 Oppanakara Street
Coimbatore.

Phone No. 155. **Estd., 1921.**

Proprietor

C. M. Subramanya Chettiar

CONTRACTOR
To

THE VASANTHA MILLS, LIMITED.
SINGANALLUR.

For all kinds of dyeing border yarn and tie yarn etc., undertakes any variety of colour dyeing at reasonably cheap rates for dyeing all counts of yarn, cloth and sarees of 100 and 80 counts, wholesale orders received our due and special attention. A trial order will convince you the good quality of our work. Fastness and durability of colour guaranteed.

இந்தியன் பாங்கு லிமிடெட்

தலைமை ஆபீஸ்: 'இந்தியன் பாங்கு பில்டிங்ஸ்'

வடக்கு பீச் ரோடு :: மதராஸ்

லோகல் ஆபீஸ்கள்:

எஸ்பிளனேட் — திருவல்லிக்கேணி
மயிலாப்பூர் — தியாகராயநகர்
புரசவாக்கம் — மவுண்டுரோடு
எக்மோர்

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபிஸ்களுமுள்ளன.

வழங்கி வாக்களிக்கப்பட்ட
மூலதனம் ரூ. 68,71,800
செலுத்தப்பட்ட ,, ,, 41,09,478
ரிஸர்வ் நிதி ,, 56,15,009
டிபாஸிட்டுகள் 12½ கோடிக்கு மேல்

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் ஏற்றுக்கொண்டு நடத்தப்பெறும்

பூரா விபரங்களுக்கும் பாங்கியின் எந்த ஆபீஸிற்காவது விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர், செக்ரடரி

IBN 101

The Fashionable
Furnishing Fabrics

DRESS
TEXTILES

Ladies', Gents', Children's
Underwear Sport Shirts etc.

S. BEEMIAH CHETTY,

"WHITE SHOP"



உபாத்தியாயர் தயவு காட்டுகிறார்

ஏனெனில், பையன் டாம்கோ கூந்தல் தேங்கா யெண்ணெயும், ஷாம் பூவும் உபயோகித்து வரு கிறான்.



தி டாடா ஆயில் மில்ஸ்

கம்பெனி, லிமிடெட்.

வசந்தம்

மலர் 4	பார்த்திப ஸூ மார்கழி மீ	இதழ் 9

பொருளடக்கம்

மலரும் மணமும்	...	...	1
மணமகளுக்கு	...	ப. தனுஷ்கோடி	3
புத்தக ஆராய்ச்சி	...	...	10
பிரார்த்தனை பலித்தது	...	'சிவசக்தி'	11
சுட்டபழமும்...	...	...	17
கண்கள்	...	சி. பி. பொன்னுசாமி	18
கவிக் குரல்	...	கு. மு. ராமரத்தினம்	20
சிலப்பதிகாரம்	...	சர். ஆர். கே. எஸ்	21
கலைக்கோயில்	...	சுத்தானந்தர்	33
கதம்பம்	...	"மாறன்"	39
தாகம் தணிந்தது	...	கு. ப. சேது அம்மாள்	42
முதுமையில் இளமை	...	வி. ஸ. காண்டேகர்	48
பிரதிக்ஞை	...	"ஸ்கந்தன்"	55
இரண்டு சித்திரங்கள்	...	ஜெயலக்ஷ்மி ஸ்ரீநிவாசன்	59
வாழ்க்கை லட்சியம்	...	ரா. நா	68
ஞானோதயம்	...	எம். எஸ். ஹமீத்	70
சாவித்திரி	...	ஆர். ஷண்முகசுந்தரம்	77

'வசந்த'த்தில் வெளிவரும் கதைகள், கட்டுரைகளில் காணப்படும் பெயர்களெல்லாம் கற்பனை.



பிரதி தினம் பழம் புசித்தல் டாக்டரை துரத்துகிறது

சுகாதாரம் வாழ்வின்
சாரம். நோயற்ற வாழ்விற்கு
தினம் சுத்தமான பழம் புசிப்பது நலமென்று
டாக்டர்கள் உபதேசிக்கிருர்கள்.

ஆகையால் இந்தியாவின் நன்மைக்காகவும், செல்வத்திற்காகவும் பழத்தை அதிகமாக சாகுபடி செய்தல் முக்கியமானது. இத்துடன் தற்போது சாகுபடியின்றி வீணில் தரிசாக கிடக்கும் நிலங்களிலும் பழ மரங்களை வைத்து வளர்க்கவேண்டும். ஆனல் பழம் அழுகிப் போகும் வஸ்து. ஆகையால் அதை சீக்கிரமே மார்க்கட்டுக்குக் கொண்டுபோய் சேர்க்க வேண்டும். ரஸ்தா போக்குவரத்து சாதனங்கள் சீக்கிரமாகவும் ஜாக்கிரதையாகவும் சாமான்களை மார்கெட்டுக்கு கொண்டுபோக வசதி அளித்து கஷ்டத்தை நீக்கும்.

தேசத்தின் சுகாதாரத்திற்கும் சுபிக்ஷத்திற்கும் நல்லபோக்குவரத்து சாதனங்கள் அத்தியாவசியம். ரயில்வேக்களும் நதிகளும் இது விஷயத்தில் முக்கிய உதவி அளித்தும் அளித்துக்கொண்டும் வருகின்றன எனினும் ரஸ்தாக்களும் அவைகளைப் போலவே முக்கியமானவை எல்லாவற்றையும்விட இந்தியாவுக்கு அதிக ரஸ்தாக்கள் அவசரமாகத் தேவை.

நல்ல ரஸ்தாக்கள் செழிப்பிற்கு மார்க்கமாகும்

BSZ



நீண்ட தமிழால் உலகை
நேமியின் அளந்தான் — கம்பர்

மலரும் மணமும்

'வசந்த'த்தின் தோற்றம் வனப்புடன் திகழ்வதைக் காணலாம். இந்த மார்கழித் திங்களில் காலை இளம்பரிதி கண் சிரிக்க, பொன் பரங்கிப் பூக்கள் புன்னகை புரிய, மல்லிகை உதிர்த்தது போல் மாக்கோலம் இழைத்து மகிழ்ந்து நிற்கும் இந்த வடிவழகி, தமிழ்ப் பண்பின் உல்லாசத்தை உள்ளங்களிலே நிறைக்கிறாள் அல்லவா? இனி வரும் 'வசந்த' இதழ்கள் இன்னும் அபார சோபையுடன் அற்புதமாகக் காட்சியளிக்கும்.

'மணமகனுக்கு' என்ற தலைப்பில் ப. தனுஷ்கோடி எழுதியிருக்கும் அறிவுரைக் கட்டுரை, சிந்தனைக்குச் சிறந்த விருந்து. மணமகள்கள் மட்டுமல்ல, பெண்ணாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் படித்துப் பயன் பெற வேண்டிய கட்டுரை அது.

கொஞ்ச காலம் 'வசந்த' ச் சோலையில் திரை மறைவில் இருந்த 'மாறன்' இந்த இதழில் 'கதம்ப' த்துடன் தலை காட்டி, உள்ளத்தில் நிரப்பும் கதம்ப உணர்ச்சிகளை அநுபவிக்கத்தான் வேண்டும்.

துளசிதாஸரின் வாழ்க்கைத்தொடரில், மனிதக்காதலுக்கும், பக்திக் காதலுக்கும் இடையே ஏற்படும் போராட்டத்தை உணர்ச்சி ததும்பும் ஒரு சொற் சித்திரமாகச் சித்திரித்திருக்கிறார் இளம் சொற் சிற்பி எம். எஸ். ஹமீத், தமது 'ஞானோதயம்' என்ற ஓரங்க நாடகத்திலே.

கொடை வள்ளல் கர்ணனைத் தன் மகன் என்று குந்திதேவி உலகறியச்சொல்லி அவன்மீது விழுந்து பிரலாபிக்கும் இடம் மகாபாரதத்தில் மிக உருக்கமான கட்டம். அதைக் கண்ணெதிரே காண்பது போல் உணர்ச்சிகள் கொப்புளிக்க அருமையாகக் காட்டியிருக்கிறார் கு. ப. சேது அம்மாள் 'தாகம் தணிந்தது' என்ற உணர்ச்சி ஓவியத்தில்.

ஜெயலக்ஷ்மி ஸ்ரீநிவாசன் ஒரு அழகிய கன்னடக் கதையையும், எச். விஜயகுமார் ஒரு மராத்திக் கதையையும் இனிய எளிய நடையில் தமிழாக்கித் தந்திருக்கிறார்கள்.

உடன் பிறந்த சகோதரிகள் என்றாலும், காதற் பொறாமை ஏற்பட்டுவிட்டால் அதன் விளைவு கொடூரமாய்த்தான் இருக்கும் என்பதை 'ஸ்கந்த'னின் 'பிரதிக்ஞை' தெளிவாக்குகிறது.

இளம் எழுத்தாளர் ஸி. பி. பொன்னுசாமி தமது 'கண்கள்' வாயிலாக, கண்கள் இழந்த ஒரு காதலனின் பிரிவாற்றாமையையும், பிரார்த்தனையையும் தமது வார்த்தை வர்ண ஜாலங்களால் நமது உள்ளத்திலும் எதிரொலிக்கச் செய்கிறார்.

படித்துச் சுவைக்க இன்னும் பல விஷயங்கள் இடம் பெற்றிருப்பதை உள்ளே காணலாம்.

— ஆசிரியர்.

197238

குணச் சித்திரம்:

மணமகளுக்கு...

[ப. தனுஷ்கோடி]

"உப்புயானை தந்தால் பருப்பு யானை தருகிறாயா? பருப்பு யானை தந்தால் உப்பு யானை தருகிறாயா" என்று உன்னைப்பார்த்து இப்போது நான் கேட்கப்போவதில்லை. தொன்று தொட்டு வந்த பழைய சம்பிரதாயம் அது! இப்படி ஒருவிளையாட்டுச் சடங்கு ஏற்படுத்தி யிருப்பதில் என்ன அர்த்தம் இருக்கிறதோ அதை என்னால் ஊகிக்கக் கூட முடியவில்லை. ஆனால் ஒன்று! சாஸ்திர சட்ட திட்டங்களில் பழகி ஊறிப்போன சமூகத்தில் பிறந்து வளர்ந்த உனக்கு அது பிடித்தமானதாக இருக்கலாம். ஆயினும் அதனால் நீ அடையப்போகும் நன்மைகளை விட, என் வார்த்தைகள் தீமையளித்து விடாது. மாறி மாறிச் சென்று கொண்டிருக்கும் இன்றைய உலகிலே பாரதப்பெண் பகுத்தறிவற்றவளாக இருந்து விடக்கூடாது. அதற்காகவே இப்புனித வேளையில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். அதன் மூலம், மூடப்பழக்க வழக்கங்களினால் விளையும் மூர்க்கத்தனம் குறைந்து அமைதி நிலவும் என்று நம்புகிறேன். ஆகவே, நான் கூறப்போகும் விஷயங்களைக் கண்டு ஆச்சரியப்படாதே! ஆயாசப்படாதே!

பசுமை மாறாத இளம் பயிர் போன்றது உன் இன்றைய பருவம். கன்னியின் பூரிப்பில் 'இன்னது' என்று அறியாத ஒரு காதலனை எண்ணி ஆவல் கொண்டுள்ளது நின் உள்ளம். தத்தி விளையாடிய பாலப் பருவத்தில் நிகழ்ந்த பொம்மைக் கலியாண ஞாபகங்கள் சதா உன்னை வட்ட மிட்டுக் கொண்டிருக்கும். எண்ண முடியாத சிந்தனைகள் உன் சித்தத்தில் ஊறியவாறே உள்ளன. மலர்ந்த மலர். இந்த மலருக்கு உரிய மன்னவன் யாரோ?

இந்நிலையில் தான் யார் யாரோ வந்து போயிருப்பார் உன்னைக் காண! கதைகளில் கூறினால்தான் எதிர்ப்பவரும், ஏளனம் செய்பவரும் இருப்பர். ஆனால் இன்றைய சமூகத்தில் நடைபெறுவது "பெண் பார்த்தல்" என்ற கண்ணாமூச்சிதான்! இந்த சிலநிமிஷ சந்திப்பின், கடைக்கண் பார்வையிலே ஒருவரை யொருவர் புரிந்து கொள்ள வேண்டிய 'கடும் விஷப் பரீட்சை' நெடுநாளாகவே நடைபெற்று வருகிறது. இதில் பிடித்தம் ஏற்பட்டால்தானாச்சு; இல்லையேல் பெற்றோர் முயற்சி வீண்! ஒன்றுமறியாப் பச்சை உள்ளங்கள் எதிர்காலத்தின் உயர்ந்த மாளிகைக்கு, கண்களாலேயே அஸ்திவாரமிடும் பெரும் பொறுப்பை ஏற்கின்றன பாவம்! சுமை தாங்காத கடமை! சிறிது முனை தவறினாலும் வாழ்க்கையே பாழ்பட்டுவிடும்!

சுயம் வரத்திற்கு முன் ஒருவர் பெருமையை மற்றவருக்கு எடுத்துக் கூறுவதுபோல், பெற்ரேர், உற்ரேர் மூலம் முன்னதாக அறிந்து கொள்ள முடியாதா என வினவலாம். முடியும், ஆனல் திரைமறைவில் நடக்கும் அது எந்தப்பாணியில் இன்று பண்பட்டு நிற்கிறது? இன்றைய போக்கில் உண்மையை உணர முடியுமா? முடிகிறதா? இல்லை என்றுதான் கூறவேண்டியிருக்கிறது. சுற்றுப்புறத்தின் நிலையைக் கவனிப்போம். "பெண்ணைப் பழிக்காதே!" என்ற மூதுரையை எல்லோரும்தான் கடை பிடிக்கிருர்கள். கருப்பு சிவப்பு என்பதைத் தவிர வேறு எந்தக் குறைநிசயங்களைப் பற்றிப் பேசுகிருர்கள்? மாறு கண்ணு? சப்பைமூக்கா? குண்டு முக்மா? நீளப்போக்கா? இதெல்லாம் கூட யாருக்கும் குறிப்பிடத் தகுந்தவைகளாக எண்ணப்படுவதில்லை "இருந்தால் என்ன? நல்லபெண்!" என்ற பொது அபிப்பிராயம்தான் தனிதுவேஷமற்ற சகலரிடமும் வரும் பேச்சு! ஆணைப்பற்றியும் அப்படித்தான். "கல்யாணமே ஆக மாட்டேன் என்கிறது; அவனைப் பற்றி தாழ்வாகப்பேசிக் கெடுப்பது பாபமல்லவா?" என்றும் சமூகம் கூறுகிறது. இவ்வளவு விசால மனப்பான்மை இருந்தும், நன்ருகப் பொருந்தி நிச்சயிக்கப்பட்ட விவாகம் தாலி கட்டப் போகும் தருவாயில் தடை பட்டுப்போவதை அறிவேன், "ஆயிரங் காலத்துப் பயிர்!" என்று திருமணத்தை எந்த வாய் வாழ்த்துகின்றதோ, அதே இனத்தில் கெடுப்போரும் உண்டு என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். நான் சொல்ல வந்தது என்னவென்ருல் பெண்ணின் மனோபாவத்திற்கேற்ற மாப்பிள்ளையையும், பிள்ளையின் தன்மைக் கேற்படி மணப்பெண்ணையும் பொறுக்குவதில், சமுதாயவாதிகளும் சரி மற்றவர்களும் சரி, கவனம் செலுத்துவதில்லை என்பதுதான்!

ஆக, "எல்லாம் கலியாணமானல் போகப் போக சரியாகி விடும்!" என்ற ஆதாரமற்ற நம்பிக்கையில், தங்கள் தங்கள் விருப்பத்தை இடையே இருப்பவர்கள் நிறைவேற்றிக் கொள்ளுகிருர்கள். தாம்பத்யப் பிணைப்பு எற்பட்டு நெருங்கிப் பழகும்போதுதான் ஒருவரை யொருவர் அறிய முடிகிறது.

"வேறு எதையும் கவனிக்க முடியவில்லை. பிள்ளையாண்டானுக்குப் பெண் பிடித்திருந்தால் போதும்!" என்று சிலர் நாகரீகமாகப் பேசுவார்கள். ஆனல் இதை முற்றிலும் உண்மை என்று நம்ப நான் தயாராயில்லை. எனெனில் இல்லறத்தை நல்லறமாக ஆக்கி நடத்திச் செல்வதில் பெரும் பங்கு பெண்பாலுக்குத்தான் உண்டு! கண்ணுக் கேற்ற கணவனையடையக் காரிகை கண்கலங்கிடில் திக்கேது? அதனல்தான் ஆணுக்கு வழிகாட்டிய ஔவை, பெண்ணுக்குப் பாதை காட்ட முடியாமல், அவளைப் படைத்து மூர்க்கனுக்கு வாழ்க்கைப்படுத்திய பிரம்மனையே சபித்தாள்! அதனல்தான் சொல்கிறேன்.

மணமுடிவிற்குமுன் மங்கையின் மனேநிலையைத் திடமாக அறிந்து கொள்ள வேண்டும். அன்பு, பக்தி, ஆசை, உள்ளபெண்ணுனல் எப்படிப்பட்ட முரட்டுக் கணவனயினும் தன் வழிப்படுத்தலாம். இந்தக் குணங்கள் மாப்பிள்ளையை வரித்த நிமிஷத்தில் எந்தப் பெண்ணின் இதயத்தில்

ஒலிக்கிறதோ, அவளே பாக்கிய சாலி! தொட்டிற் பழக்கம், சுடு காடுமட்டும் என்பது போல் மாங்கல்யம் கழுத்தில் ஏறுவதற்கு முன், உண்மையாக உள்ளத்தின் ஆழத்தில் அந்த நேச உணர்ச்சி, பிரதிக்ஞையாக ஒலிக்குமாயின் பெண்ணே!...... உனக்கும் சரி, உன்கரம் பற்றும் மணவாளனுக்கும் சரி; இந்த இகத்தில் எக்காலும் குறையில்லை! இல்லவே யில்லை!!

சரி; இப்போது நீ மணப்பெண்! உன்னுடன் அமர்ந்திருப்பது, ஹோமத்தில் எரிந்த அக்கினி சாட்சியாக, இனி உன் கணவர். எந்த ஆதாரம் காட்டியும் அவரைவிட்டு நீ பிரிய முடியாது; பிரியக்கூடாது. அவர் இனி நாடோடியல்ல; லட்சிய புருஷர்! கடமையை நாடுபவர். வாழ்வில் கருத்தும், பிடிப்பும் ஏற்பட்டுவிட்டது! நீ கட்டுப்பெட்டியாக இருந்தால் அவருக்கு கவலை கொடுக்கலாம்! நீ கர்நாடகமாக இருந்தால் அவருக்குக் கால் விலங்காக தொல்லைகொடுக்கலாம். நீ மூர்க்கத்தனமாக நடந்தால், (மண) வினை அவரைத் தொடும்! சந்தோஷமாக இருக்காது. வாழ்வின் பாதை உன் திறனில்--புத்திசாலித் தனத்தில் இருக்கிறது. கணவனைக் களிப்பித்து நீயும் சுகம் பெறுதல் உயரிய கலை. அது உன் சொந்த விஷயம்; இஷ்டப்படி வளர்க்கலாம்.

இதோ, கவனி! தூரத்திலே பிள்ளை வீட்டார், ஏதோ "குசு குசு" என்கிறார்களே, காதில் விழுகிறதா? ஆமாம்; வைரத் தோடு போடுவதாக உன் அப்பா சொன்னாராம்! வெறும் தோடுதானிருக்கலாம்; புடவையும் மட்டமானதாயிருக்கிறதாம்! மாப்பிள்ளையை இரகசியமாகக் கூப்பிடுகிறார்கள். ....என்ன நடக்குமோ?

பார்ப்பன ஜாதியில்தான் இந்தக் கொடுமை என்றிருந்தேன். பெண் வீட்டுச் சொத்திலிருந்து பிழைப்பை நடத்துவது என்ற பெரும் பைத்தியக்கார முடிவு பல சமூகத்தினரிடையேயும் காணப்படுகிறது. வைத்து சம்ரட்சணை செய்யத் துப்பில்லாதவன் பெண்ணை ஏன் வரிக்க வேண்டும்? அன்பாகப் பழகி, அன்பாக வளர்ந்து, அன்பாகக் கனிய வேண்டிய உறவை, பணம் என்பதற்காக ஒரு நொடியில் பாழ்படுத்திக் கொள்கிறார்கள். சீர் முதலியவைகளை "மெள்ள பெண்ணைப் பேசவைத்தே எவ்வளவு முடியுமோ அவ்வளவையும் கறந்துவிட வேண்டும்!" என்ற உபதேசம், வயது முதிர்ந்தவர்களிடம்கூட அடிபடுவதைக் கண்டு ஆச்சரியப் படுகிறேன். ஏன் இந்தப் பலஹீனம்? எதற்காக இவ்வளவு பேராசை? பாவம் புருஷன் பக்கம் திரும்பினால் அடி! அப்பாவிடம் முகத்தைக் காட்டினால் சிடுசிடுப்பு! இப்படி அல்லல்படும் அபலைச்சிறுமிகளை அறிவேன். இருதரப்பிற்கும் தூது செல்லும் வியாபாரப்பொருளா பெண்? அவளிடம் இரக்கம் காட்டுபவர் யார்? போடும் நகைகளையெல்லாம் பறித்துக்கொண்டு, மேலும் மேலும் பறிக்க முயலும் கல் நெஞ்சக் கயவர்களையும் கண்டு பிடிக்கிறேன். ஒருவர்க் கொருவர் உறவு முறையில் உதவி புரிவதால் வரும் விபரீதங்கள் இவை. குடும்ப ஒற்றுமையையும், சமூக வளர்ச்சியையும் பாதிக்கும் பகுத்தறிவற்ற நடத்தைகள் இவை. இதைத் தொடர்ந்த பேச்சுகளே முற்றி ஜன்ம விரோதி களாக்கி விடுகின்றன.

நான் பெண்ணல்ல! ஆண்களிடையே பேசப் படுவதுதான் எனக்குத் தெரியும். உன் சகாக்களும், பெரியமனுஷிகளும், பாட்

டிகளும், உன்னிடம் இப்படிப் பலபல தூண்டி விடக் கூடும். புருஷனை இப்படி வாட்டு; அப்படி இழு; இன்னமாதிரி திருப்பு; அந்தமாதிரி செய்தால்தான் உன் வழிக்கு வருவார்.........என்றெல்லாம் போதிப்பார்கள். அதை நீ நம்பப் போகிறாயா? ஏற்றுக் கொள்ளப் போகிறாயா? ஆம், என்றால் நிச்சயம் உன்சமூக வாழ்விற்கு நீயே குழி தோண்டிக் கொண்டாய் என்று சத்தியம் செய்வேன். நியாயமாகப் புருஷனிடம் பெற விரும்புவதை, பரிசுத்தமான உன்சேவை ஒன்றினால் தான் பெற முடியும். களங்கமற்ற அன்பும், சுயநலமற்ற பாசமும்தான் நேசத்தை இறுகப் பிணைக்கும் வலிமையுள்ளது. நேரடியான பாதையை விட்டு, குறுக்கு வழிநாடி, "அதைக் கொடுப்பதாக வாக்களித்தால் தான் இதைச் செய்வேன்" என்பது போல் கூறி காரியம் சாதிக்க முயன்றால், சங்கடமே ஏற்படும். "மனிதனுக்கு நிபந்தனையுடன் காரியம் செய்வதிலுள்ள அவமானம் போல் வேறு எதிலும் ஏற்படுவதில்லை" என்று மேனாட்டுப் பழமொழி ஒன்று கூறுகிறது. கவனம் வைத்துக்கொள்!

வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்வது, பத்துப் பாத்திரங்களை ஒழுங்காக அமைத்துக் கொள்வது சமையல் சாமான்களை சேகரித்துக் கொள்வது, முதலியவற்றில் எப்போதுமே புருஷர்களுக்கு அவ்வளவு சிரத்தை இருப்பதில்லை. சமயத்தில் நெருக்கடி ஏற்படும் போதுதான், "இது என் இல்லை? இதைஏன் முன்பே சொல்லக் கூடாது?......" என்றெல்லாம் கர்ஜிப்பார்கள். ஆனால் இல்லற ஒழுக்கம் அறிந்த பெண் இதைக்கண்டு ஆவேசம் கொள்வதில்லை. அவளின் நுட்பமான மதி அப்போது தான் சரியானபடி வேலை செய்யும். வசதிகளை, எப்படியோ திருப்திகரம் செய்துவிட்டு, தக்க சமயத்தில் தெரிவித்து ஒழுங்கு படுத்திக் கொள்வாள். தாறு மாறாகப்பேசி புருஷனின் பிரியத்தை நாசப் படுத்திக்கொள்ளமாட்டாள். இம்மாதிரி சில அசந்தர்ப்பமான சமயங்களில் ஆணுக்கு அகங்காரம் தோன்றி விடுகிறது என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் அது இல்லாத ஆடவனை பெண்கள், "மகா கோழை" என்றல்லவா முடிவு கட்டி விடுகின்றார்கள்?

இன்னும் நிதானமாக நினைத்துப்பார்! கல்யாண மானவுடன் "அடிமை" என்று உன்னையே நீ எண்ணிக் கொள்கிறாய். கழுத்தில் விழுந்த தாலி அடிமைச் சின்னம் என்று கருதுகிறாய். அர்த்தமற்று தாழ்மையை ஏற்றுக் கொள்ளும் உன் உணர்ச்சி பல விபரீதச் செயல்களைக் கிளறி விடுகிறது. அதன் பலனாக எத்தனையோ துன்பங்கள் உன்னைத் தொடருகின்றன. அடிமை என்பது இழிவான பட்டம்தான்! ஆனால் உனக்கு ஒரு பாரசீகப் பழமொழியை ஞாபகப் படுத்தட்டுமா? "நூறு அசடுகளுக்கு ராஜாவாக இருப்பதைவிட, ஒரு அறிவாளிக்கு தாசனாக இருப்பதில், ஆனந்தம் உண்டு!" என்று அது கூறுகிறது. அதன் பொருள் மிகத் தெளிவானது. புருஷனையும், அவனைச் சேர்ந்தவர்களையும் முட்டாள்களாக்கி வீட்டின் சர்வாதிகாரியாய் விளங்கவேண்டும் என்று மனப்பால் குடிப்பதில் ஒருநாளும் அமைதி காண முடியாது. அதிலும், கணவனைக் கேவலமாக கட்டிய பெண்டாட்டியே அவ்வாறு செய்வதால் வரும் தீமை, பெண் ஜன்மத்திற்கு வேறு எதி

னும் இல்லை. புருஷன் பேடி, பதி சோம்பேறி, என்ற எண்ணம் எந்தக் குலவதி யிடம் இருப்பினும் அவள் வாழ்வில் இன்பம் காணமுடியாது. ஆத்திர புத்தியால் அலட்சியம் செய்து பேசுவது தற்காலிக சாந்தியாகத் தோன்றலாம். ஆனால் ஒரு தொல்லை போனால் மற்றொன்று; ஒருசனி விலகினால் இன்னொன்று, என்று மாறிமாறித் தொடர்ந்தே வரும். அதைவிட கணவனின் சிறந்த குணங்களைக் கிரகித்து, அதைப் பண்படுத்தி, நாலு பேரிடம் பேசும்போது அவைகளைப்பற்றி மட்டும் பேசுவதால், பதியை மேன்மைப் படுத்துகிறாய்; உடன் நீயும் உயர்வடைகிறாய்!

இதிலும் கூட உன் பெருந் தன்மையை மறந்து விடக்கூடாது. அனேகம் பெண்களைக் கண்டிருக்கிறேன். வீட்டுக்காரர் தனக்குட்பட்டவர் என்று பெருமையுடன் காட்டிக் கொள்ள, புருஷனை, "அது; இது" என்று ஜடப்பொருளாக்கி விடுகின்றனர். சிலர் நேரிடையாகப் பேசும் போதுகூட, "உனக்கு; நீ வந்து..." போன்ற ஒருமை வார்த்தைகளை உபயோகிக்கின்றனர். இது பெண்ணின் மட்டமான அறிவையே வெளிப்படுத்துகிறது. தவிர, வெளியுலகில் எத்தனையோ பெயர்களுடன் போகையில்கூட, "வாருங்கள்! நீங்கள்" போன்ற இனிய மரியாதை வார்த்தைகளுடன் பழகும் ஆடவனுக்கு, வீட்டில் தன் சொந்த மனைவி மரியாதையின்றி அழைப்பது மகா அருவருப்பாகவே தோன்றும். என்னதான் சதி என்ற பாத்தியதை கொண்டாடினாலும், பதி என்ற கௌரவம், அளிப்பதில் அவமானம் நேர்ந்துவிடும் என்று பகுத்தறிவுள்ள எந்த நாகரீக யுவதியும் கூறாள்.

மரியாதையான பேச்சு; உயரிய சிந்தனை, இவைகளல்லவா உண்மை பாரத புத்திரிக்கு அழகு?

உலகம் அறியாத கணவனாக இருந்தால் மணம் செய்து கொண்ட மறுகணமே அடிமை என்று துன்புறுத்த முயல்கிறானே, என்று கூறலாம். உண்மை; அடிமை என்ற சொல் கட்டாயவேலை பெறுவதற்கே தகும். ஆனால் அந்தநிலையை நீயே ஏன் உண்டாக்கிக் கொள்ளுகிறாய்? பார்க்கப் போனால் அப்படிப்பட்டவனிடம் தான் உன்திறமை சுலபத்தில் நிறைவேறும். அவன் உன்னை அடிமையாக நினைத்து ஏவல் செய்யுமுன் அக்காரியத்தை நிறைவேற்றி விடுவதில் உன் அடிமைத்தனத்திற்கு எங்கே இடம் இருக்கிறது? அவன் அதிகாரத்திற்குத் தான் எங்கே இடம் ஏற்படப் போகிறது?

'குறிப்பறிந்து நடப்பதில் பெண்கள் முதல் ஸ்தானம் வகிக்கும் இடங்களில்தான் வாழ்க்கை அமைதியுடன் நடைபெறும்!' என்று வேத, புராண, இதிகாச நீதிகள் எடுத்தோதுகின்றன. கணவன் எதை எதை விரும்புகிறான் என்பதை யூகிக்க ஒரு மனைவிக்கு எத்தனைகாலம் பழகவேண்டியிருக்கும்? ஒவ்வொரு காரியத்திற்கும் நூறுதரம் ஓயாது கத்தி புருஷன் சலிப்படைந்தபின் அதைச் செய்வது விவேகமாகுமா? உண்மையில் பதியின் தேவைகளைக் கவனிப்பதுதானே நல்ல சதியின் பொறுப்பு? அதற்காகத்தானே, "வாழ்க்கைத் துணைவி" என்று குறிப்பிடுகிறார்கள்? மனைவி துணைவியாக நடந்து கொண்டால் "மனைராணி" யாக விளங்க முடியும். இன்னும்கூட கிராமாந்திரங்களில் "பண்ணைக்காரர்" சம்சாரம், "பண்ணைக்

காரி" "பண்ணுடி" என்ற பட்டத்துடன் மதிக்கப் படுவதைக் காணலாம். எஜமான் மனைவி எஜமானி தான்! இந்நிலையில் அடிமை என்ற அவச்சொல் எங்கே வந்தது? எப்படி வரும்?

பிறரை மதித்து மரியாதையாக எண்ண வேண்டும் என்பதைப் பற்றிக் கூறினேன். அதே போல் உன்பெருமை, சிறுமைகளைப்பற்றியும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். புகழ்ச்சியைக் கேட்டு பூரிப்பதும், இகழ்ச்சி கேட்டு சீறுவதும், முன்னேற்றத்தின் அறிகுறிகளல்ல. கற்றறிந்த புத்திசாலிப் பெண் அவ்வளவு துரிதமாக தன் உணர்ச்சிகளைக் காட்டிக் கொள்ள மாட்டாள். உண்மையில் பெண்ணின் உயர்வே, விருப்பு-வெறுப்பற்ற புனிதமான தன்மையில்தான் உள்ளது. தற்பெருமையாய், தன்னைச் சார்ந்தவர் என்ன தவறிழைத்தாலும் ஏற்காத மௌடீகமும், வாழ்வில் தலைகுப்புற வீழ்த்திவிடும். சொல்லப் போனால், பெண் புருஷன் வீட்டில் பிறந்தக சேர்த்திகளைப் பற்றி கூடியவரை பேசாமலிருப்பதே உசிதமானது. மனைவியாகச் சென்றுவிட்ட உனக்கு, புருஷனின் நல்லெண்ணத்தை பெற்றால் போதுமானது. உன்னைச் சார்ந்தவர்களும் சிறந்த மனிதர்களாகி விடுவார்கள். நீ நல்ல பெண்ணாகவேண்டுமென்றால் உன் உள்ளம் மற்றவரின் உள் இருதயத்தைக் கவ்வ வேண்டும். உனக்கு மாமியார் இருக்கலாம்; உன் செல்வாக்கைத் தட்டிப் பறிக்க நாத்தனார் இருக்கலாம்; உன் உடைமையில் பங்கு போட ஓர்ப்படி இருக்கலாம்; எல்லோரிடமும் உன் நலத்தைத் தியாகம் செய்து விடு! அவர்கள் விருப்பத்தைவிட உன் சுகம் பெரிதென்று போரிடாதே! உன் வழி, உன் போக்கு, உன் தேவை, மற்றவர்களைப் பாதிக்காமல் பார்த்துக் கொள். உன் கடமை பெரிது. புனிதமானது. மேன்மை பெறத் தக்கது. நீ போற்றத் தக்கவளாக நடந்து கொள்வது உன் பொறுப்பு.

"குலப் பெருமையைப் பேசிப் பேசி காலங் கடத்துவதிலேயே பாரதப் பெண் குட்டிச் சுவராகிறாள்!" என்று தமிழ்ப் புலவர் ஒருவர் நொந்து கொள்கிறார். "பெண்கள் என்றால் வாயாடி வம்பர்கள்" என்ற கருத்து நிலைத்து விட்டது. எதையும் சுருங்கச் செய்யும் ஆற்றல்-ஆர்வம் அவர்களிடம் இருப்பதில்லை. விழித்தெழுந்த காலப் போக்குடன், ஒன்றியமைந்த உள்ளம் இல்லை; அரட்டை யடித்துக் காலத்தை வீணாக்கும் நூறு சினேகிதிகளைவிட, முன்னேற்றகரமான நல்ல காரியங்களைச் சிந்திக்கும் நாலு நல்ல தோழிகளின் நட்பு ஆயிரம் யானை பலம் கொடுக்கும். இதற்காக எல்லோரையும் விரோதித்துக் கொள்ளும்படி கூறவில்லை. எல்லோரிடமும் நம் குறையை விளம்பரப்படுத்திக் கொள்ள வேண்டும்; எல்லோரும் நம்மை நேர்மையாக நடந்தவள் என்று அனுதாபப்பட வேண்டும்; அப்போதுதான் நமது மனம் நிம்மதியடையும்!" என்று எண்ணும் பெண், உண்மையில் ஆழ்மான மடுவின் சுழலில் அகப்பட்டுத் தத்தளிக்கும் நிலை தான் அடைகிறாள். தொன்றுதொட்டு வந்த வர்க்க வியாதி இது! இக்காலத்திலும் கூட இது களையப் படவில்லையேல், எக்காலத்திலும் மாதர் முன்னேற்றம் என்பதே சாத்தியமில்லை. அண்டை, அயல் வீட்டுக்காரிகள் அனைவரும் நட்பினர்கள் தான்! ஆனால் அவர்களி

ளும் உத்தம குணம் படைத்தவர்களைக் கண்டுபிடிப்பது சிரமமல்ல. அத்தகைய அந்தரங்க சுத்தியுள்ள நட்பே போதும் என்று பெண் மனம் திருப்தியுற வேண்டும். அதுவே வாழும் வழி. பொழுது போக்கிற்காக பேச்சைக் காட்டிலும் தனியே அமர்ந்து சிந்தனை செய்வதில் சிரத்தை காட்டுவது சிறந்த நன்மை தரும். அன்றாடம் நடைபெற்ற நிகழ்ச்சிகள், அவைகளிலுள்ள நன்மை தீமைகள், தவறுகள், வழிகள் முதலியவற்றை ஆர, அமர, யோசித்து முடிவிற்கு வருவதில், எதிர்காலத்தில் எவ்வளவோ நன்மையுண்டு. பெண் முன்னேற என்ன வழி என்று கேட்டால், "மனக் கோட்டை கட்டுங்கள்!" என்று சுருக்கமாகக் கூறலாம். ஆம்; அது இனியது. போட்டி, பொறாமையற்றது. மனம் கனவை எண்ணுவது, தினம் நடக்க வேண்டும். அதிலும் நம் குலப் பெண்களுக்கு கனவு காணும் சக்தி வளர வேண்டும். ஒரு விஷயத்தைப் பற்றி ஆண்கள் சிந்திக்கும் அளவு பெண்கள் யோசிப்பதே இல்லை. இதனால் பெண் பலஹீனமடைகிறாள். "பெண் புத்தி பின் புத்தி" என்பதும் இதனால்தான் வந்தது. நுனிப்புல் மேயும் காரியமாக சடுதியில் எந்த விஷயத்தையும் முடிவு கட்டிக் கூறிவிடுகிறார்கள். பின் அது தவறா என்று எண்ணிப் பார்க்கக்கூட கூசுகிறார்கள். இந்தக் கொள்கை மகா மோசமானது. பெண்கள் இவ் விஷயத்தில் மாறுதலடைய வேண்டும். இல்லாவிடில் மனைவி மந்திரிக்குச் சமானம் என்பதில் அர்த்தமேயில்லாமற் போய் விடும். மேலும் இன்பகரமான எண்ணங்களை மனதிலே வருவித்துக் கொண்டு ஆனந்தமடைவதைவிட சிறந்த சுகம் உலகில் என்ன இருக்கிறது? இயற்கைக் காட்சிகள், இலக்கிய ரசனைகள், எதிர்கால வாழ்க்கை லட்சியங்கள், நிலா முற்றம்...... இப்படி எத்தனையோ விஷயங்களில் மனதை ஓட்டலாம்! இதில் பண்பட்டு தேர்ச்சியடைந்த பெண்ணின் பெருமைக்கு ஈடேது? இணையேது? மானிடப் பெண் காந்தர்வ கன்னிகையாக அல்லவா மலர்ந்து விடுவாள்!

மங்களகரமான இச்சுப வேளையில் எதையெல்லாமோ இழுத்துப் போட்டுக் கூறியிருக்கிறேன். ஆனாலும் வாழ்க்கை இத்துடன் அடங்கி விடவில்லை. இன்னும் எவ்வளவோ இருக்கும். மாங்கல்யம் தரிக்கும் தருணத்தில் பெண்ணின் இருதயம் பரிசுத்த நிலையில் — ஆசாபாசங்களற்று இருக்கும் என்று கூறுகிறார்கள். உள்ளத்திலே சலனமற்ற வேளையில் சில உண்மைகளைக் கூறினால் என் ஆசி பயனுள்ளதாகப் பதியும் என்று இச்சமயம் இவற்றைக் கூறினேன். உன் நன்மை — உன் கணவரின் நன்மை — உன் நாட்டு நன்மை — உன் சமூக நன்மை, யாவும் ஒன்றுடன் ஒன்று பிணைப்பட்டுள்ளன. ஒழுக்கம் உயிரினும் சிறந்தது. உன் வாழ்வு நல்வாழ்வாகுக! நல்லாசிகள்!!

புத்தக ஆராய்ச்சி

சினிமா நக்ஷத்திரங்கள்:

(மின்னல் 2)

ஆசிரியர்: எஸ். எம். சந்தானம்; கிடைக்குமிடம் 6, தட்டான் குளத்து சந்து, வண்ணாரப் பேட்டை, சென்னை; விலை: அணா: 0—8—0.

முதல் மின்னலில் தலை காட்டாத எழு சினிமா நடிகர்களை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தி அவர்களது திரையுலகக் குறிப்புகளை சுவைபடச் சொல்கிறார் ஆசிரியர், கொஞ்சம் முன்னேற்றத்துடன் வெளிவந்திருக்கும் இந்த இரண்டாவது மின்னலில்.

ஆனந்த விகடன் தீபாவளி மலர் (1945)

மலர் என்ற பெயருக்கு முற்றிலும் தகுதியுடையதாய் முழுவதும் ஆர்ட் காகிதத்தில் கண்ணையும் கருத்தையும் கவரும் ஏராளமான படங்களுடன் வந்திருக்கிறது இவ்வருஷ 'விகடன்' மலர். ஸர். ஸி. பி. ராமசாமி அய்யர், ஸர். ஸி. வி. ராமன், திரு. வி. க. முதலியவர்களின் அரிய விஷய தானங்களும், வழக்கமான எழுத்துலகப் பிரமுகர்களின் கதை, கட்டுரை, கவிதைகளும் ஒன்று சேர்ந்து வாசகர்களைத் திணறஅடிக்கின்றன.

சிலப்பதிகாரத்தில் வரும் எட்டுவகைக் கூத்துகளை விளக்கும் 'அமர நாட்டிய'மும், இந்தியஉடை' ரகமும் அமோகமான பாராட்டுதலைப் பெறும் புதிய அம்சங்கள். இத்தனையும் நிறைந்த இந்த அற்புதமலரின் விலை ரூபாய் மூன்று தான் என்று நினைக்கும் போதே பொறாமை பொங்கியெழுந்தால், அதில் துளிகூட வியப்பில்லை.

திருமகள்: (மாதம் இருமுறை)

ஆசிரியர்: ராசி. சிதம்பரம்; காரியாலயம்: ராமச்சந்திரபுரம், புதுக்கோட்டை; விலை: ரூ 0—4—0.

இடையில் சிலகாலம் நின்றிருந்த திருமகள், தற்போது மீண்டும் புதுஉருவுடன் புதுமை பெற்று பத்திரிகைகளில் இருக்கவேண்டிய பல அம்சங்களையும் தாங்கி வெளிவர ஆரம்பித்திருக்கிறாள். திருமகள் இலக்கிய உலகுக்கு நல்ல தொண்டாற்றி பேரும் புகழும் பெறவேண்டும் என்பதே நமது ஆசை.

ஸ்தலத் தேவாரங்கள். தருமபுர ஆதீன வெளியீடு, தருமபுரம், மாயவரம்.

பாடல்பெற்ற சிவஸ்தலங்களுக்கு உரிய தேவாரப் பதிகங்களைத் திரட்டி, அவற்றை மாணவர்களும் எளிதில் மனனம் செய்யும் வகையில் அழகிய சிறு புத்தகங்களாக ஆதீனத்தார் வெளியிட்டுள்ளனர். முயற்சி பாராட்டத் தக்கது.

"குரங்கணித்தாயே! எப்படியாவது எம்புள்ளெயெக் காப்பாத்திடு; ஒனக்குஒரு கெடாவளத் துப்பலியிடுறேன். கருகப்பிலெ போல ஒரு கொளந்தையைத் தந்திட்டு நீயே புடிங்கிக்கிலாமா? என் ஆத்தா, நீதான் காப்பாத்தணும்."

ஒரு தாயின் சோகப் பிரார்த்தனை இது. அவளுக்கு எதிரே வாடித் துவண்ட கொடிபோல் ஆறு வயசுப் பெண் குழந்தை

பிரார்த்தனை பலித்தது

"சிவசக்தி"

ஒன்று சுருண்டு கிடந்தது. குழந்தையின் முகத்தில் சவக்களைதான் நிரம்பியிருந்தது இனிப்பிழைக்கும் என்பதற்குரிய எவ்வித அறிகுறியும் துளிக்கூட இல்லை. பெற்ற தாய் குலக் கொழுந்தாய் விளங்கும் ஒரே கண்மணியின் உயிருக்காக குரங்கணி முத்துமாலையம்மனை நோக்கி நெஞ்சம் வெதும்பி அரற்றிக் கூக்குரலிடுகிறாள்.

சிவகளை கிராமத்தில் மாடசாமிக்கோனர் ஒரு குறிப்பிடத்தகுந்த 'புள்ளி'. மனைவி பேச்சியம்மாளும் 'பர்த்தாவுக் கேற்ற பதிவிரதை' தான். என்னதான், தன தானியபோகம் இருந்தாலும், இன்பமழலைஅமுதத்தால் வீட்டை மகிழ்விக்க, ஒரு புத்திரபாக்கியம் வேண்டாமா? எல்லாக் கதாசிரியர்களும் வருணிப்பது போலவே நம் கதாநாயகரும், சந்தானக் குறையினல் பரிதவித்தார். ஒரு ஆண் குழந்தைக்காகத் தமது குல தெய்வமான முத்துமாலை அம்மனை நோக்கிக் 'கடுந்தவம்' புரிந்தார் பத்தினியுடன்

வெகுநாளைய தவத்திற்குப்பின் முத்துமாலையம்மனும், மனமிரங்கி ஒரு விலையிலா முத்தினை — குழந்தையை — அளித்தாள். ஆனல், அது பெண் குழந்தை, பின், பெண் தெய்வம் ஆணை அளிக்குமா?

குழந்தை முத்துமாலை ஆணுக்கு ஆணாய், பெண்ணுக்குப் பெண்ணாய், மிகச் செல்வமாக வளர்க்கப்பட்டாள். கோனர் அவளது தத்தைக் குரலில், கண்ணனின் குழலமுதம் அருந்தித் திளைப்பார். அவள்மேல் ஒரு துரும்பு படாமல் கண்ணும் கருத்துமாய்க் காத்து வந்தார். தம் வாழ்வைக் குளிர்விக்க வந்த தெய்வக் குழவி இந்த அற்ப ஆறுவது வயசிலேயே கொடிய காய்ச்சலில் விழுந்து, கோரக் கூற்றுவனுடன் போராட......அப்பப்பா! அவரால் துயரம் பொறுக்க முடியவில்லை. ஊரிலுள்ள தெய்வங்களுக்கெல்லாம் ஆயிரத்தெட்டு பிரார்த்தனைகள். ஆனல், எப்படியாவது, முத்துமாலை பிழைத்து எழவேண்டும். ஆம், அதுதான் — முத்துமாலைதான் — அவரது லட்சிய சிகரம்.

★

ஒரு சிறு அழகிய வெள்ளாட்டுக்குட்டியும் ஐந்துவயசு முத்துவும் தோட்டத்தில் 'கண்ணும்

பூச்சி' விளையாடுகின்றனர். முத்துவின் விளையாட்டுத் தோழன், தோழி எல்லாம் அந்த ஆட்டுக் குட்டிதான். அவளது மெல்லிய மிரண்ட சுபாவமும், குட்டியிடம் அப்படியே பிரதிபலித்தது. அதை விட்டு அரைக்கணமும் பிரிய மாட்டாள் — சாப்பிடும் போதும் தூங்கும் போதும் கூட, ஆட்டுக்குட்டியிடம் தன் உயிரையே வைத்திருந்தாள். கோனரும், பேச்சியும் அவளிடம் வைத்திருந்த பாசம் அனைத்தையும் அவள் தன் குட்டியிடம் அப்படியே திருப்பியிருந்தாள். அதனுடன் பேசுவாள்; இன்பக் கதைகளெல்லாம் எடுத்து இயம்புவாள்; பரம ரசிக சிகாமணியான ஸ்ரீமான் ஆட்டுக்குட்டி அவர்களும் அவள் பேசுவதை ஆமோதிக்கும் பாவனையில் தலையை ஆட்டுவார். அவளுக்கு உச்சி குளிர்ந்துவிடும். கட்டியணைத்துக் கன்னத்தில் முத்தமிட்டுக் கள் வெறி கொள்வாள்.

இப்படியே ஒன்றரை ஆண்டுகள் கழிந்தன. ஒரு நாள் முத்துவின் ஆடு நொண்டிக் கொண்டே 'ம்மே, ம்மே' என்று கதறித் துடித்துக்கொண்டு நடந்து வந்தது தன் தோழியை நோக்கி. 'ஆனா, ஆவன்னா, படித்துக் கொண்டிருந்த முத்து, அதை அப்படியே எறிந்துவிட்டு, முற்றத்துக்கு ஓடிவந்தாள். தன் அருமை ஆடு காலில் ரத்தம் களகளவென்று வடிய கண்களில் ரத்தக் கண்ணீர் சொரிய, தன் காலடியில் வந்து விழுவதைக் கண்டாள். 'ஆத்தா' என்று அண்டமே அதிரும்படி அலறினாள்.

அடுப்பில் ஏதோ கை சோலியாயிருந்த பேச்சி, உடனே ஓடி வந்து மகளைக் கட்டிக்கொண்டு என்ன வென்று விசாரித்ததில், முத்து ஆட்டின் காலைக் காட்டினாள். பேச்சியும் பதறிப்போய் தொழுவத்திலிருந்த கோனாரைக் கூட்டிக்கொண்டு வந்து காண்பித்தாள். கோனருக்குக் கோபம் மூக்குக்கு மேல் தெறித்துக் கொண்டிருந்தது. "கழுதைப் பயல், எந்தக் காவாலிநாய் கல் லெறிஞ்சு இந்த ஆட்டை நொண்டியாக்கினான்? அவன் பல்லை ஒடெச்சு...ம்..." என்று உறுமிக் கொண்டே தெருவுக்கு வந்தார்.

தெருவில் ஒரு பையன் வாரினால் செய்த கவண் ஒன்றை வைத்துக் கொண்டு பக்கத்துள்ள மரங்களிலிருந்த பட்சிகளின்மீதும், போகிற வருகிற நாய்களின்மீதும் கல்லை எறிந்து கொண்டிருந்தான். ஒரு கல் எப்படியோ தவறிப் போய் ஆட்டின் காலில் பட்டு விட்டது. வந்தார் கோனார். பையனைப் பிடித்து 'நறுக்'கென்று தலையில் 'ஒன்று' கொடுத்தார்.

"ஆமா ஐயா, அப்படித்தான்' நல்லாவேணும். பின் ஏன், என் ஆட்டை மட்டும் கல்லெக் கொண்டு எறியலாமோ?" என்று முத்து உற்சாகத்தில் துள்ளிக் குதித்தாள். தன் 'தோழனை'த் தொட்டவன் தகுந்த தண்டனை யடைந்தான் என்பதில்தான் அவளுக்கு என்ன மகிழ்ச்சி! சாந்தி! 'எப்பப் பார்த்தாலும் இந்த ஆட்டெக் கட்டிக்கிட்டே அழுதியெ' என்று அங்கலாய்த்த ஐயாவுக்கும், ஆத்தாவுக்கும்கூட நம் ஆடு அடிபட்டவுடன் எவ்வளவு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது என்பதை எண்ண எண்ண முத்துவுக்கு மகிழ்ச்சி எல்லையில்லாமல் பொங்கித் ததும்பியது. "நல்ல ஐயா! நல்ல ஆத்தா!" என்று குழந்தை இதயம் அவர்களை வாழ்த்தியது.

கோனருக்கோ, ஆடு ஊனமில்லாமல் இருக்க வேணுமே; ஆனி மாதத்திற்கெல்லாம் இன்னும் இருபது நாட்கள் தானே இருக்கிறது; அதற்குள் ஆட்டின் காயம் பூரண குணம் அடைய வேணுமே என்ற கவலையில் வேலை ஒன்றும் ஓடவில்லை அதன் காயத்தைக் குணப் படுத்தும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டார். வழக்கத்திற்கு விரோதமாக, தன் ஐயா ஆட்டை ரொம்ப அக்கரையாய்க் கவனிப்பதைப் பார்த்த

முத்து 'ஐயாவுக்கு நல்லபுத்தி வந்து விட்டது; இனிமேல் ஐயாவும் தன்னைப்போல் அதனுடன் விளையாடுவார். கொஞ்சுவார்' என்று இன்பக் கனவுகளில் லயித்திருந்தாள்.

★

ஆனி பிறந்து விட்டது.

இன்னும் மூன்று நாட்கள் தான் குரங்கணியம்மன் கொடைக்கு. வீட்டில் கொடைக்குப் புறப்பட ஆயத்தங்கள் பலமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஒரு பெரிய வில் வண்டியிலே கோனார் குடும்ப சகிதம் — வெள்ளாடும் கூடத்தான் — குரங்கணிக்குப் புறப்பட்டுப் போனார்.

குரங்கணி, திருநெல்வேலி ஜில்லாவிலே ஒரு பிரசித்திபெற்ற ஸ்தலம். அந்தப் பக்கத்து மக்கள் தங்கள் ஊரைப்பற்றி, 'சீதாபிராட்டியாரை இராவணன் தூக்கிக் கொண்டு போகையிலே, அவள் கழற்றி யெறிந்த பல நகைகளில் ஒரு முத்துமாலை இங்குவிழ, ஒரு குரங்கு அந்த அணியை எடுத்து, சீதையைத் தேடிவந்த இராமபிரானிடம் கொடுத்தது. ஆகவே ஊருக்குக் குரங்கணியென்றும், முத்துமாலை விழுந்த ஸ்தலமாதலின் அம்மனுக்கு முத்துமாலையம்மன் என்றும் பெயர் வந்தது' என்று கதை சொல்வார்கள்.

ஊர் சிறு காடுதான். ஆனால், ஆனி மாதந்தோறும், ஆயிரக்கணக்கான பக்த மணிகளுக்கு முத்துமாலை, வேண்டும் வரம் அளித்து வந்தாள். ஆனிமாதத்தில்தான் வருஷத்துக்கு ஒரு கொடையாக வெகு விமரிசையாய் நடைபெறும். அப்பொழுதுதான் பார்க்கவேணும், அந்த அம்மனின் திருவருள்க் கொடையையும், ஆயிரக்கணக்கான பக்தர்களின் சுயநலத்துக்காகத் தங்களில் லட்சக் கணக்கானவர்களைத் தியாகம் செய்யும் ஆடு கோழிகளின் பரோபகார சிந்தையும், பிரார்த்தனைகளின் கடனைத் தவறாது செலுத்தும் பக்தர்களின் கடமை உணர்ச்சியும்! அடடா, கண்கொள்ளாக்காட்சி! கொடைவிழாவையொட்டி ஏழு தினங்களுக்குக் குரங்கணி ஒரு மாநகரமாகவே கோலாகலமாகத் திகழும்.

பக்தர்கள் தங்கள் கொடையைத் தாராளமாக அம்மனுக்குச் செலுத்துவார்கள். செவ்வாய்க் கிழமை கொடை அன்று இரவிலிருந்தே இரண்டு, மூன்று நாளைக்கு குரங்கணியின் ஒரு மைல் சுற்றளவு வட்டாரத்தில், அன்பர்களின் பக்திப் பெருக்கு ரத்தச் சிவப்பாக எங்கும் படர்ந்திருக்கும். இடப்பக்கத்தில் சாந்தமுடன் அன்ன நடை பழகும் பொருனை நதிகூட, புதன் காலையிலிருந்தே 'அடியார்களின்' பக்திச் சின்னமாகிய சிவப்பு வர்ணத்தை ஏற்று இரத்த வெறியுடன் நறுமணம் கமழ (?) உல்லாசமாய் ஓடும்.

முத்து, குடை ராட்டுச் சுற்றல், நரிப்பெண் பார்த்தல் முதலிய பல வேடிக்கைகளில் ஞாயிறையும் திங்களையும் கழித்தாள். தன் தோழன் வெள்ளாட்டை இச் சந்தடிகளில் மறந்துவிடவில்லை. இங்கு வேடிக்கை பார்க்கவே தான் வந்திருக்கிறோம் என நினைத்துக் கொண்டிருந்த முத்துவை, மறுநாள் — கொடையன்று — கோனார், மனைவியுடன் அழைத்துச் சென்றார். மனிதப் புழுக்கள் ஒன்றுக்குமேல் ஒன்று நெளிய, நெருக்கத்தில் கோனார் முத்துவைத் தோளில் தூக்கி வைத்துக் கொண்டார்.

"பாரு கண்ணு அம்மனை. ஒனக்கு உசிரு கொடுத்த அம்மன் இவதான். ரெண்டு கையும் எடுத்துக் கும்புடு" என்று வாத்சல்யத்துடன் மகளைப் பார்த்துக் கூறினார் கோனார்.

"சாமி! என் ஆட்டெ ஒருத்தரும் அடிக்காமெ நீ பாத்துக்கணும். அது நல்லாருக்கணும். நாங்க ரெண்டுபேரும் பிரியாமெ எப்பவும் ஒண்ணவே இருக்கணும்" என்று பிரார்த்தித்துக் கொண்டாள் முத்து.

முத்துவின் ஆத்மப் பிரார்த்தனை இது. ஆனால் இந்தப் பிரார்த்தனை அம்மனின் செவிகளில் விழுந்ததோ என்னவோ?......

கோவில் எல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டுத் தங்கள் வில் வண்டிக் கூடாரத்திற்குத் திரும்பும் பொழுது மணி ஐந்து ஆகி விட்டது. வரும் வழியிலே, முத்து கண்ட வேடிக்கைக் காட்சிகள் அவள் மனதிற்கு இன்பம் கொடுத்தது போக, ஒன்றிரண்டு காட்சிகள் பெரும் பீதியையும் துயரத்தையும் அளித்தன. ஆடுகளை நிறுத்தியோ படுக்க வைத்தோ டலர் பலியிடுவதைப் பார்த்து விட்டாள்.

"ஐயா இந்த ஆட்டையெல்லாம் ஏம் வெட்ராங்க?"

"வெட்ரதில்லே கண்ணு; அம்மனுக்குப் பலியிடுறாங்க. ஏதாவது கஷ்டம் வந்திச்சின்னு, அம்மனிடம் ஆடு பலியிடரதாக வேண்டிக் கொள்ளுவாங்க. இப்போ அந்த வேண்டுதலையைச் செலுத்துறாங்க. நம்ம ஆடுகூட....

"என்ன, நம்ப ஆட்டெயும் கொல்ரதா?" என்று மின்சாரத்தால் தாக்குண்டவள்போல் துள்ளினாள் முத்து.

"ஆமா, முத்து, நீ ஆறு வயசாயிருக்கப்போ, காச்சலாக் கிடந்தெ. ஒரு ஆடு வளத்துப் பலியிடரதாக அம்மங்கிட்டெ வேண்டின பொறவுதான் நீ பொழச்செ. அதனாலேதான் நாம இந்த ஆட்டெப் பலி குடுக்க வந்திருக்கிறோம் என்று சொன்னார் கோனார் இதற்குள் கூடாரம் வந்து விட்டனர். முத்து ஓடிப்போய் ஆட்டைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

"இந்தா, ஒன்னெக் கொல்லப் போறாங்களாம் நானென்ன செய்வேன்? ஆனா நான்தான் சாமி கிட்டெ வேண்டியிருக்கேனே, நம்ம ரெண்டுபேரையும் பிரிக்கக் கூடாதுன்னு. அது நல்ல சாமியாயிருந்தா......"

கோனார் துணியால் சுற்றப்பட்டிருந்த ஒரு பெரிய அரிவாளை எடுத்துத் துணியைப் பிரித்து விட்டுக் கடமையை நிறைவேற்றத் தயாராயிருந்தார். பேச்சி ஆட்டை அவிழ்த்துக் கொண்டு வந்தாள். முத்துவோ ஆட்டை விடாமல் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுதாள்.

"ஐயா, என் ஆட்டெக் கொல்லாதீங்க. கொன்னா நானும் செத்துப்போவேன்......உம்......ம்..."

"சீ, மூதி, என்ன அவசகுனமாப் பேசுதெ, சும்மா இரு" என்று பேச்சி மகளைக் கண்டித்தாள். ஒருநாளும் மகளை நோக்கி 'சுடுசொல்' சொல்லி அறியாதவள்.

"இல்லெ, ஆத்தா, நாங்கூட சாமிகிட்டெ சொல்லிருக்கேன். என் ஆட்டை என்னை விட்டுப் பிரிக்கக் கூடாதுன்னு. கொல்லாதெ ஆத்தா"

"முத்து, நாம ஆட்டைப் பெலி குடுக்காட்டி அம்மன் கோவிச்சுக்கொள்ளும். ஒனக்குப் பழைய படியும் என்னமாவது கஷ்டம் வந்திடும். இந்தா நல்ல பிள்ளையல்லா நீ. சொன்னக் கேக்கணும்"

நயமாகவே கோனர் சொல்லிப் பார்த்தார். முத்துவோ, ஆட்டைக் கட்டியவள் விடாப் பிடியாக ஒரே கூக்குரல் போட்டு அழுதாள். கோனருக்குக் கோபம் வர ஆரம்பித்தது.

"மூதி, மூதி, சொன்னக் கேக்க மாட்டேங்குது. இந்தா பேச்சி இவளெ இருத்திப் புடிச்சுக்கோ!" என்று மனைவிக்குச் சொல்லி விட்டு, ஆட்டை முத்துவிடமிருந்து பிரித்தார், உயிரை உடலை விட்டுப் பிரிப்பது போல.

ஆட்டின் தலையில் தண்ணீர் தெளித்தார். ஆனால் அபூர்வமாக ஆடு தலையை உலுப்பவில்லை. கோனருக்குத் தூக்கி வாரிப் போட்டது. இது என்ன அபசகுனமோ என்று அவர் திகைத்தார். அம்மன் பலியை ஏற்றுக் கொள்கிறாள் என்பதற்கடையாளம், ஆட்டின் தலையில் தண்ணீர் தெளித்தவுடன் அது தலையை நன்றாக ஆட்ட வேண்டும்; இல்லையேல், அந்த ஆடு பலிக்கு லாயக்கில்லை என்றோ, தாங்கள் செய்யும் பூஜையில் ஏதோ குற்றம் இருக்கிறது என்றோ பக்தர்கள் வியாக்யானம் பண்ணிக் கொள்வார்கள்.

கோனருக்கு ஒன்றும் புரியவில்லை. சிலைபோல நின்றார். பேச்சிக்கோ வயிற்றைக் கலக்கியது. முத்து, தன் ஆத்மத் தோழனை — தன் உயிரையே பிரிய வேணுமே என்று நெஞ்சம் குமுறிக் கொண்டிருந்தாள்.

திரும்பவும் கொஞ்சம் தண்ணீர் தெளித்தார், ஆனாலும் ஆடு தன் தோழியைப் பார்த்துக் கண்ணீர் பொழிந்ததே ஒழிய, தண்ணீரின் குளிர் அதை உலுப்பவில்லை. தலையை உலுப்புமா என ஆட்டையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த கோனருக்கு ஆட்டின் காதில் ஒரு ஈ உட்கார்ந்ததோ, அதனால் அது காதை அசைத்ததோ தெரியாது. ஆனால் ஆடு தலையை உலுப்பியதாக ஒரு பிரமை தட்டியது. உடனே பளபளவென்று மின்னும் வாள் ஏந்திய கை ஓங்கியது.

அதே சமயத்தில் "ம்...ஆடு தலையை உலுப்பலியே, அதுக்குள்......" என ஆரம்பித்த பேச்சியின் குரல் "ஐயோ! அடியாத்தா!" என்று கதறியது.

தன்னைப் பிடித்திருந்த தாயின் கையைத் திடீரென்று கடித்து விட்டுத் தன்னை விடுவித்துக் கொண்ட முத்து, ஒரே பாய்ச்சலில் ஆட்டின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள், அதைக் காப்பாற்ற.

ஓங்கிய கை தாழ்ந்தது, ஆட்டின் தலைக்கு நேரே. எல்லாம் அரைக்கணத்தில்.

மறு கணத்தில் ஆட்டின் தலையும், முத்துவின் தலையும் ஒன்றையொன்று தழுவிய வண்ணமே தரை விழுந்தன. முத்துவின் பிரார்த்தனை பலித்து விட்டது!

★



சித்திர விளக்கம் :

அறிவீற்சிறந்த ஔவையையே திகைக்க வைத்துவிட்டது நாவல் மரத்தின் மேலிருந்து, "சுட்டபழம் வேண்டுமா, சுடாதபழம் வேண்டுமா?" என்று இடைச்சிறுவன் கேட்ட கேள்வி. விளங்காத பொருளைப் பிறகு அவனே விளக்கிய பின் திகைப்பு, நாணமாகி, ஔவையைத் தலைகுனிய வைத்தது. ஆனால் இடைச்சிறுவனாக வந்தவன் முருகன் என்று தெரிந்ததும் குனிந்ததலை நிமிர்ந்து, உள்ளத்தில் இன்ப வெள்ளம் பெருக்கெடுத்தது. ஔவையின் குழிவிழுந்த கண்களிலிருந்து ஒளிச்சுடர்கள் மின்னித்தெறித்தன!

கண்கள்

[சி. பி. பொன்னுசாமி]

"நெஞ்சம் உலகினில் எங்கணுமின்றித் தவித்துத் தடுமாறிச் செல்கிருயே! அது எங்கே?" என்று கேட்கிருயா? ஆம் உன்னைத் தேடித்தான் செல்கிறேன். "என்னைத் தேடியா?" ஓகோ சோலை மலரொளியில் மறைந்து கொண்டு நகைக்கிருயா? திக்குத் தெரியாத காட்டில் என் கண்களைக் கட்டி விட்டு ஏன் விளையாடுகிருய்? உன் பாதச் சிலம்புகளிலே ஒரு நடன ஒலி இசைத்தது. வனக்குயில்கள் பொழியும் வசந்த கீதத்துடன் இணைந்துவரும் உன் பண்களின் இசைத்தாரைகள் என் நெஞ்சில் குளிர்ந்த பனி ரேகைகள் போன்று படிந்துவிட்டன. தென்றல் பட்டு சிலிர்த்து விடும் இளமல்லிகைபோல் உன் இனிமை ஒலியிலே சிலிர்த்தேன். மகுடியின் முன் மயங்கும் நாகத்தைப் போன்று மதி மயங்கி உன் முன் வந்தேன். ஆனுல் நீ எங்கோ மறைந்து கொண்டாய்! நீ யார் என்பதையும் தெரிந்துகொண்டேன் இன்னும் ஏனிந்த விளையாட்டு?

வீணையின் இசையாய், வித்தினுள் செடியாய், மலரில் மனமாய் உடம்பினுள் உயிராய், எங்கணும் சௌந்தர்யத்தின் பேரொளியாய்த் திகழ்ந்த பொற்சுடரே? ஒருவண்டின் இன்ப அணைப்புக்காக உன் மலர்க் கரத்திலே காதல் மதுவை ஏந்தி நின்ருய்? வசந்தத்தில் துள்ளி விளையாடும் இளமலர்களுக்குப் பொன்மெருகேற்றி அந்திக்கதிரின் வர்ண ரேகைகளின் அற்புத ஒளியிலே ஒப்பற்ற உன் அழகைச் சிந்த வைத்தாய். தாரகைகள் என்னும் மன்மத மலர்களை உன் முகிற் குழலில் சூடி காதல் என்னும் அலைகளையே கலையாகக் கொண்டு வானத்தில் ஒளி வீசும் வசீகரச் சந்திரிகையில் உன் குளிர் முகங்காட்டி இவ்வுலகைத் தன் வசமிழக்கச் செய்து விட்டாய். ஆனுல் இவற்றிலெல்லாம் நான் உன்னைக் கண்குளிரக் கண்டேனு? அந்தோ! கண்கள் புரிந்து விட்ட பாபம்.

மின்னலென்னும் ஒளிப்பிழம்பை இடையில் அள்ளிக் கொண்டவளே? ஐம்பூதங்களையும் ஆக்குவித்தவளே! கலைகளிலெல்லாம் உன் கனி முகத்தை மலரச் செய்தவளே! கனவிலே கட்டழகியாகத் தோன்றி காதல் அலைகளில் தத்தளிக்கும் என் நெஞ்சைக் கட்டியணைத்து கன்னங்களைச் சிவக்கச் செய்தவளே! காவியத்திலும், ஓவியத்திலும், கற்சிலையிலும் உயிர்வடிவாய் நிற்கும் அழகுக் கன்னியே!

நான் உன்னைக் காணாத பாபி என்று மட்டும் நினைத்து விடாதே. நான் உன் முக வனப்பை எவற்றில் கண்டேன்? சிரித்தசையும் மலர்களிலே உன்னெழிலைக் காணேன்! சிலிர்த்து வரும் தென்றலிலே உன் இன்னெழிலைக் கண்டேன். மங்கையர்தம் மதி முகத்தில் உன் அழகைக் காணேன் அந்த நல்ல மலர்ச் சிரிப்பில் உன் மலர்ந்த முகம் கண்டேன். நீலமயிலின் நடனத்தில் உன் எழிலைக் காணேன். சோலைக் குயிலின் ஒலியில் உன் சுந்தரக் குழலிசை கண்டேன், செங்கமல மலர்மார்பில் நீ சிறப்பெழில் பெற்றாய்! சிரித்தசையும் முல்லையில் ஒரு மோகனப் புன்னகை செய்தாய்! அரும்பும் நிலவினிலே, அல்லி மலரிலே அணையும் அரும்பின் சுருதியுடனே சொக்கிக் குழலிசைத்தாய். முட்டையினின்றும் பறவையாய்ச் சிறகு விரித்து வானத்திரையில் வனப்புமிக்க வர்ணக்கோடுகள் கிழித்துத் தீங்கீதம் பாடினாய். மலரினும் நீல வானத்தும் மாதர் வதனத்தும் மண்ணிலும், விண்ணிலும் எண்ணிலா அழகின் பத்தை அள்ளி இறைத்து, காணும் பொருள் எங்கணும் எழிற்சிலையாய் அமர்ந்தவளே! என் கண்களில் மட்டும் நீ ஏன் இல்லை?

என் கண்கள் புரிந்து விட்ட பாபத்தைச் சொல்ல மாட்டாயா? நான் உனக்கு அன்புடன் ஒன்றும் கொடுக்கவில்லை; நறுமலராக என் இரு கண் மலர்களை மட்டும் உன் கழலடியில் காணிக்கையாக வைத்தேன். என்பெலாம் உருக விழி நீர் சிந்தக் கசிந்து உன் மனங் கனியப் பாடினேன். உன் திரு நடனத்தின் இசைப் பெருக்கில் திளைத்து நானும் உன்னுடன் நடனமாடினேன். அன்பே! என் வாழ்வின் கடைசி நேரத்திலும்கூட என் கட்டுகளை அவிழ்த்துவிட மாட்டாயா? ஆசையுடன் உன் குளிர்ந்த முகத்தைக் காணத் துடித்துக் கொண்டிருக்கும் என் குருட்டுக் கண்களைத் திறக்கச் செய்ய மாட்டாயா? உன் உள்ளத்திற்குக் குளிர்ச்சியைக் கொடுக்க என் ஊனக் கண்களிலே பெருகி வழியும் கண்ணீரை உனக்குப் பனிநீராகத் தெளிக்கிறேன். அன்புடன் ஏற்றுக்கொள். பேயினும் கொடிய இருண்ட உலகத்தினின்றும் என்னைக் காப்பாற்று. என் பாபங்களை மன்னித்து அன்பு நிறைந்த அமரப் பூங்காவிலே, உன் அழகின் ஒளி வீசும் அற்புத உலகத்திலே என் கண்களைத் திறந்துவிடு. ஒரு மழை முத்துக்காக ஏங்கித் தவிக்கும் முத்துச் சிப்பியைப் போல் உன் ஆசைக் கரங்களின் இனிய அணைப்புக்காக ஏங்கித் தவிக்கும் என்னை உன் அன்புக் கரங்களால் உன்னிடம் அணைத்துக் கொள். என் பிரார்த்தனை இதுதான்.

கவிக்குரல்

[கு. மு. இராமரத்னம்]

இதயம் என்னும் கோயிலில்
இறைவன் என்னும் ஞானத்தை
உதயம் செய்யக் கற்பனை
உண்டு செய்த குரலெது?

அடிமை என்ற தூக்கத்தில்
ஆழ்ந்திருந்த மக்களை
குடிமை கொள்ளச் செய்துமே
கோனுயர்த்துங் குரலெது?

இயற்கை இன்பம் நுகரவே
இனிமையான வர்ணனை
செயற்கை மீறிச் செப்பின
செம்மையான குரலெது?

காவியங்கள் செய்துமே
கற்பனையில் ஏற்றி நல்
ஓவியங்கள் உளத்திலே
உண்டு செய்த குரலெது?

இன்மையான குறையினை
எடுத்துச் சொல்லி மக்களை
நன்மையான நிறையினை
நயக்கச் செய்த குரலெது?

★

சிலப்பதிகாரம்

சர். ஆர். கே. சண்முகம் செட்டியார்..

நாடுகாண் காதை

[தொடர்ச்சி]

சீரங்கத்தில் சாரணர் தரிசனம்

(156—169)

கவுந்தியடிகளும், கோவலனும், கண்ணகியும் ஊருக்கு ஊர் தங்கி ஒரு நாள் ஆறு சூழ்ந்த சீரங்கத்திற்கு வந்து சேர்ந்தனர். அங்கே மூங்கில் முள்ளால் வளைக்கப்பெற்ற மரங்களடர்ந்த சோலையில் பூக்கள் மணம் வீசும் ஒரு பக்கத்தில் சில சாரணர் தோன்றினர். இவர்கள்தான் பட்டினப்பாக்கத்தில் அருகன் கோயிலிலுள்ள பலி பீடத்தின் மேலிருந்து அருகதேவனின் உண்மை மொழிகளை மக்களுக்கு எடுத்து உரைக்கின்ற ஆகாய சாரிகள்.

சாரணரைக் கண்டவுடன் கவுந்தியடிகள், "தொல்வினை ஒழிக" என்று சொல்லிக் கோவலன் கண்ணகியுடன் அவர்கள் திருவடியில் வீழ்ந்து வணங்கினர். கோவலனும் கண்ணகியும் புகார் நகரை விட்டு வந்த காரணத்தையும், அவர்களுக்கு நிகழப்போகும் துன்பத்தையும் முக்கால உணர்ச்சியினால் சமண முனிவர் அறிந்து கொண்டார். ஆனால், விருப்பு வெறுப்பு அற்றவரானதால் அதன் பொருட்டு வருந்தவில்லை.

156 ஆற்றுவீ அரங்கத்து வீற்று வீற்று ஆகிக்
குரங்கு அமை உடுத்த மரம்பயில் அடுக்கத்து
வானவர் உறையும் பூநாறு ஒரு சிறைப்,
பட்டினப் பாக்கம் விட்டனர் நீங்காப்

பெரும் பெயர் ஐயர் ஒருங்கு உடன் இட்ட,
இலங்கு ஒளிச்சிலாதலம் மேல் இருந்தருளிப்
பெருமகன் அதிசயம் பிழையா வாய்மைத்
தருமஞ் சாற்றும் சாரணர் தோன்ற;
“பண்டைத் தொல்வினை பாறுக” என்றே
கண்டு அறி கௌந்தியொடு கால் உற வீழ்ந்தோர்,
வந்த காரணம் வயங்கிய கொள்கைச்
சிந்தை விளக்கின் தெரிந்தோன் ஆயினும்,
ஆர்வமும், செற்றமும் அகல நீக்கிய
வீரன் ஆகலின் விழுமம் கொள்ளான்;

ஆற்று வீ அரங்கத்து — ஆற்றை மறைக்கின்ற சீரங்கத்தில்; வீற்று வீற்று ஆகி — அணி அணியாக இருந்து; குரங்கு அமை உடுத்த — வளைந்த மூங்கில் முள் சூழ்ந்த; மரம் பயில் அடுக்கத்து — மரங்களடர்ந்த சோலையில்; வானவர் உறையும் — தேவர்கள் வாழ்கின்ற; பூ நாறு ஒரு சிறை — பூக்கள் மணம் நாறுகின்ற ஒரு பக்கத்தில்; பட்டினப் பாக்கம் விட்டனர் நீங்கா — பட்டினப் பாக்கத்தை விட்டு நீங்கி; பெரும் பெயர் ஐயர் — மிக்க புகழுடைய சமண முனிவர்; ஒருங்கு உடன் இட்ட — எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து பட்டினப்பாக்கத்தில் இட்ட; இலங்கு ஒளிச்சிலாதலம் மேல் — விளங்கும் ஒளியையுடைய பலி பீடத்தின் மேல்; இருந்தருளி — இருந்து; பெருமகன் — அருகதேவனின்; அதிசயம் பிழையா — புதுமைகள் தவறாத; வாய்மை — உண்மையான; தருமம் — அறவுரைகளை; சாற்றும் — எடுத்து உரைக்கின்ற; சாரணர் தோன்ற — ‘ஆகாயசாரிகள்’ எனப்பட்ட சாரணர்கள் தோன்ற; பண்டைத் தொல்வினை — பழம் பிறப்பில் யாம் செய்த அப்பழ வினைகள்; பாறுக என்று — ஒழிவனவாக என்று; கண்டு அறி கௌந்தியொடு — அவர்களைக் கண்டு இன்னாரென்று கண்டறிந்த கௌந்தியடிகளுடன்; கால் உற வீழ்ந்தோர் — அவர்கள் கால்களில் தமது முடிபட வீழ்ந்து வணங்கிய அவர்கள் (என்றது கண்ணகி கோவலன் இருவரையும்); வந்த காரணம் — காவிரிப்பூம் பட்டினத்தை விட்டு வந்த காரணம்; வயங்கிய கொள்கை — விளக்கமுடைய கொள்கைகள் பொருந்திய; சிந்தை விளக்கின் — தன் நெஞ்சத்தின் விளக்கினால் (என்றது முக்கால அறிவினால்); தெரிந்தோன் ஆயினும் — தான் அறிந்து கொண்டான் ஆயினும்; ஆர்வமும் செற்றமும் — விருப்பும் வெறுப்பும்; அகல நீக்கிய — விலகிப் போம்படி விட்ட; வீரன் ஆகலின் — தருவீரன் ஆதலால்; விழுமம் கொள்ளான் — அவர்களின் துன்பத்தைக்கண்டு தான் வருந்ாதவனாகி.

வீ — அழிவு; அரங்கம் — ஆற்றின் நடுவில் உள்ள சிறு தீவு; குரங்கு — வளைவு; அமை — மூங்கில்; ஒரு சிறை — ஒரு பக்கம்; விழுமம் — துன்பம்.

★

சாரணர் உபதேசம்

(170—191)

சாரணரில் மூத்தவனாகிய பெரியோன் கவுந்தியடிகளுக்கு உபதேசம் செய்கின்றார். "மனிதன் என்ன முயற்சி செய்தாலும், அவனுடைய வினைப்பயன் விளையுங் காலம் வந்து விட்டால், ஊழ்வினை வந்தே தீரும். கடுங் காற்று வீசும் வெட்ட வெளியில் ஏற்றி வைத்த விளக்கைப்போல் மனிதன் உடம்பிலுள்ள உயிர் மறைந்து விடும். எல்லா உயிர்களுக்கும் தலைவனும், எல்லாவற்றிற்கும் காரணமுமாயிருக்கும் இறைவன் அருளிய வேத நூலாகிய ஒளியைப் பெற்றால்தான் அறியாமையாகிய இருள் நீங்கும்; பிறவியாகிய இருளும் விலகும்."

கழி பெரும் சிறப்பின் கௌந்தி! காணாய்:
"ஒழிக என ஒழியாது ஊட்டும் வல்வினை
இட்டவித்தின் எதிர்ந்து வந்து எய்தி
ஒட்டும் காலை ஒழிக்கவும் ஒண்ணா;
கடும்கால் நெடுவெளி இடும் சுடர் என்ன
ஒருங்கு உடன் நில்லா உடம்பு இடை உயிர்கள்;
அறிவன், அறவோன், அறிவு வரம்பு இகந்தோன்,
செறிவன், சினேந்திரன், சித்தன், பகவன்,
தரும முதல்வன், தலைவன், தருமன்,
பொருளன், புனிதன், புராணன், புலவன்
சினவரன், தேவன், சிவகதி நாயகன்,
பரமன், குணவதன், பரத்தில் ஒளியோன்,
தத்துவன், சாதுவன், சாரணன், காரணன்,
சித்தன், பெரியவன், செம்மல் திகழ் ஒளி,
இறைவன், குரவன், இயல்குணன், எம்கோன்,
குறைவு இல் புகழோன், குணப்பொருள் கோமான்,
சங்கரன், ஈசன், சயம்பு, சதுமுகன்,
அங்கம் பயந்தோன், அருகன், அருள்முனி,
பண்ணவன், எண்குணன், பாத்தில் பழம்பொருள்,
விண்ணவன், வேதமுதல்வன், விளங்கு ஒளி,
ஓதிய வேதத்து ஒளி உறின் அல்லது,
போதார் பிறவிப் பொதி அறையோர்" - என;

கழிபெரும் சிறப்பின் — மிக்க பெருந்தவச் சிறப்பினையுடைய; கௌந்தி காணாய் — கவுந்தியே!; ஒழிக என ஒழியாது — ஒழியட்டும் என்று முயன்றாலும் ஒழியாமல்; வல்வினை ஊட்டும் — வலிய ஊழ்வினை தானே வந்து அதன் பயனை நாம் அடையும்படி செய்யும்; இட்ட வித்தின் — விளை நிலத்தில் இடப்பட்ட வித்துக்களைப்போல; எதிர்ந்து வந்து — நமக்கு எதிரே வந்து; எய்தி — பொருந்தி; ஒட்டும் காலை — நல்வினையை நுகரப் பண்ணும் காலத்தில்; ஒழிக்க ஒண்ணா — அதை

வேண்டாமென்று போக்க முடியாது; கடும்கால் நெடுவெளி — பெருங்காற்று வீசும் நீண்ட வெட்ட வெளியில்; இடும் சுடர் என்ன— இட்டு வைக்கப்பட்ட விளக்கைப் போல; உடம்பு இடை உயிர்கள் — உடம்பில் பொருந்தியிருக்கும் உயிர்கள்; ஒருங்கு உடன் நில்லா — உடம்போடு பொருந்தி நெடிது நிற்கமாட்டா; அறிவன் — எல்லாப் பொருள்களையும் அறியும் அறிவுடையவன்; அறவோன் — தர்மம் செய்தலையே தொழிலாக உடையோன்; அறிவு வரம்பு கடந்தோன் — எல்லோர் அறிவையும் கடந்து அதற்கு அப்பாற்பட்டவன்; செறிவன் — தளர்ச்சியில்லாமல் எப்பொழுதும் உறுதியுடையவன்; சினேந்திரன் — எட்டுவகைப்பட்ட பிறவித் தொழில்களைக் கடந்தவன்; (பிறப்பு, குலம், பேர், வயது முதலியன இல்லாதவன்); சித்தன் — தன் செயல்களில் வெற்றி பெற்றவன்; பகவன் — அறிவே உருவானவன்; தரும முதல்வன் — அறங்களுக்கும் அடிப்படையானவன்; தலைவன் — எல்லா உயிர்களுக்கும் தலைவன்; தருமன் — தருமத்தின் உருவானவன்; பொருளன் — உண்மைப் பொருளாய் விளங்குபவன்; புனிதன் — மாசில்லாத சிறப்புடையவன்; புராணன் — பழமையுடையவன்; புலவன் — எல்லோர்க்கும் அறிவாய் இருப்பவன்; சினவரன் — சினத்தை அடக்கினவன்; தேவன் — தேவர்களுக்கு முதல்வன்; சிவகதி நாயகன் — வீட்டுலகத்திற்குத் தலைவன்; பரமன்— மேலானவன்; குணவதன் — உயரிய பெருங் குணங்களை உடையவன்; பரத்தில் ஒளியோன் — மேல் உலகத்திற்கு ஒளியாயிருப்பவன்; தத்துவன் — தத்துவங்களை யுடையவன்; சாதுவன் — புலன்களை யெல்லாம் ஒடுக்கினவன்; சாரணன் — வானத்தில் திரிபவன்; காரணன் — எல்லாவற்றிற்கும் காரணமாயிருப்பவன்; சித்தன் — எட்டுவகைச் சித்திகளையும் பெற்றவன்; பெரியவன் — எல்லாவற்றிலும் பெரியோன்; செம்மல் — தலைவன்; திகழ் ஒளி — விளங்குகின்ற ஒளி வடிவமானவன்; இறைவன் — எப்பொருளிலும் தங்கியிருப்பவன்; குரவன் — ஆசிரியன்; இயல்குணன் — இயற்கையான குணத்தினை யுடையவன்; எம்கோன் — எமது தலைவன்; குறை இல் புகழோன் — குறைவில்லாத பெரும்புகழ் உடையோன்; குணப்பொருள் கோமான்— பெருங் குணங்களையே தனது பொருளாக உடைய மன்னன்; சங்கரன் — நலத்தைக் கொடுப்பவன்; ஈசன் — எல்லாச் செல்வமும் உடையோன்; சயம்பு — தானே தோன்றினவன்; சதுமுகன் — நான்கு திசையிலும் முகங்களை யுடையவன்; அங்கம் பயந்தோன் — ஆகம நூல்களைத் தந்தவன்; அருகன் — போற்றத்தக்கவன்; அருள்முனி — அருள் நிரம்பிய முனிவன்; பண்ணவன் — கடவுள்; எண்குணன் — எட்டு குணங்களையுடையவன்; பாத்து இல் பழம்பொருள் — பகுப்பதற்கரிய மிகப்பழம் பொருளாய் உள்ளவன்; விண்ணவன் — மேல் உலகத்தான்; வேத முதல்வன் — ஆகமங்கள் மூன்றிலும் முதலாயுள்ளவன்; விளங்கு ஒளி — அறியாமையாகிய இருள் நீங்க விளங்குகின்ற ஒளி; ஓதிய வேதத்து — (இவ்வகைப் பெயர்களையுடைய பெரியோனால்) ஓதப்பட்ட வேத நூலாகிய; ஒளி உறின் அல்லது — ஒளியைப் பெற்றாலன்றி; பிறவிப் பொதி அறையோர் —பிறவி[illegible]கிய கீழ் அறையில் அகப்பட்டோர்; போதார் — பிறபயனை யடையார்; என — என்று சொல்ல.

புனிதம் — தூய்மை; பரம் — மேன்மை; பொதி அறை — மூடப்பட்ட அறை.

★

கவுந்தி இறைவனைப் போற்றுவது

(192—207)

சாரணரின் அறமொழிகளைக் கேட்ட கவுந்தியடிகள் தலைமேல் கை குவித்து இறைவனைப் போற்றுகிறார்.

சாரணர் வாய்மொழி கேட்டுத் தவமுதல்
காவுந்தியும் தன் கை தலைமேற்கொண்டு;
“ஒரு மூன்று அவித்தோன் ஓதிய ஞானத்
திருமொழிக்கு அல்லது என் செவி அகம் திறவா;
காமனை வென்றோன் ஆயிரத்தெட்டு
நாமம் அல்லாது நவிலாது என் நா;
ஐவரை வென்றோன் அடிஇணை அல்லது,
கைவரைக் காணினும் காணா என் கண்;
அருள் அறம் பூண்டோன் திருமெய்க்கு அல்லது என்
பொருள் இல் யாக்கை பூமியில் பொருந்தாது;
அருகர் அறவன் அறிவோற்கு அல்லது, என்
இரு கையும் கூடி ஒருவழிக் குவியா;
மலர்மிசை நடந்தோன் மலர்அடி அல்லது, என்
தலைமிசை உச்சி தான்அணிப்பொறா அது;
இறுதிஇல் இன்பத்து இறைமொழிக்கு அல்லது
மறுதர ஓதி, என் மனம்புடை பெயராது;”

சாரணர் வாய்மொழி கேட்டு — அச்சாரணர்கள் கூறிய இந்த உண்மையான மொழிகளைக் கேட்டு; தவமுதல் காவுந்தியும் — தவத்தின் முதல்வியாகிய காவுந்தி; தன் கை தலைமேற் கொண்டு — தமது கைகளைத் தலையின்மேல் வைத்துக்கொண்டு; ஒரு மூன்று அவித்தோன்—காமம், வெகுளி, மயக்கம் என்பவற்றை நீக்கியவனாகிய அருகதேவன்; ஓதிய — கூறியருளிய; ஞானத் திருமொழிக்கு அல்லது — அறிவமைந்த புண்ணிய மொழிகளுக்கல்லாமல்; என் செவி அகம் திறவா — என் காதுகள் வேறு மொழிகளுக்குத் திறக்கமாட்டா; காமனை வென்றோன் — காமதேவனை வென்றவனாகிய கடவுளின்; ஆயிரத்தெட்டு நாமம் அல்லது — ஆயிரத்தெட்டு திருப்பெயர்களை யல்லாமல் வேறொன்றை; என் நா நவிலாது — என்னுடைய நாக்கு சொல்லாது; ஐவரை வென்றோன் — ஐந்து புலன்களையும் வென்றவனாகிய அக்கடவுளின்; அடி இணை அல்லாது — இரண்டு அடிகளையும் கண்டு மகிழ்ந்தால் அல்லாமல்; கைவரைக் காணினும் — மற்ற தேவரின் அடிகளை என் கையின் கண் கண்டாலும்; என் கண் காணா —

என் கண்கள் அவற்றைப் பார்க்கமாட்டா; அருள் அறம் பூண்டோன் — அருளோடு அறத்தையே அணிகலமாகக் கொண்ட அவனது; திருமெய்க்கு அல்லது — திருமேனியின் பொருட்டு அல்லாமல்; என் பொருள் இல் யாக்கை — என்து பயனற்ற உடல்; பூமியில் பொருந்தாது — நிலத்தில் வேறொரு காரணத்திற்காகப் படியாது; அருகர் சமண முனிவர்களுக்கு; அறவன் — அறத்தைக் கற்பிக்கும்; அறிவோற்கு அல்லது — அந்த அறிவனாகிய கடவுளுக்கல்லாமல்; என் இருகையும் கூடி — என் இரு கைகளும் சேர்ந்து; ஒரு வழிக் குவியா — (வேறு ஒரு தேவரை வணங்குதற்கு) ஒன்றாகக் குவியாது; மலர்மிசை நடந்தோன் — மலரின்மேல் தங்கியவனான அந்தக் கடவுளின்; மலர் அடி அல்லது — மலர் போன்ற திருவடிகளை யல்லாமல்; என் தலை மிசை உச்சிதான் — எனது தலை உச்சி; அணிப் பொறு அது — (பிற தேவரின் அடிகள்) அணியப் பொறுக்க மாட்டாது; இறுதி இல் இன்பத்து — முடிவில்லாத இன்பத்தை யுடைய; இறை மொழிக்கு அல்லது — இறைவனாகிய அருகனின் அறவுரைகளுக் கல்லாமல்; மறுதர ஓதி — பிறமொழிகள் மீண்டும் மீண்டு ஓதி; என் மனம் — என் உள்ளம்; புடை பெயராது — அசையாது.

★

காவிரித் தென்கரை

(208—218)

அருக தேவனின் பெருமையைப் போற்றிய கவுந்தியடிகளின் மொழிகளைக் கேட்ட சாரணர் மன மகிழ்ந்து, நிலத்திலிருந்து ஒரு முழம் மேலே எழுந்து "பிறவியைத் தரும் உலகப் பற்றுகள் கவுந்தியை விட்டு ஒழிக" என்று வாழ்த்தி, வானத்தின் வழியாய்ச் சென்று மறைந்தனர். அவர்களைக் கைதொழுது "தாங்கள் கூறியபடியே உலகக் கட்டுகள் எமக்கு அறுவனவாக" என்றார். பிறகு மூவரும் பள்ளியோடத்தில் ஏறி துறையைக் கடந்து, காவிரியின் தென் கரையை அடைந்து, அங்குள்ள ஒரு அழகிய பூஞ்சோலையில் தங்கினர்.

என்று அவன் இசைமொழி ஏத்தக் கேட்டு, அதற்கு
ஒன்றிய மாதவர் உயர்மிசை ஓங்கி
நிவந்து ஆங்கு ஒரு முழம் நீள் நிலம் நீங்கி,
'பவம்தரு பாசம் கவுந்தி! கெடுக' என்று
அந்தரம் ஆறுப் படர்வோர்த் தொழுது
'பந்தம் அறுக' எனப் பணிந்தனர் போந்து;
கார் அணி பூம்பொழில் காவிரிப்பேர் யாற்று
நீர் அணி மாடத்து நெடும் துறை போகி,
மாதரும், கணவனும், மாதவத் தாட்டியும்
தீது தீர் நியமத் தென்கரை எய்தி,
போதுசூழ் கிடைக்கை ஓர் பூம்பொழில் இருந்துழி;

என்று அவன் இசைமொழி ஏத்த — என்று இவ்வாருகக் கவுந்தி அவ் வருகதேவனின் பெருமைகளைப் போற்றிக் கூற; கேட்டு — அதனைக் கேட்டு; அதற்கு ஒன்றிய மாதவர் — அம்மொழிகளுக்கு இசைந்த அந்த சாரணர்கள்; உயர்மிசை ஓங்கி நிவந்து — நிலத்தை விட்டு மேலே எழுந்து உயர்ந்து; ஆங்கு ஒரு முழம் நீள் நிலம் நீங்கி — அவ்வி டத்தில், ஒரு முழ உயரம் நிலத்தை விட்டு எழுந்த பின்னர்; பவம்தரு பாசம் கவுந்தி கெடுக என்று — பிறப்பைத் தரக்கூடிய உலக இன்பங் கள் கவுந்தியை விட்டு ஒழிவனவாக எனக்கூறி; அந்தரம் ஆருப்படர் வோர் — வானத்தினை வழியாகக் கொண்டு செல்லுகின்ற அவரை; தொழுது — வணங்கி; பந்தம் அறுக என — அவர் கூறியபடியே உலகக் கட்டுகள் எமக்கு அறுவனவாக என்று; பணிந்தனர் போந்து— போற்றிப் போய்; கார் அணி பூம்பொழில் — மேகங்களை அணிந்த பூக்களையுடைய சோலைகள்; காவிரிப்பேர் யாற்று — பெரிய காவிரியாற்றின்; நீர் அணி மாடத்து — நீரணிமாடம் என்னும் பள்ளி யோடத்தினுல்; நெடும் துறை போகி — அவ்வாற்றின் பெரிய துறை யினைக் கடந்து; மாதரும் கணவனும் மாதவத் தாட்டியும் — கண்ணகி, கோவலன், கவுந்தி என்ற மூவரும்; தீது தீர் நியமத் தென்கரை எய்தி — குற்றமில்லாத ஊர்களையுடைய அதன் தென்கரையை அடை ந்து; போது சூழ் கிடக்கை — பூக்கள் சூழ்ந்த இடத்தினையுடைய; ஓர் பூம்பொழில் இருந்துழி — ஒரு அழகிய சோலையில் இருந்தபொழுது.

பவம் — பிறப்பு; அந்தரம் — வானம்; நீரணி மாடம் — பள்ள யோடம்; போது — பூ.

★

கவுந்தி சாபம்

(219—234)

பூஞ்சோலையின் வழியாய் வந்த ஒரு விலைமகளும், ஒரு சோம்பேறியும் கண்ணகி, கோவலன் இருவரையும் பார்த்தார்கள். காமனும் ரதியும் போல் அழகுடைய இவர்கள் யார் என்று தெரிந்து கொள்ள வேண்டுமென்று நினைத்து, கவுந்தியடிகளிடம் போய் "அருந் தவத்தை யுடைய அடிகளே, தங்களோடிருக்கும் இவர்கள் யார்" எனக்கேட்க, கவுந்தியடிகள் "இவர்கள் என் மக்கள்; அவர்களும் மனிதர்கள் தான். வழிநடையால் சலிப்படைந்திருக்கிருர்கள். அவர்கள் பக்கத் தில் போக வேண்டாம்" என்ருர். இதைக் கேட்ட இருவரும் கொஞ் சம் வம்பு பேசலாமென்று கருதி "ஒரு தாய் வயிற்றில் பிறந்தவர்கள் கணவனும் மனைவியுமாய்க் கூடி வாழ்வதும் உண்டோ? நீர் படித்த நூல்கள் இது முறையென்று சொல்கின்றனவோ?" என்று அக்கிரம மான வார்த்தைகளைப் பேசினுர்கள். இதைக் கேட்டுக்கொண்டிருந்த கண்ணகி நடுங்கி விட்டாள்; காதைப் புதைத்துக் கொண்டாள். கவுந்தியடிகளுக்குக் கோபம் வந்து விட்டது. "என் பூங்கோதையை இவர்கள் இகழ்வதா? இவர்கள் கிழ நரிகளாக மாறி முள் நிறைந்த காட்டில் அலைவார்களாக" என்று மனதிலே சாபம் கொடுத்தார். சாபம் உடனே பலித்து விட்டது.

வம்பப் பரத்தை வறுமொழி யாளனொடு
கொங்கு அலர் பூம்பொழில் குறுகினர் சென்றோர்;
"காமனும், தேவியும் போலும் ஈங்கு இவர்
ஆர்? எனக் கேட்டு ஈங்கு அறிகுவம்" என்றே;
"நோற்று உணல் யாக்கை நொசிதவத்தீர்! உடன்
ஆற்று வழிப்பட்டோர் ஆர்?" என வினவ, "என்
மக்கள் காணீர்; மானிட யாக்கையர்;
பக்கம் நீங்குமின்! பரி புலம்பினர்:" என;
"உடன் வயிற்றோர்கள், ஒருங்கு உடன் வாழ்க்கை
கடவதும் உண்டோ கற்றறிந்தீர்?" என;
தீமொழி கேட்டுச் செவி அகம் புதைத்துக்
காதலன் முன்னர்க் கண்ணகி நடுங்க,
"எள்ளுநர் போலவும் இவர் என் பூங்கோதையை;
முள் உடைக் காட்டின் முதுநரி ஆக" எனக்
கவுந்தி இட்ட தவம் தரு சாபம்
கட்டியது ஆதலின்;

வம்பப் பரத்தை — பரத்தைத் தொழிலைப் புதிதாகப் பழகுகின்ற ஒருத்தி; வறுமொழி யாளனொடு — பயனில்லாத வெறும் மொழிகளைக் கூறும் ஒருவனோடு கூடி; கொங்கு அலர் பூம்பொழில் — தேன் நிறைந்த பூக்களையுடைய அழகிய சோலையினை; குறுகினர் சென்றோர் — நெருங்கிப்போன அவர்கள்; காமனும் தேவியும் போலும் — காமனையும் அவன் மனைவியான இரதியையும் போன்றவராய்; ஈங்கு இவர் ஆர் என — இங்கு வந்திருக்கும் இவர்கள் யார் என்று; கேட்டு ஈங்கு அறிகுவம் என்றே — இவர்களிடத்தில் கேட்டு அறிவோம் என்று கருதி; நோற்று — நோன்புகளை நோற்று; உணல் — பிறகு உண்ணுகின்ற; யாக்கை — உடலையுடைய; நொசி தவத்தீர் — நுண்ணிய தவத்தினையுடைய அடிகளே; உடன் ஆற்று வழிப்பட்டோர் — தங்களுடன் வழியில் வந்து சேர்ந்தவர்களாகிய இவர்கள்; ஆர் என வினவ — யார் என்று கேட்க; (அதற்கு அவர்) என் மக்கள் காணீர் — என்னுடைய மக்கள் என அறியக் கடவீர்; மானிட யாக்கையர் — மக்கள் உடம்புடையவர்கள்; பரிபுலம்பினர் — வழி நடையால் வருந்தியுள்ளனர்; பக்கம் நீங்குமின் என — அவர் பக்கத்தை விட்டு அப்பாற் செல்லுங்கள் என்று கூற; உடன் வயிற்றோர்கள் — ஒரு வயிற்றில் பிறந்த இருவர்; ஒருங்கு உடன் வாழ்க்கை — ஒன்றாகக் கூடி (கணவனும் மனைவியுமாய்) வாழுதல் (உண்டென்று); கற்று அறிந்தீர் — உண்மையான நூல்களைக் கற்றறிந்த பெரியீர்! கடவதும் உண்டோ — சொல்லப்பட்டதும் உண்டோ; என — என்று அவர்கள் கேட்ட அளவிலே; தீமொழி கேட்டு — அவர் கூறிய அக்கொடு மொழிகளைக் கேட்டு; செவி அகம் புதைத்து — தனது காதுகளைப் பொத்தி; காதலன் முன்னர்க் கண்ணகி நடுங்க — தன் கணவன் முன்பாக நின்று கண்ணகி நடுக்கமடைய; என் பூங்கோதையை — எனது, அழகிய கூந்தலையுடைய இவளை; எள்ளுநர் போலும் இவர் — இவர்கள் இகழ்ந்

தும் கூறத்தகுமோ!; முள் உடைக் காட்டின் — முட்கள் நிரம்பிய காட்டின் கண்; முது நரி ஆக என — கிழ நரிகளாக மாறித்திரிக என்று கூற; கவுந்தி இட்ட — அங்ஙனம் கவுந்தியினால் இடப்பட்ட; தவம் தரு சாபம் — தவத்தின் ஆற்றலால் பிறந்த அச்சாபம்; கட்டியது ஆதலின் — வந்து பிடித்தது ஆதலால்.

வம்பு — புதுமை; பரத்தைத் தொழில் — விலைமகளின் தொழில்; நோற்று உணல் — பட்டினி கிடந்து பிறகு உண்ணுதல்; ஆறு — வழி; பரிதல் — வழிப் போகுதல்; புலம்பு — வருத்தம்.

★

சாப விடை

(234—248)

வம்பர்கள் குள்ளநரிகளாக மாறி ஊளையிட்டனர். அடிகளின் சாபத்தால்தான் இப்படி நேர்ந்ததென்று கண்ணகியும், கோவலனும் உடனே அறிந்து கொண்டவராய், நெஞ்சு கலங்கி "அருந்தவம் உடையீர்! தீயோர் அடாத சொற்களைச் சொன்னாலும், அது அவர்கள் அறியாமையால் வந்த பிழை என்று கருத வேண்டும். உங்கள் முன்னிலையில் பிழை செய்த இந்த வம்பர்களுக்குச் சாபம் நீங்கும் காலம் இன்னதென்று தாங்களே அருள வேண்டும்" என்று வேண்டினர். கவுந்தியடிகளும் மனமிரங்கி "அறியாமையைக் கடைப் பிடித்ததால் இத்தாழ்ந்த பிறப்பை அடைந்த இவர் உறையூரின் மதிலின் அருகே உள்ள காட்டில் பன்னிரண்டு மாதங்கள் அலைந்து திரிந்து, துன்பப் பட்டபின் தமது பழைய உருவத்தை அடைவார்கள்" என்று சாப விடை செய்தார். பிறகு மூவரும் உறையூரை அடைந்தனர்.

பட்டதை அறியார்,
குறுநரி நெடும்குரல் கூவிளி கேட்டு
நறுமலர்க் கோதையும், நம்பியும் நடுங்கி
"நெறியின் நீங்கியோர் நீர்அல கூறினும்,
அறியாமை என்று அறியல் வேண்டும்;
செய்தவத்தீர்! நும் திருமுன் பிழைத்தோர்க்கு
உய்திக் காலம் உரையீரோ?" என;
"அறியாமையின் நின்று, இழி பிறப்பு உற்றோர்
உறையூர் நொச்சி ஒரு புடை ஒதுங்கிப்
பன்னிரு மதியம் படர்நோய் உழந்தபின்,
"முன்னை உருவம் பெருக ஈங்கு இவர்" எனச்
சாபவிடை செய்து; தவப்பெரும் சிறப்பின்
காவுந்தி ஐயையும், தேவியும், கணவனும்
முறம்செவி வாரணம் முன்சமம் முருக்கிய
புறஞ்சிறை வாரணம் புக்கனர் புரிந்து என்.

பட்டதை அறியார் — நிகழ்ந்த இச்செய்தியை அறியாதவராய்; குறுநரி நெடும் குரல் — குள்ளநரியின் நெடுங்குரலால்; கூவிளி கேட்டு — கூவுகின்ற அவ்வோசையைக் கேட்டு; நறுமலர்க் கோதையும் — நறுமணம் வீசும் மலர்களையணிந்த கூந்தலையுடைய கண்ணகியும்; நம்பியும் நடுங்கி — கோவலனும் நெஞ்சு கலங்கி; நெறியின் நீங்கியோர் — நல்ல நெறியினின்று கடந்தவர்; நீர்அல கூறினும் — தகவு இல்லாத சொற்களைக் கூறினலும்; அறியாமை என்று அறியல் வேண்டும் — அது அவர் அறியாமையால் வந்த பிழை என்று உணர வேண்டும்; செய்தவத்தீர் — வருந்திச் செய்த பெரிய தவத்தினை யுடையீர்; நும் திருமுன் பிழைத்தோர்க்கு — உமது முன்னிலையில் பிழை செய்தவர்களாகிய இவர்களுக்கு; உய்திக் காலம் — அச்சாபம் நீங்கும் காலம்; உறையீரோ என — கூற மாட்டீர்களோ என்று கேட்க; அறியாமையின் நின்று — அறியாமையைக் கடைப்பிடித்து; இழி பிறப்பு உற்றோர் — அதனல் இத்தாழ்ந்த பிறப்பை அடைந்த இவர்கள்; உறையூர் நொச்சி — உறையூரைச் சுற்றியுள்ள மதிலின்; ஒரு புடை ஒதுங்கி — ஒரு பக்கத்து (காட்டில்) திரிந்து; பன்னிரு மதியம் — பன்னிரண்டு மாதங்கள் வரை; படர் நோய் உழந்த பின் — வருத்தந் தரும் துன்பங்களை நுகர்ந்த பிறகு; இவர் முன்னை உருவம் — இவர் தமது பழைய உருவத்தை; இங்கு பெறுக என — இவ்விடத்தில் திரும்பவும் பெறுவார்களாக என்று; சாபவிடை செய்து — தாம் இட்ட சாபத்திற்குக் கழிவு கூறி; தவப்பெரும் சிறப்பின் — மிக்க தவத்தால் வந்த சிறப்பினையுடைய; காவுந்தி — கவுந்தி அடிகளும்; தேவியும் கணவனும் — கண்ணகியும் கோவலனும்; முறம் செவி வாரணம் முன் — முறத்தைப் போன்ற காதினை யுடைய யானையின் முன்னர்; சமம் முருக்கிய புறம் சிறை வாரணம் — போர் செய்து வென்ற பக்கத்தில் சிறகினையுடைய கோழியின் (பெயரையுடைய உறையூரில்); புரிந்து புக்கனர் — விருப்பத்துடனே நுழைந்தார்கள்.

விளி — குரல்; உய்திக் காலம் — தப்புங் காலம்; நொச்சி – மதில்; படர் — வருத்தம்; வாரணம் — யானை; வாரணம் என்று கோழிக்கும் பெயர் உண்டு. கோழியைக் குறிப்பதற்கு "புறத்திலே சிறகை உடைய வாரணம்" என்ருர். யானையைக் குறிப்பதற்கு "முறத்தைப் போல் காதினையுடைய வாரணம்" என்ருர். ஒரு காலத்தில் உறையூரில் ஒரு கோழி யானையுடன் போர் செய்து வென்றது என்று ஒரு கதை உண்டு. அதனல் உறையூருக்குக் கோழியூர் என்று ஒரு பெயரும் உண்டு.

நாடுகாண் காதை முற்றிற்று

★

கட்டுரை

(1—20)

புகார்க் காண்டத்தில் சொல்லப்பட்ட முக்கிய அம்சங்களை ஆசிரியர் இக்கட்டுரையில் சுருக்கமாக எடுத்துக் காட்டுகிருர். தமிழ் நாட்

டிலுள்ள மூவேந்தருள் ஒருவராகிய சோழ மன்னனின் குடிச்சிறப்பும், அவர் தலை நகரத்தின் பெருமையும், அவர் நாட்டின் குடிகளின் மேன்மையும், பயிர், காவிரியாறு, மழை முதலிய வளங்களும், நாடகத் தமிழ், இசைத் தமிழ் முறைகளும் — இவ்விதமான பல விஷயங்கள் கொண்ட புகார்க் காண்டம் முற்றிற்று என்றார். இப்படியே ஒவ்வொரு காண்டத்தின் இறுதியிலும் ஒரு கட்டுரையோடு முடிவு செய்கின்றார்.

1--20 முடி உடை வேந்தர் மூவருள்ளும்
தொடி விளங்கு தடக்கை சோழர் குலத்து உதித்தோர்
அறனும், மறனும், ஆற்றலும், அவர் தம்
பழவிறல் மூதூர்ப் பண்புமேம் படுதலும்;
விழவுமலி சிறப்பும், விண்ணவர் வரவும்,
ஒடியா இன்பத்து அவர்உறை நாட்டுக்
குடியும், கூழின் பெருக்கமும், அவர் தம்
தெய்வக் காவிரித் தீதுதீர் சிறப்பும்,
பொய்யா வானம் புதுப்புனல் பொழிதலும்;
அரங்கும், ஆடலும், தூக்கும், வரியும்;
பரந்து இசை எய்திய பாரதி விருத்தியும்;
திணை நிலை வரியும், இணை நிலை வரியும்;
அணைவு உறக் கிடந்த யாழின் தொகுதியும்;
ஈர்ஏழ் சகோடமும், இடநிலைப் பாலையும்,
தாரத்து ஆக்கமும், தான் தெரி பண்ணும்,
ஊரகத் தேரும்; ஒளி உடைப் பாணியும்;
என்று இவை அனைத்தும் பிறபொருள் வைப்போடு;
ஒன்றித் தோன்றும் தனிக்கோள் நிலைமையும்;
ஒரு பரிசா நோக்கிக் கிடந்த
புகார்க் காண்டம் முற்றிற்று.

முடி உடை வேந்தர் மூவருள்ளும் — முடி மன்னர்களாக விளங்கிய சேர சோழ பாண்டியர் என்ற மூவர்களுள்ளும்; தொடி விளங்கு தடக்கை — வீர வளையல் விளங்கும் பெரிய கையினையுடைய; சோழர் குலத்து உதித்தோர் — சோழர் குடியில் தோன்றியவர்களின்; அறனும் — அறத்தைக் காக்கின்ற சிறப்பும்; மறனும் — பகைவர்களை அழிக்கின்ற திறமையும்; ஆற்றலும் — வென்ற நாடுகளை நன்கு பாதுகாக்கும் ஆற்றலும்; அவர்தம் பழவிறல் மூதூர் — அவருடைய தொன்று தொட்டுத் தலைமையான பழைய புகார் நகரம்; பண்பு மேம் படுதலும் — எல்லா வளத்தாலும் சிறந்து ஓங்குதலும்; விழவு மலி சிறப்பும் — திருவிழா நிறைந்து விளங்கும் சிறப்பும்; விண்ணவர் வரவும் — அதற்கு விண்ணவர் வருதலும்; ஒடியா இன்பத்து அவர் உறை — கெடாத இன்பத்தையுடைய அவர் வாழுகின்ற; நாட்டு — நாட்டிலுள்ள; குடியும் — குடி மக்களும்; கூழின் பெருக்கமும் — பயிர்களின் செழிப்பும்; அவர் தம் தெய்வக் காவிரி — அவர்களுடைய

தெய்வத் தன்மையுடைய காவிரி யாற்றின் ; தீதுதீர் சிறப்பும் — குற்ற மற்ற சிறப்புகளும் ; பொய்யா வானம் புதுப்புனல் பொழிதலும் — (அவர் நாட்டில்) பொய்த்தல் அறியாது மேகம் (காலத்தில்) புது நீரை மழையாகப் பொழிதலும் ; அரங்கும் — நூல் முறைப்படி அமைக்கப் பட்ட நாடக மேடையும் ; ஆடலும் — அதில் ஏறி ஆடவல்லவர் ஆடிக் காட்டுதலும் ; தூக்கும் — தூக்கு, என்ற இசைப் பாட்டுகள் பாட லும் ; வரியும் — கண்கூடுவரி முதலாக உள்ள எட்டுவகை வரிகளும் ; பரந்து இசை எய்திய — எங்கும் புகழ் படைத்த; பாரதி விருத்தியும்— நாடக உறுப்புக்களுள் ஒன்றாகிய பாரதி விருத்தியும் ; (என்றது கட லாடு காதையில் கூறப்பட்ட பதினொருவகை ஆடல்களை) ; திணைநிலை வரியும் — அந்தந்த நிலத்திற்கேற்ற வரிப் பாடல்களைக் காட்டும் "திணை நிலைவரி" என்பதும் ; இணைநிலை வரியும் — (சார்த்துவரி) என்னும் ஒருவகைப் பாட்டுக்கள் முதலாக வருகின்ற பலவரிப் பாடல்களும் ; அணைவு உறக் கிடந்த — நூல் முறையோடு பொருந்திக் கிடந்த ; யாழின் தொகுதியும் — யாழ்ப் பாட்டுக்களின் தொகுதியும் ; ஈர்எழ் சகோடமும் — பதினான்கு வகையாகக் கட்டப்பெற்ற நரம்புகளை யுடைய சகோட யாழும் ; இடநிலைப் பாலையும் — இடநிலைப் பாலை என்னும் இசைப் பகுதியும் ; தாரத்து ஆக்கமும் — தாரம் என்னும் இசை ஆக்கம் பெறப் பாடுகின்ற இசைப் பாட்டும் ; தான் தெரி பண்ணும் — அகநிலை மருதம் முதலான நால்வகைப் பண்களையும் அறி கின்ற திறமும் ; ஊரகத் தேரும் — நகரத்தின் அழகும் ; ஒளி உடைப் பாணியும் — புகழ் மிக்க தாளங்களும் ; என்று இவை அனைத்தும் — என்று கூறப்பட்ட இச்சிறப்புக்களோடும் ;பிறபொருள் வைப்போடு— சொல்லப்படாத பிற பொருள்களின் இருப்போடு ; ஒன்றித் தோன் றும் — பொருத்தமாகத் தோன்றுகின்ற ; தனிக்கோள் நிலைமையும்— ஒப்பற்ற சிறப்புகளின் நிலைமையும் ; ஒரு பரிசா ஒரு தன்மையாக ; நோக்கிக் கிடந்த — உட்கொண்டிருந்த; புகார்க் காண்டம் — ; முற்றிற்று — .

வெண்பா

காலை அரும்பி மலரும் கதிரவனும்,
மாலை மதியமும் போல் வாழியரோ – வேலை
அழகால் அமைந்த அவனிக்கு, மாலைப்
புகழால் அமைந்த புகார்.

வேலை — கடல் சூழ்ந்த ; அழகால் அமைந்த — அழகோடு பொருந்திய ; அவனிக்கு — இந்நில வுலகிற்கு ; மாலை — வரிசையான புகழால் அமைந்த புகார் — புகழ்ச்சியோடு பொருந்திய புகார் நகரம் ; காலை அரும்பி — காலையில் தோன்றி ; மலரும் — தன் ஒளியை விரிய விடுகின்ற ; கதிரவனும் — ஞாயிறும் ; மாலை மதியமும் போல் — மாலைக் காலத்தில் தோன்றும் நிலாவும் போல; வாழியரோ — நெடிது நின்று வாழ்வதாக !

புகார்க் காண்டம் முற்றிற்று.



கலைக்கோயில்

சுவாமி சுத்தானந்த பாரதியார்...

ஜப்பான் அறிஞர் பிலிபைனிலும் அமெரிக்காவிலும், போர்துகீஸியர், இஸ்பானியர் முதலிய வெள்ளைக்காரருடனும் பழகினர்கள். பிறகு ஐரோப்பா, அமெரிக்காக் கண்டங்களில் நடக்கும் அரசியல் முறைகளைக் கவனித்தார்கள். ஒடோ என்பவர் பிரான்ஸ், இங்கிலாந்து, ஜெர்மனி, ஐக்கிய மாகாணங்களுக்குச் சென்று அங்கே நடக்கும் அரசியல் முறைகளைப் பார்த்துவந்து, நீண்ட ஆராய்ச்சியால் ஜப்பானுக்கும் ஒரு புதிய ஆட்சி முறையை வகுத்தார். அதுதான் இன்றும் நின்று நிலைக்கிறது. ஜப்பானிய மன்னரே சர்வ வல்லமையுடைய தலைவர்; அவர் சூரியன் சந்ததி. அவர் சொல்லுக்கு இரண்டில்லை. அவரை ஜப்பானியர் தெய்வமென வணங்குவர். அவருக்காக உயிரையும் துரும்பென மதிப்பர். அரசருக்கோ நாட்டுக்கோ அவமான காரியம் செய்தவர் தற்கொலை (ஹரிகிரி) செய்து கொள்வது சர்வ சாதாரணம். அரசரை எல்லாரும் அணுக முடியாது; மந்திரிகளே அரசரைக் கண்டு பேசலாம்; மந்திரிகள் பார்லிமெண்டுக்குக் கட்டுப் பட்டவர்கள்; பார்லிமெண்டு அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். ஜப்பானியர் ஐரோப்பாவுடன் நெருங்கிப் பழகியது முதல், யந்திரத் தொழிலும் போர்க் கலையும் வளர்த்து உலகின் வல்லரசானார்கள். உலகில் சிறந்த படை வீரருள் ஜப்பானியர் முன்னணி வகிக்கிறார்கள். மேற்கே என்ன புதுமை கண்டாலும் உடனே ஜப்பானியர் அதைச் செய்து விடுவர். ஜப்பான் மொழியிலேயே அதை நூலாக்குவர். ஆண் பெண் கல்வியில் கருத்தூன்றி ஜப்பானியர் அறிவை வளர்த்துத் தொழிலாக்கித் தொழிலைப் பணமாக்கிப் பணத்தை ஆயுதப் படையாக்கி எப்போதும் பாய்ச்சலில் நின்றனர். ஜப்பானியர் ரஷ்யா மேல் பாய்ந்து வெற்றி கொண்டபோது உலகமே பிரமித்து விட்டது. ஒரு வெள்ளைப்

புலியைக் குள்ளப் புலி வென்றதே என்று மேனாடும் வியந்தது. கப்பல் போரில் ஜாரின் ரஷ்யா எதிர்த்து நிற்க முடியாமல் தோற்றது. அதன் பிறகு ஜப்பான் உலக மதிப்பைப் பெற்று முன்னேறியது.

தாய்மொழி, நாட்டன்பு' தொழிலூக்கம், விடா முயற்சி' அஞ்சா நெஞ்சுரம் படைத்த சேனை பலம்–புதிய விஞ்ஞான உலகை வெல்லும் அறிவு, சமுதாய ஒற்றுமை – இவையே ஜப்பான் இவ்வளவு விரைவாக முன்னேறிய காரணமாகும்.

இவ்வாறு ஜப்பான் முன்னேறியதையும் அதற்குக் காரணமாயிருந்த தலைவர் வரலாற்றையும் நாகாஷிமா சொல்லக் கேட்டுத் தமிழ்மணி இந்தியாவையும் தமிழகத்தையும் எண்ணிக் கண்ணீர் விட்டான். ஆனால் நம் ஆசிய நாடொன்று வல்லரசாயிருப்பதிற் பெருமை கொண்டான். இனிக் கதைக்கு வருவோம்.

அத்தியாயம் பத்தொன்பது

கலைவிருந்து

ஸொஹூகியும், நாகாஷிமாவும் மறுநாளே ஜப்பானிய ரசிகர்களைக்கண்டு பேசி, தோகியோ சர்வகலாசாலை மண்டபத்தில் மணி கோஷ்டிக்கு விருந்து நடத்தி இசைக்கச்சேரியும் ஏற்பாடு செய்தனர்.

யாசுமூரா, ஃபூஜிமோடோ, காவாமூரா, மட்சுகி, ஹராதா, யூசிடங்டுங், ஸ்ரீமதி மிவாடா, ஷமோடா, யாமோகா முதலிய பல பிரமுகர்களும், கலைவாணர்களும் சபையை அலங்கரித்தனர். நாகுசி என்ற கவிஞர் ஜப்பானின் பெருமையைப் பாடினார்.

" ஆசியாவின் உதய சூரியன்
ஆற்றல்மிக்க புது ஜப்பானியன் "

என்று பாடும்போது ஜப்பானியர் பெருமை கொண்டனர். பாட்டுடன் குழலும், கோடோ என்ற ஜப்பான் யாழும் வீரவுணர்ச்சியும் சேர்ந்து பாட்டின் பயனை அதிகமாக்கின. பிறகு நாகாஷிமா எழுந்து தமிழ்மணியை அறிமுகப்படுத்தினர்:

"ஆசியாவின் ஞானக்கோயில் இந்தியா; இந்திய புத்தரை நாம் வணங்குகிறோம்; இந்தியாவில் ஆரியர் திராவிடர் என்ற இரண்டு நாகரிக மரபினர் உண்டு. ஆரிய நாகரிகம் கீதையைத் தந்தது. திராவிடமான தமிழ் நாகரிகம் திருக்குறளைத் தந்தது.

இன்று நம் விருந்தாளியான மணி, தமிழ்நாகரிக மணி. அவர் தமிழும், ஆங்கிலமும் படித்த இசைப்புலவர், குணவான். அன்பு மிக்க சர்வதேச நண்பர். அவரது தாய்மொழியான தமிழ் உலகின் பிரதானமொழிகளில்முன்மொழி.

இன்றும் அது மறுமலர்ச்சியடைந்திருக்கிறது. தமிழில் இனிய இசைச்செல்வம் உள்ளது. அதன் இன்பத்தை இன்று பருகவே இங்கு கூடியிருக்கிறோம். தமிழ் மணி கோஷ்டியார் சிறந்த கலைப் புலவர்கள். அதிகம் சொல்வானேன்; மணி இசைமுழக்கம், செய்கையிலே அதன் நயத்தைச் சொல்லட்டும்.

நாகாஷிமா ஜப்பானில் பேசியதை நண்பர் ஸுஸுகி ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துச் சொன்னார்.

பிறகு தமிழ்மணி ஒரு சாந்தப் புன்னகையுடன் எழுந்தான். இனிய தமிழில் ஐந்தே நிமிஷம் பேசினான்; பொன்னம்பலம் அதை ஆங்கிலத்திலும், ஸுஸுகி ஜப்பானியத்திலும் மொழி பெயர்த்தனர்.

"நண்பர்காள், நாம் அனைவரும் ஆசியத்தோழர். புத்தர் பிறந்த நாட்டிலிருந்து புத்தரை வணங்கும் நாட்டிற்கு நான் வந்தேன்; இன்று ஜப்பான் வல்லரசாகி, ஆசியாவின் உதய சூரியனாக விளங்குகிறது. ஜப்பான், இந்தியா இரண்டுடனும் சேர்ந்து ஆசிய சுதந்தரத்தைக் காக்கும் நாளை எதிர்பார்க்கிறேன். ஜப்பானின் கல்வி, தொழில் கலை வளர்ச்சியும், சமுதாய ஒற்றுமையும் கண்டு மிக்க மகிழ்கிறேன். இன்று கேட்ட ஜப்பானியப் பாடல் என் உள்ளத்தில் என்றும் சுழலும். நீங்கள் எங்களுக்கு அளித்த அன்பிற்கு எமது நாட்டுத் தமிழ்க் கலை விருந்தால் அன்பு காட்டுகிறோம். கலைக்கு நாடு நிற ஜாதி பேதமில்லை. கலையுள்ளம் உலகுள்ளம். கலையின்பத்தில் நாம் கலந்து நிற்போம். நான் பாடும் தமிழ்ப்பாடல்களை நண்பர் பொன்னம்பலம் ஆங்கிலத்திலும் நாகாஷிமா ஜப்பானிலும், மொழி பெயர்ப்பார். உடனே மணியின் யாழும், கமலா பிடிலும், மற்றவர் குழலும் முழவும் நாத கர்ஜனை செய்தன; தமிழ்மணி தன் குயிற்குரலால் இனிது பாடினான். ஒரு பாட்டுப் பாடுமுன் மொழி பெயர்ப்பும் நடந்ததால் பாட்டின் உணர்வில் எல்லாரும் ஈடுபட்டனர். அன்று பாடிய பாடல்கள் கலை, தேசியம், வீரம், புத்தர் கருணை, ஆசிய ஒற்றுமை இவற்றைக்குறித்தே இருந்ததால் ஜப்பானியர் உள்ளம் அவற்றில் ஈடுபட்டது. புன்னாகவராளி, ரதிபதிப்ரியா, மாண்டு, பேஹாக், காபி, குந்தலவராளி, மந்தாரி, ஜுஜாவளி, முதலிய அபூர்வ ராகங்களில் பாடல்கள் அமைந்தன. ஏனெனில் இந்த ராகங்களுக்கும் சீன ஜப்பானிய ராகங்களுக்கும் பொருத்தமுண்டு.

அருளொளி பரப்புவாய்
  ஆசியாவின் ஜோதியே
இருளொழிந்து புதியவாழ்வின்
  இன்பமோங்க உலகிலே

என்று ரதிபதிப்ரியா ராகத்தில் ஜம்பை தாளம் போட்டுத்தொடங்கியதுமே சபை தலையாட்டத் தொடங்கிவிட்டது.

ஞானபூமி இந்தியா
  நவீனமாம் ஜப்பானியர்
சீனமோடு சேர்ந்துவாழச்
  செய்குவோம் நாம் உய்குவோம்

என்று பாடும்போது "ஆசிய ஜோதி வாழ்க!" என்று சபை குதூகலித்தது.

கலையினால் ஒற்றுமை
  காணுவோம் - அன்பு
    பூணுவோம்
நிலையான நட்புரிமை
  பேணுவோம்

என்று புன்னாகவராளியிற் பாடும்போது நீண்ட கரகோஷம் நடந்தது.

ஞாலமெல்லாம் அன்பு பொங்கும்
  நாகரிகத்தை வளர்ப்போம்
காலமெல்லாம் போற்றும் இன்பக்
  கலையருவியிற் குளிப்போம்

என்று மாண்டுராகத்திற் பாடும்போது சிலர் எழுந்து கூத்தாடத் தொடங்கினர்.

போர் வெறிகள் விழ்க - நம்
புத்தர் கருணை சூழ்க!
கார் மழையைப் போலே - நம்மைக்
காக்கும் தருமம் வாழ்க!

என்று மங்களம் பாடும்போது மாலைகளும், பரிசுகளும் வந்து குவிந்தன. முடிவில் தமிழ்மணி பத்து நிமிஷம் தன் கலைக்கோயிலைப்பற்றிப் பேசினன்.

"முதலில் என் சிறு மதியில் எழுந்த கலைக்கோயில் இன்று உங்கள் உறவில் சர்வதேசக் கலைக் கோயிலாக விரிந்து வருகிறது. நான் கலைகளுடன், நாட்டுக்குப் பயனுள்ள பல தொழில்களும் அதில் கற்பிக்க வேண்டும். ஜப்பான் என் கலை ஆர்வத்திற்குப் புதிய வழி காட்டியது. ஆசியாவும், ஐரோப்பாவும் கைகோத்து இன்ப நடனம் புரியவும் விசுவ கலாலயத்தை என் மனம் நாட்ட விரும்புகிறது. என் எண்ணம் செயலாக, உங்கள் அருந்துணை வேண்டும்."

நாகாஷிமா ஜப்பானில் விரிவாக கலைக்கோயிலார் 'art union' நோக்கங்களைச் சொன்னான். உடனே ஒரு கமிட்டி ஏற்பட்டது. கலைக் கோயிலுக்காகச் சில கச்சேரிகள் நடத்தத் திட்டம் போட்டனர். தோகியோ, கோப், நாகசாகி, நிப்பன் முதலிய முக்கியமான இடங்களில் கச்சேரிக்கு ஏற்பாடு செய்தனர். மணி கோஷ்டி நான்கு மாதம் வெற்றியுடன் ஜப்பானைச் சுற்றி இசை விருந்து நடத்தியது — கலைக்கோயிலுக்கு எட்டு லகாரம் சேர்ந்தது. அதை ஜெங்கின்ஸ் அப்படியே இண்டர்நாஷனல் பாங்கில் போடச் செய்தார். ஜப்பானியர், மணி கோஷ்டிக்கு தோகியோவில் சிறப்பாக விருந்தளித்து ஆடல்பாடல் நடத்தி விடையளித்தனர். "தமிழை, தமிழிசையை, தமிழ் மணியை மறவோம்" என்றனர். "ஜப்பானே உன் முன்னேற்றம் இந்திய முன்னேற்றத்திற்கு வழி காட்டியது; உன் அன்பு ஆசிய ஒற்றுமைக்கு வழிகாட்டியது; உன்னை என்றும் நினைப்பேன். தமிழரான எங்கள் நினைப்பு இங்கே என்றும் இருக்க டோகி சர்வகலாசாலையில் என்றும் ஐந்து மாணவர் கலையும், தொழிலும் பழக அனுப்புவோம். அவர்கள் செலவுக்கு இருபதினாயிரம் ரூபாய் இதோ. இதன் வட்டியிலிருந்து அவர்களைப் பயிற்றுங்கள்" என்றுதமிழ்மணி சர்வகலாசாலைத் தலைவருக்குத் தந்தான்; சாமிநாதனே முதல் மாணவனாகிக் காகிதத் தொழில் கற்க ஜப்பானில் தங்கினன். மற்றவர்கள் ஜெங்கின்ஸுடன் அமெரிக்காவுக்குக் கப்பலேறினர். நாமும் மனக்கப்பலில் அவர்களைத் தொடர்வோம்.

அத்தியாயம் இருபது

வாஷிங்டன் கப்பல்

தோகியோவிலிருந்துவாஷிங்டன் புறப்பட்டது; அதில் ஜெங்கின்ஸ் மணி கோஷ்டியை அழைத்துச் சென்றார். அமெரிக்கக் கப்பல்களெல்லாம் அக்காலம் போரில் ஈடுபட்டிருந்தன; பிரயாணக்

கப்பல்கள் சிலவே; அவற்றுள் மிகப்பெரியது வாஷிங்டன். அது ஒரு பெரிய மாளிகை போன்றது; அதில் எண்ணூறு பேர்கள் பிரயாணம் செய்தனர். அனைவருக்கும் இருக்க, குளிக்க, உண்ண படுக்க, உலாவ, படிக்க ஆடிப் பாட எல்லாச் சௌகரியங்களும் இருந்தன. "மணி பார். அமெரிக்க சிருஷ்டியை; இந்தக் கப்பல் வாஷிங்டன் காலத்தில் சிறிய அளவில் கட்டப் பெற்றது; எங்கள் வில்ஸன் இதை மிகப் பெரிதாக்கினர்; இது ஒரு பெரிய நகரம்போல் இருக்கிறது. இப்படிக் கப்பலை உன்தேசம் எப்போது கட்டப்போகிறது?"

மணி: நண்பரே, உங்கள் தேசம் சுதந்தரம் பெற்றது; எங்கள் தேசம் சுதந்தரம் இழந்து வறுமையிலும், இருளிலும் பரதவிக்கிறது. எங்களுக்கும் ஒரு வாஷிங்டன் கிடைத்து நாங்களும் விடுதலை பெற்று சுதந்தரக்கொடி நாட்டுவோம். அதன் பிறகு நாங்களும் இந்தியா என்ற பெரிய கப்பல் கட்டி உலகத் துறைகளையெல்லாம் அளப்போம்.

ஜெங்கின்ஸ்; அது வருங்கால நோக்கம். முற்காலத்தில் உங்கள் தமிழகத்தில் கப்பல் உண்டா?

மணி: மிஸ்டர் ஜெங்கின்ஸ், தமிழரே முதன் முதல் கப்பல் வாணிகம் செய்தவர்கள். எங்கள் தேக்குமரக் கப்பல் உலகை ஐந்தாறு தடவை சுற்றி வரும். இப்போது எங்கள் நாடு பிரிட்டிஷ் சந்தையானது. மாஞ்சஸ்டர் துணி மதுரைச் சந்தையில் விற்கிறது. அக்காலம் மதுரைச் சல்லாவும், சாய வேஷ்டியும், ரோமிலும், கிரீஸிலும் விற்றது. பிரான்ஸ் பிரிட்டனுக்கும்கூட நாங்கள் சரக்கனுப்பினேம். மிளகு, வாசனைச் சரக்கு, தந்தம், மயிலிறகு, போர்க் கருவிகள் முதலிய சாமான்களை நாங்கள் உலகிற்கு விற்றேம். தமிழகம் அக்காலம் கடலரசியாயிருந்தது. பதினைங்காவது நூற்றுண்டு வரையில் எமது தமிழ்க்கொடி சுதந்தரமாகப் பறந்தது. மீன், வில், புலி இம்மூன்றும் எங்கள் கொடிக்கு அடையாளம். மீன் கடலாட்சியைக் குறிக்கும். வில் போர்த்திறனைக் குறிக்கும். புலி வீரத்தைக் குறிக்கும், தமிழர் வீரச் செல்வர்.

ஜெங்கின்ஸ்: அப்படியானல் அவர்கள் இன்றேன் அடிமைகளாயிருக்கிறுர்கள்?

மணி: எந்த நாட்டுக்கும் ஆக்கமும் அழிவும் உண்டு. பிரிட்டன் ஒரு காலம் ரோமுக்கும், நார்மண்டிக்கும் அடிமையாயிருந்தது; அது போல் எங்கள் இந்திய சமுதாயமும் காலக்கேட்டால் நலங்குலைந்து, அன்னியருக்கு அடிமையானது. எல்லாம் சென்ற நூறுண்டுகளாகவே. அதன் எல்லையற்ற வாணுளில் இது பிரமாதமில்லை. கிரேக்கர், இஸ்லாமியர், போர்துகீஸியர், (பறங்கியர்) டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் முதலியோர் இந்தியாவை நயத்தாலும் பயத்தாலும் கைப்பற்றினர். முடிவில் அனைவரையும் தோற்கடித்து இங்கிலீஷ்காரரே இன்று ஏகபோகமாக எங்கள் நாட்டை ஆளுகிறுர்கள்.

ஜெங்கின்ஸ்: நாட்டை இவர்களுக்குத் திறந்தா விட்டீர்கள். யாரும் எதிர்க்கவில்லையா?

மணி: மிஸ்டர் ஜெங்கின்ஸ் நாங்கள் அவ்வளவு பேடிகளல்ல. நாட்டுரிமையைக் காக்கப் பலமாகப் போர் செய்தோம். சிவாஜி, ராணாபிரதாபசிங்கன், குருகோவிந்தசிங்கன், கட்டபொம்மு, முருகுசகோதரர், சுராஜிடௌலா, ஐதராலி, திப்புசுல்தான், பாஜிராவ், நானாசாஹேப், ராணி லக்ஷ்மிபாய், தாந்தியாதேவி முதலிய பல வீரர் கடுமையாகவே போராடினர். இன்றும் திலகர், காந்தி முதலிய தேச பக்தர்களும் சாந்தமாகச் சுதந்தரப் போர் செய்கிறார்கள். பிரிவினையும், சூழ்ச்சியும் தடை செய்தாலும், நாங்களும் ஒரு நாள் சுதந்தரம் பெற்றுத் தலை நிமிர்வோம். பிறகு பாரும், எங்களுக்கும் ஸயன்ஸ் — மூளையுண்டு. எங்களிடையும் ஒரு போஸும், ரேயும், ராமனும், ஷாவும், டாடாவும் உண்டு.

ஜெங்கின்ஸ்: மணி இவர்களைப்பற்றி நான் கேட்டிருக்கிறேன். தாகூர் விவேகானந்தர், போஸ், ராமதீர்த்தர் போன்ற மேதாவிகளைப் பெற்றதேசம் இந்தியா. உண்மை; அது சுதந்தரம் பெற்றால் உலகின் ஆத்ம குருவாக விளங்கும். எங்கள் தேசம் போல யந்திரத் தொழிலிலும் சிறந்து செழிக்கும். மணி எங்கள் நாடும் சுதந்தரம் பெற்ற பிறகுதான் முன்னேறியது. இதோ இக்கப்பலின் பெயருடைய அதே ஜார்ஜ் வாஷிங்டனே 1789-ம் ஆண்டு எங்களை பிரிட்டிஷ் நுகத்தடியிலிருந்து விடுவித்தான். அப்ரஹாம் லிங்கன் நீக்ரோவருக்குச் சுயேட்சையீந்தபிறகு, அவருள் சிறந்த புலவரும், தொழிலாளரும் தோன்றினர். டிக்கர் வாஷிங்டன் நீக்ரோ; அவன் கஷ்டப்பட்டு கல்வி கற்று துருக்கியில் அற்புதமான சர்வகலாசாலை நாட்டினான். அறிவால் அவன் தன் ஜாதியை உயர்த்தினான். எடிசன் மின்சாரத் தொழிலால் அமெரிக்காவை உயர்த்தினான். இது மாதிரியே அறிவும் தொழிலும், வீரமும் கொண்டு சுதந்திரம் பெற்றே நாடு முன்னேற வேண்டும்.

மணி: முதலில் ஒற்றுமை வேண்டும். ஜாதி மதச் சிறுமைகளும் சுயநலச் செருக்குகளும் புகுந்து பெரிய காரியங்களைத் தடை செய்கின்றன.

ஜெங்: ஆம், நான் கேட்டதுண்டு; இந்தியாவில் ஆயிரம் சாதிமதமாம்; இந்து முஸ்லிம் கலகமாம்; தீண்டாதார் உண்டாம்; வர்ணபேதமாம்.

மணி: நண்பரே வெளியார் இவற்றை மிகைப் படுத்தித் தூண்டிவிடுகிறார்கள். சுதந்திர இந்தியா ஆன்மநேயத்தில் ஒன்றுபட்டிருக்கும். ஜாதிபேதங்களெல்லாம் காலவெள்ளத்தில் மறைந்தொழியும். இந்தியா தான் சாஸ்வத ஞான நிலையம்; தர்ம நிலையம். உலகிற்கே அது நல்வழி காட்டி நடத்த வல்லது. இந்தியாவின் கை பிற நாட்டு ரத்தத்தில் தோய்ந்ததன்று; இந்தியவுள்ளம் மாசற்ற அன்புள்ளம் — இந்தியக் கலை — அருட்கலை, கடவுளுணர்வையே அடிப்படையாகக் கொண்ட தெய்வக்கலை — இதை நான் அமெரிக்காவில் விளக்குவேன்.

"மணி, நீ கூறியதை யெல்லாம் அப்படியேஒப்புக்கொள்கிறேன்" என்றார் ஜெங்கின்ஸ்.

(தொடரும்)

கதம்பம்

"மாறன்"

மகாகவி மாதவன் ஒரு பூஞ் சோலையினுள் நுழைந்தான். மலர்களின் நறுமணம் அவன் மனதைக் கவர்ந்தது. நவநவமான ரமணீயக் காட்சியில் அவன் லயித்து விட்டான். மலர்களின் வர்ணபேதங்கள் சங்கீத ஸ்வரங்களைப்போல ஒன்றோடொன்று இணைந்து இயற்கையன்னை இயற்றிய ஒரு பெரும் காவியம்போல விரிந்து கிடந்தது. அந்த மலர்க் காட்டில் நிசப்தம் எங்கும் ஆட்சி புரிந்தது.

கவிஞன் அருகிருந்த பளிங்கு மேடையின் மீது அமர்ந்தான். கற்பனை லோகத்தில் மூழ்கி விட்டான்.

மலர் உலகத்தில் அன்று என்னவோ திருநாள் போலிருக்கிறது மல்லிகைக் கொடியிலிருந்து சில பூக்கள் குதித்து வந்தன. எதிர்ப் பக்கத்திலிருந்து சில சம்பங்கிகளும் உல்லாசமாக நடந்து வந்தன. இரு மலர்க்குமரிகளையும் வரவேற்று இடமளித்தது தடாகத்திலிருந்த ஒரு தாமரை இலை. மல்லிகையும் சம்பங்கியும், அரும்பிய புன்னகையோடு, தாமரை இலையின்மீது அமர்ந்தன. சிறிது நேரத்தில் ரோஜா, செவந்தி, மந்தாரை, கனகாம்பரம், நீலாம்பரம் முதலான மலரினங்களும் தேவ கன்னிகைகள்போல வந்து அவற்றுடன் அமர்ந்தன.

அந்தப் பூங்காவனத்திலுள்ள அத்தனை மலர் இனங்களும் அங்கு வந்து சேர்ந்தவுடன் ஒவ்வொன்றும் தத்தம் தனி அழகைப் பற்றி விஸ்தரிக்க ஆரம்பித்து விட்டன. ஆனால் மனித உள்ளங்களைப் பாழ்படுத்தும் வீண் பெருமையோ, அசூயையோ அவைகளிடம் தோன்றவில்லை. ஒரே இன்பமயமான சம்பாஷணைகள்.

"என் இதழ்கள், கன்னியர் அதரங்கள் போல் எவ்வளவு மென்மையாக இருக்கின்றன பார்" என்று தன் அருகிலிருந்த சம்பங்கியைப் பார்த்துக் கூறியது ரோஜா. சம்பங்கி அதன் மெல்லிய இதழ்களில் முத்தமிட்டுவிட்டுத் தன் தூய வெண்மை நிறத்தைப் பாலின் நிறத்திற்கு ஒப்பிட்டது.

ஆயிரம் இதழ்களோடு கலகலவென்று நகைத்துக் கொண்டிருந்த செவந்தி "இதோ பார், என் இதழ்கள், தங்க நிறத்தோடு செழித்திருப்பதை. என் லாவண்

யத்தை நன்றாகப் பார்த்தாயா?" என்று குலாவியது.

"தங்கத்தின் நிறத்தை நானல்லவா பெற்றிருக்கிறேன்? அதனால் தானே எனக்குக் கனகாம்பரம் என்று கூடப் பெயரிட்டிருக்கிறார்கள்?" என்று ஒரு குதிகுதித்தது கனகாம்பரம்.

"தங்கநிறம் உனக்குத் தான் ஏகபோக உரிமை என்று நினைத்துக் கொள்ளாதே! எனக்கும் அதில் தாராளமான பங்கு உண்டு" என்று பெருமிதத்துடன் தலை நிமிர்ந்து சொன்னது தாழம்பூ, ஒய்யாரமாக.

"தங்கம் இந்த லோகத்துப் பொருள்தானே அக்கா! நான் ஆகாயத்திலிருந்தே நீல வர்ணத்தை எடுத்துக் கொண்டிருக்கிறேனே!" என்று நீலாம்பரம் சிறு குழந்தையைப்போல மழலை மொழிந்தது.

ஒவ்வொரு வகை மலரும் தத்தம் நிறத்தையே பார்த்து உள்ளம் பூரித்துக் கொண்டது. நிற பேதங்களின் அழகு நன்றாகத் துலங்கும்படியாக அவைகள் வரிசை வரிசையாக அமர்ந்தன. அப்பொழுது ரோஜா கூறினாள்: "என் பக்கத்தில் பச்சை நிறமுள்ள மலர் ஏதாவது இருந்தால், நான் இன்னும் நன்றாக சோபிப்பேன்" என்று. ரோஜா கூறியதை அருகிலிருந்த ஒரு மருக்கொழுந்துச் செடி கேட்டது. பச்சை வர்ண மலர் இல்லாத குறையைத் தீர்க்க எண்ணி, ஒரு கொத்து மருக்கொழுந்தை உடனே ரோஜாவின் பக்கம் அனுப்பியது. ரோஜாவிற்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. ஒரு துளி தேனை ஆனந்தக் கண்ணீராக வடித்து மகிழ்ந்தது.

பச்சை, ரோஜா, வெள்ளை, சிகப்பு, நீலம், மஞ்சள் ஆகிய பல வர்ணமுள்ள மலரினங்கள் அதனதன் ஸ்தானங்களில் நிறபேதங்கள் சோபிக்கும்படி அமர்ந்தன.

இவை யாவற்றையும் கவனித்துக்கொண்டிருந்த கவிஞனுடைய இதயம் பரவசமடைந்தது. கற்பனை லோகத்திலிருந்து எழுந்தான். 'மலர்ச்சேர்க்கை', 'கதம்பம்' என்று எக்களித்துக் கொண்டே அந்த மலர்களை அப்படியே நார் கொண்டு இணைத்து விட்டான். அதே சமயம் அவனுடைய காதலி புஷ்பவல்லி அவனைத் தேடிக் கொண்டு அங்கு வந்து சேர்ந்தாள். கவிஞன் தான் கட்டிய



பூங்கொத்தை அவளுடைய கூந்தலில் சூட்டினான். கரியமேகம் போன்ற அவளுடைய சடைப் பின்னலில் அமர்ந்த அந்தக் கதம்ப மலர்களுக்கு இன்னும் ஒரு புது

வர்ணம் — கருப்பு சேர்ந்து விட்டது. தங்கள் அழகையும், நிறங்களையும், மணத்தையும் இன்னும் விளம்பரப் படுத்த — தலைமேல் வைத்துக் கொண்டாட—ஒரு அழகிய மங்கைஅகப்பட்டாளென்று மலர்கள் குதூகலித்துச் சிலிர்த்தன. கவிஞன் கூத்தாட ஆரம்பித்து விட்டான். பார்த்துப் பார்த்து மகிழ்ந்தான். 'கதம்பம்; கதம்பம்' என்று கூறிக்களித்தான்.



சில நாட்கள் கழிந்தன. கவிஞன் பூஞ்சோலையை நோக்கிப் போய்க்கொண்டிருந்தான். வழியில் ஒருவன் கூடையில் ஏதோ கொண்டு போனான். கூடையிலிருந்து மலர்களின் வாசனை வரவே "கூடையில் என்ன?" என்று கேட்டான் கவிஞன்.

புஷ்ப வியாபாரி கூடையைக் கீழே இறக்கி "கதம்பம், மொளம் அரையணா" என்றான். "அரையணா" என்ற வார்த்தை கவிஞன் உள்ளத்தில், கூரிய அம்புபோல் தைத்தது. அவனால் ஒன்றும் பேசவே முடியவில்லை. "ஏனுங்க முழிச்சாப்போல நிக்கிறீங்க?" என்று கூறி விட்டுப் புஷ்ப வியாபாரி போய் விட்டான்.

"அடடா! மனிதன் அழகிற்கல்லவா விலை கூறிவிட்டான். இயற்கை, எத்தனை கோடி காலம் முயற்சித்துப் பெற்றது இந்த அழகை! மனிதன் அதை அற்பக்



காசுக்கு மதித்து விட்டானே! மனித இனத்திற்கே உரியதான அழகுணர்ச்சிக்கும்கூட வரி விதிக்கிறானே! என்ன மனிதர்கள்! இனி, சூரிய ஒளியைக்கூடப் பணமாக்கிவிடுவான் இந்த மனிதன்! ஹூம், அது அவன் குற்றமல்ல! அவனை ஆட்டி வைக்கும் விதியின் வேலை" என்று முனகிக் கொண்டே பழையபடி பகற் கனவு காணச் சென்றான் கவிஞன்!

தாகம் தணிந்தது

[கு. ப. சேதுஅம்மாள்]

கீழ் வானம் பொன்னிறம் பூத்து, நிலம் தெளியும் பொழுது. அருகாமையிலிருந்த பாசறைகளிலிருந்து முரசுகளும், தப்பட்டை, தாரை முழக்கங்களும் எழுந்தன.

அயர்ந்த நித்திரையிலிருந்த அர்ஜுனன், அந்தப் போர்ப்பறைகளின் முழக்கத்தைக் கேட்டதும் உதறிக்கொண்டு விழித்தெழுந்தான். கலைந்த ஆடைகளைச் சரிப்படுத்திக்கொண்டு வீராவேசத்துடன் கிளம்பும் அர்ஜுனனை, வலம்வந்து வணங்கி நின்றாள் சுபத்திரை.

அவளுடைய வாடிய முகத்தைக் கண்ட அர்ஜுனனுக்கு அவள் மீது இரக்கமும், அன்பும் பொங்கி எழுந்தன.

வாஞ்சை ததும்பிய குரலில் "சுபத்ரா, என்ன துயரம் உனக்கு? இன்றைய யுத்தத்தில் கர்ணன் உன் பர்த்தாவை வெற்றி கொண்டு விடுவானே என்று....."

பேசுவதைச் சட்டென்று நிறுத்தி விட்டு ரோஷத்தால் கண்களில் நீர் ததும்ப முகம் சிவந்து தன்னையே உற்றுப் பார்த்துக் கொண்டு நிற்கும் சுபத்திரையைக் கண்டதும், அந்த யுத்த அவசரத்திலும்கூட சற்று விளையாடத் தான் தோன்றிற்று அவனுக்கு!

மலர்ச்சி கொண்ட முகத்தில் இன்ப நகை காட்டி நின்றான் பார்த்தன்.

நிமிர்ந்து முகத்தைப் பார்த்து உரத்த குரலில் பேச அப்போது தான் துணிந்து முன் வந்தாள் சுபத்திரை!

"என்ன என்ன கேட்டீர்கள்?" என்றாள்.

அவளுடைய எடுப்பைக் கண்ட அர்ஜுனன் கலகலவென்று சிரித்து விட்டு "பின் ஏன் இந்தக் கலக்கம் உனக்கு, வழக்கத்திற்கு மாறாக? பயப்படாதே. உனது பதி வெற்றிக் கோஷத்துடன் ஜயலக்ஷ்மி சமேதனாக உன்னிடம் வருவான் — சந்தோஷமாக எனக்கு விடை கொடு ப்ரியே!"

"அதற்குச் சித்தமாக இருக்கிறேன்! அப்புறமாக ஒரு பிரார்த்தனை" என்று சுபத்திரை நிதானமாகத் தெரிவித்தாள்.

"என்ன அது?"

"இன்று...தாங்கள் யுத்த அரங்கத்திற்குச் செல்லு முன்பாக, தங்கள் தாயாரைக் கண்டு அவர்களுடைய ஆசீர்வாதம் பெற்றுச் செல்ல வேண்டும் என்பதே எனது பிரார்த்தனை" என்றாள்.

"பிரதி தினமும் நான் செய்யும் வழக்கம்தான் அது! இன்று அதில் என்ன விசேஷ பலன் எதிர் பார்க்கிறாய் நீ? சொல்லுகிறேன் கேள், சுபத்திரா:

யுத்தத்தின் ஆரம்ப தினத்திலிருந்து நாங்கள் ஐவரும் குந்தி தேவியை வணங்கித்தான் விடையும், ஆசீர்வாதமும் பெற்றுச் செல்வது என்பது நீ அறிந்தது தானே? அதை மறந்து விட்டுப் போய் விடுவேனா நான்? அல்ல!

உன் மனது எனக்குத் தெரியாமலில்லை. சங்கை கொள்ளாதே. ஸ்ரீதரனுடைய நட்பினர்களான பாண்டவர்களை ஜயிக்க, ஒரு கர்ணனல்ல; ஆயிரம் கர்ணர்கள் வந்தாலும் இயலாது! எவ்வளவு புத்திசாலி! ராஜ்ய காரியங்கள் யாவும் தெரிந்த நீயா இவ்வாறு கலங்குவது? — பார்த்தனுடைய மனைவி, விருஷ்ணி குலத்துதித்த பெண்மணி — அச்சமுறுவது என்ருல்......''

''ஜயசீல, பரிகசிக்க இதுவா சமயம்? விளையாடிக் கொண்டிருக்கும் நேரமா இது? அதோ பாருங்கள்! கௌரவசேனையின் ஆரவாரத்தையும் யுத்தரங்கத்தின் ஊழியையும்!'' என்று சாளரத்தின் வாயிலாகத் தெரியும் யுத்த வெளியைச் சுட்டிக் காட்டிச் சொன்னுள் சுபத்திரை.

''ஆம்! நினைவடைந்து விட்டேன். சென்று வருகிறேன்'' என்று புறப்பட்ட பாண்டவ வீரனுக்கு ரக்ஷா திலகமிட்டு திருஷ்டி கழித்து, சற்று தூரம் தொடர்ந்து சென்று வழி அனுப்பி விட்டுத் திரும்பி வந்தாள் சுபத்திரை.

அன்று ஏதோ அவள் மனதில் பளு தென்பட்டது! அதைத் தாங்கும் வேதனை — ஒரு விசித்திர அனுபவமாகத் தோன்றிற்று அவளுக்கு.

முதல் நாள் கேள்விப்பட்ட துர்ச் செய்தியை நினைத்து நினைத்து உள்ளமும், வயிறும் பதை பதைக்க இராத்திரி முழுதும் தத்தளித்த குந்தி, அந்த விடியற்காலை வேளையில் அயர்ந்து தூங்கினுள், தன்னை மறந்தவளாக.

அயர்ந்து தூங்கும் தாயை எழுப்ப மனமற்றவனுக சற்று தயங்கினன் அர்ஜுனன். ஆனல் அவளை வணங்கி ஆசீர்வாதம் பெருமல் செல்லவும் அவனுக்கு மனது வரவில்லை. அன்றைக்குத்தான அவள் அப்படித் தூங்கிவிட வேண்டும்? இப்படியும் அப்படியுமாக சற்று உலாவினன். நேரம் நகர யுத்த பூமியின் பேரொலிகள் காதுகளைச் செவிடுபடச் செய்வனபோல அவ்வளவு அமளிப்பட்டது. பரபரப்புடன் தன் தாயின் மஞ்சத்தை அணுகி மெதுவாகத் தொட்டு எழுப்பினன்.

திடுக்கிட்டுக் கண் விழித்தாள் குந்தி.

கவசமும், வில்லும் அம்பறுத் தூணியுமாக எதிரே நிற்கும் விஜயனைக் கண்டதும் ஒருதரம் உலுக்கி விழுந்தாள்!

அவளுடைய பீதியைக் கண்டு ஒன்றும் விளங்காமல் ஒரு விடி ஸ்தம்பித்து நின்று விட்டு ''தாயே, நமஸ்கரிக்கிறேன்'' என்ருன் வினயத்துடன்.

''சிரஞ்சீவிகளாக இருங்கள் அப்பா!'! என்று முணுமுணுத்தாள் குந்தி.

அர்ஜுனன் பிரமித்தான்! சிரஞ்சீவிகளாக' என்று தனக்குள் ஒரு தரம் சொல்லிக் கொண்டான். 'என்ன இது? இங்கிருப்பதும், வணங்கியதும், நான் ஒருவன் தானே? என் தாய்க்கு ஏனிந்தக் கலக்கம் — தடுமாற்றம்? அங்கு ஏனே சுபத்திரை அவ்வாறு கலங்கி நின்ருள் என்றும் இல்லாதபடி! இங்கேயோ வெனில் நாத்தடுமாற ஆசீர்வதிக்கிருள் அன்னை! இது என்ன விசித்திரம்?'

இவ்வாறு எண்ணி சற்று அலர்ந்து நின்று விட்டு மறுபடியும் தாயை வணங்கி ''அம்மா, யுத்த பூமிக்குச் செல்கிறேன். என்னை

ஆசீர்வதியுங்கள் தாயே'' என்று அவளுடைய பாதங்களைத்தொட்டு வணங்கி நமஸ்கரித்தான்.

''எழுந்திரு அர்ஜுனா, ஜயசீலனாகத் திரும்பிவா! ஆம், இன்று கர்ணனுக்கும், உனக்கும்தான்...'

இதைக்கேட்டுவிட்டு நாவைக் கடித்துக் கொண்டாள் குந்தி. எதைக் கேட்கக்கூடாது என்று இருந்தாளோ அதே அவளையறியாமல் கேட்க நேர்ந்து விட்டது. தன் அஜாக்ரதையை எண்ணிப் பதறினாள். பயத்தினால் முகத்தில் முத்து முத்தாக வியர்வை துளிர்த்தது அவளுக்கு — அந்த இளங்காலையில்!

அர்ஜுனனுக்கும் தன் தாயினுடைய அந்த க்ஷணநேரத்துச் செய்கை, பெருவியப்பாக இருந்தது. அவளைக் கண் கொட்டாமல் பார்த்தபடியே ''ஆம் அம்மா! அகங்காரம் கொண்ட அந்தக் கர்ணனை இன்று மடித்தாக வேண்டும், தாயே. தங்களுடைய மனம் நிறைந்த வாழ்த்துத்தான் எனது முக்ய அஸ்திரமந்திரமாகும்......''

சட்டென்று இடை மறித்தாள் குந்தி ''போய்வா அர்ஜுனா, சத்ருக்களை வெல்வாய், ஜயலக்ஷ்மி உன்னைப் பிரியாமலிருக்க வேண்டுகிறேன். சென்று வெற்றி விஜயனாகத் திரும்பிவா'' என்றாள் பயம் தொனித்த குரலில்.

மேலும் மேலும் இதைப்பற்றிச் சிந்திக்கவோ, பேசவோ சாவகாசமற்ற தருணம் அது! அர்ஜுனின் மனது குழம்பலாயிற்று. அத்துடனேயே அன்னையிடம் விடை பெற்று யுத்தத்திற்குச் சென்று கொண்டிருந்தான்.

மனது கிடந்து தவித்தது அவனுக்கு. கர்ணனை ஜயிப்பதில் யாவருக்குமுள்ள உற்சாகம், நம் தாய்க்கு ஏனில்லை? அதைப்பற்றி அசிரத்தையா — அல்லது,.......... தெரியவில்லையே! அவனுடைய பாதகத் தன்மை யாவும் அறிந்த குந்திதேவி ஏன் அவனுடைய வதத்தில் கருத்தற்று இருக்கிறாள்?

இன்னும் யோசித்தான் தீவிரமாக! நமது யூகம் பிசகு! கருத்தற்று இல்லை; அவளுடைய முகத்தைப்பார்த்தால் — 'ஐயோ, அவனையா கொல்லுகிறாய்?' என்று ஏங்குவதுபோல அல்லவா இருந்தது; சொல்லப் போனால், என்ன மாயம் இது? பகைவன்; நமது ஜன்ம சத்ரு, அவனுக்கும், இவளுக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது? ஒரு வேளை அவனுடைய அசகாய சூரத்தன்மையைப் பார்த்து, வியந்து அவன்மீது அபிமானம் கொண்டு விட்டாளோ — எனக்கு ஈடாக மதித்து?

சை! இந்தக் குழப்பம் எனக்கு அபாயத்தை விளைவிக்கக்கூடியது. என் விரோதியை நான் வெல்ல வேண்டியவன். மற்றவைகளெல்லாம் அதற்கு அப்புறம் — என்று ஒருபட்ட மனதுடன் தோள்கள் துடிதுடிக்க காண்டீபத்தைச் சுழற்றிக் கொண்டே யுத்த பூமிக்கு விரைந்தான் அர்ஜுனன்.

அவனுக்காகக் காத்திருந்த பெரும்படை அவனைக் கண்டதும் சமுத்திரம்போலப் பொங்கியெழுந்து அர்ஜுனனுக்கு முன்னும் பின்னுமாக முறைப்படி பிரிந்து சென்றன.

அவனுக்கு முன்பாக அங்கு தேரைக் கொண்டுவந்து நிறுத்திக் கொண்டு காத்திருந்தான் யது வீரன்!

சூரியன் சாய்ந்த மேல்வானம் யுத்த பூமியின் சிவப்பையொத்து

செக்கச் செவேலென்று தீப்பிழம் பாக இருந்தது.

ஒவ்வொரு வினடியும் துர்ச் செய்தியை எதிர்பார்த்த வண் ணம் கொதிக்கும் மனதுடன் காத் திருந்தாள் குந்தி.

தாதி ஒருத்தி முகம் மலர குதித் தோடி வந்து "அம்மா, விஜயன் வெற்றி கொண்டார். அந்த அகங்காரியான கர்ணனை வீழ்த்தி வெற்றி கொண்டார்... தம் மூத்த புத்திரர் தங்களிடம் ......"

'ஆ' என்றலறினுள் குந்தி, அண்டம் கிடுகிடுக்க. கன்றைப் பறிகொடுத்த பசுவைப்போலக் கதறிக்கொண்டு ஓடும் குந்தியைப் பின் தொடர்ந்து தாதிகளும் கூடவே ஓடினர்கள்.

தலைகால் தெரியாமல், மேலா டை நழுவ, தன்னை மறந்தவளாக "ஓ" என்றலறிக்கொண்டு— கை களை உயரத் தூக்கியபடியே கர் ணனைப் பார்க்க ஓடும் குந்தியைக் கண்டுவிட்டு தர்மன் விரைந்து சென்று தாயைப்பற்றி நிறுத்தி "என்னம்மா" என்று கேட்டார்

"ஆ! விடு என்னை, விட்டுவிடு! ஐயோ, தர்மா விடு என்னை. கர்ண — என் செல்வமே; நிகரில்லாத வனே......என்று உரத்த குரலில் கூவிக் கொண்டு, பிடித்திருந்த தர்ம புத்திரனை ஒரு உதறு உதறி விடுவித்துக் கொண்டு பாய்ந் தோடினுள்.

அவளுடைய ஆவேசத்தையும், குமுறலையும் கண்டு ஒன்றுமே விளங்காதவர்களாக சிலைபோல நின்றூர்கள் பாண்டவர்கள்.

குந்தியின் அந்த இடிக்குரலின் பிரலாபத்தால் திசைகளதிர்ந்தன. மார்பில் தைத்த பாணத்துடன் தன் தாயைப்பற்றி சிந்தித்துக் கொண்டிருந்த கர்ணனுடைய செவியில் குந்தியின் அழுகுரல் ஒரு இன்பத் தாரையாகப் பாய்ந் தது.

"ஆ, வந்து விட்டாள் என் மாதா! என்னைப் பெற்றவள்! என் அம்மா வந்து விட்டாள்! என் பிறவிக் கவலை தீர்ந்து விட்டது! இனி பரமசாந்தியாக, பரம திருப் தியாக வீர சுவர்க்கம் செல்வேன்" என்று பெருமிதம் கொண்டது கர்ணனின் பேருள்ளம்!

அம்புபட்ட வேதனையைத் துளி கூடப் பாராட்டாமல், உவகை பூத்த முகத்துடன், பூரித்த புஜங் களிரண்டும் செயலற்று யுத்த பூமியில் சாய்ந்திருக்கும் கம்பீர ஞன கர்ணனை தூரத்திலேயே கண்டு கொண்டாள் குந்தி.

மேடுபள்ளம் தெரியாமல் இட றிவிழுந்து கொண்டு, ஓடிவரும் தன் அருமைத்தாயைக் கண்டதும் கர்ணனுடைய கண்களில் கரகர வென்று நீர் பெருகிற்று. சோர் ந்து பேசச்சக்தியற்றுப் போன தால் மெதுவாக வரும்படி கை அமர்த்திக் காட்டினுன் கர்ணன்.

பாய்ந்து வந்து மகனுடைய அந்தக் கையைப் பற்றிக் கொண்டு 'ஓ'வென்று அலறி மூர்ச்சை யுற்று அவன் மேலேயே பொத் தென்று சாய்ந்தாள்.

தன் அத்தனை துயரும் நீங்கிவிட் டது போலஉணர்ந்தான் கர்ணன். சிறு குழந்தைபோல விம்மிக் கொண்டே, தன் மீது கிடக்கும் ஸ்மரணையற்ற தாயை இறுக அணைத்துக்கொண்டு, "அம்மா, அம்மா" என்று, திரும்பத்திரும்ப பலமுறை அழைத்தான்.

தன் அன்னையின் அணைப்பின் பத்தில் சூழ்நிலையை மறந்தே

போனான் கர்ணன். அவனுடைய அமிர்த தாரை போன்ற அழைப்பு காதில் விடாமல் ஒலித்ததில் நினைவு பெற்றுக் கண்விழித்தாள் குந்தி.

சுற்றுமுற்றும் பார்த்தாள். தன் சுய உருவை பிராமண ரூபத்தில் மாற்றிக் கொண்டு யாசகத்திற்காக அருகில் நிற்கும் கிருஷ்ணன், தன் குமாரர்கள், ஆசாரியர்கள் சிற்றரசர்கள் ஒரே கும்பல். அனைவரும் பேச்சற்று ஆரவாரம் கொந்தளித்த அந்த யுத்த ரங்கம் நிசப்தமாக இருந்ததும் ஒரு பயங்கரமாகவே இருந்தது.

வெட்டுண்டு கிடக்கும் பிணக் குவியலின் மீது அதையே சயனமாகக் கொண்டு படுத்திருக்கும் தன் மூத்த குமாரனைக்கண்டு பார்த்துப் பார்த்துப் பரவச மெய்தி, துக்கமெய்தி, சோகம் தலைகொண்டுபோக, வாயில் வந்ததையெல்லாம் புலம்பிக் கொண்டு அவன் சரீரத்தைத்தடவி தன் புடவையால் ரத்தம் கசியும் அவனுடம்பைத் துடைத்து விடும் குந்தியைக் கண்டு அங்கிருந்த எல்லாரும் திகைத்தார்கள்!

அதொன்றையும் கவனிக்காமல் தன் கருத்தே கருத்தாக குந்தி தன் எழில் மகனுடைய வீர வடிவைத் துடைத்துத் தூய்மைப் படுத்தி கொஞ்சநேரம் வரையில் மௌனமாக தன் மடியில் அவனை வளர்த்திக்கொண்டு பார்த்து விட்டு, "புத்திரா, என் கண்மணீ, என் மகனே இன்று உன்னை உலகமறியட்டும்" என்று கண்ணீர் ஆருய்ப் பெருக மேல் வானத்தை நிமிர்ந்துபார்த்து "சூர்யநாராயண பகவானே, இவ்வுலகில் மகா பாபி நான். என்னை, இன்று உலகத்திற்கு முன்பு உமது புத்ரனுடைய மாதாவாகக் காண்பித்து விட்டேன். தேவா, புழுதியில் படுத்திருக்கும் உம் ஒளி மைந்தனை இதோபாரும்" என்று உரக்க அழுதாள்.

அவளுடைய பொருமல் சற்று தணிந்ததும், தர்மன் மெல்ல தமது குரலை எழுப்பினர், "தாயே, சற்று இப்படித் திரும்பி என்னைப்பாருங்கள்."

"ஏனப்பா?"

"இந்தக் கர்ணன் யார்?"

"என் மூத்த குமாரன், உன் தமையன்,"

"உண்மையாகவா?"

"திக்பாலகர்கள் சாக்ஷியாக உண்மை."

திக்பாலகர்கள்! திக்! அவர்கள் எனக்கு உண்மையைத் தெரிவித்தார்களா — உமக்கு சாக்ஷியாக இருந்தவர்கள்? இப்போது என் தமையனை எங்கள் கையால் கொன்று விட்டோமே, இதற்கு யார் பிணை? சகோதரனைக் கொன்ற பாபத்திற்கு யார் பொறுப்பு?

....

"என் பேசாமலிருக்கிறீர்களம்மா?"

"தர்ம, வாயாற வசைகள் பொழி, வருத்தமில்லை!"

நறநற வென்று பற்களைக் கடிக்கும் மூத்தோனைக்கண்டு அசைவற்றுப் போனர்கள் மற்றைய நால்வர்களும். சினமென்பதை அறியாத தர்மன் சர்ப்பத்தைப் போல சீறியெழுந்தான். 'உம், இவ்வளவு நாட்களாக இதை எவ்வாறு மனதில் வைத்துக் கொண்டிருந்தீர்களோ தெரியவில்லையே' என்று ஆங்காரம் பொங்கியவராக தர்மபுத்திரன் தரையை அதிர மிதித்து மூண்டெழுந்த தமது

சினத்தை தீ மொழிகளாக்கி தரையைப் பார்த்து, "பூமிதேவி, எல்லையற்றவளே, அறி! இனிமேல் உன் இனத்தார் மனதில் ரகஸ்யமென்பதே தங்காமற்போகட்டும்" என்று வாயாறச் சொல்லி தன் ஆற்றாமையைத் தணித்துக் கொண்டு, பிறகு அரைப் பிரக்ஞையுடனிருக்கும் கர்ணனுடைய பாதங்களில் விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து எழுந்து, "சரி, அர்ஜுனா, நம் வினையை சற்றாவது விலக்கிக் கொள்ள ஒரே பரிகாரமிருக்கிறது. சட்டென்று சென்று நீ என் கிரீடத்தையும் செங்கோலையும் எடுத்துவா. பீமா நீ ஓடிச் சென்று கங்காஜலம் கொண்டு வா. இரட்டையர்களே, ஓடுங்கள் சீக்கிரம், நம் சிம்மாதனத்தையும், சத்தி சாமரைகளையும் கொண்டு வாருங்கள். பாஞ்சாலி, போய் மகாராணி பொன்னுருவி தேவியாரை அழைத்து வரச் சொல். சீக்கிரம்" என்று பறந்தார்.

நினைத்த மாத்திரத்தில் அனைத்தும் அங்கே சித்தமாகிவிட்டன. அப்படியே அம்பு தைத்த மார்புடனேயே அவனை சக்கரவர்த்தியாக்க முற்பட்டார் தர்மன்.

பீமனால் கொண்டு வரப்பட்ட கங்கை நீரைத் தெளித்து ராஜ உடைகளும் கிரீடமும் அணிவித்து செங்கோலைக் கையில் கொடுத்தார் கிருஷ்ணன். அதற்குள்ளாகவே கர்ணனுடைய தர்ம பத்தினியான பொன்னுருவியை அலங்கரித்து கர்ணனுக்கருகில் அமர்த்தினார்கள். தர்மனும், பீமசேனனும் கவரிபோட அர்ஜுனன் குடை பிடிக்க நகுல சகாதேவர்கள் சாமரை வீச முகூர்த்த காலம் கர்ணன் சக்கரவர்த்தியாக பூமண்டலத்தை ஆண்ட திருப்தியை அடைந்தார்கள்.

குந்தியினுடைய மனம் குளிர்ந்தது. கர்ணன் நினைவுற்றவனாக சுற்று முற்றும் பார்த்து "சிறந்த அந்தணரே எங்கிருக்கிறீர் வாரும். நீர் கேட்ட கவச குண்டலங்களைப் பெற்றுக் கொள்ளும்" என்று சொல்லி, அவற்றை யெடுக்க ஆயத்தமானான் கர்ணன்.

அவனுடைய அப்பொழுதைய முகப் பிரகாசம், பாலசூரியனையும் மிஞ்சியதாக இருந்தது!



முதுமையில் இளமை

★

வி. ஸ. காண்டேகர்

"நாடகமேடையின்மேல் கண்ணிமைப் பொழுதில் கன இருளாக மாறும் வெளிச்சத்தைப் போல், இன்று வெளியே ஆகாயத்திலும் கூட வெயிலுக்கும் நிழலுக்கும் விளையாட்டு ஆரம்பமாகியிருந்தது.

"அம்மாடி! இந்த மேகங்கள் என்ன தான், நினைத்துக் கொண்டிருக்கின்றனவோ தெரியவில்லை" என்று பெட்டியில் ஆடைகளை அடுக்கிக் கொண்டிருந்த மாலதி கூறினாள்.

"கடவுள் உன்னைப் போக வேண்டாமென்று சொல்லுகிறார் மாலதி! இல்லா விட்டால் இவ்விதம் நீ போகிற நேரமாகப் பார்த்து மழை பெய்யுமா?" என்று பதிலளித்தாள் மாலதியின் தாய் பார்வதி.

"என்ன ...?" புடவையின் கலைந்த மடிப்பைச் சரிப்படுத்திய வாறு மாலதி கேட்டாள்.

"நீ இங்கிருந்து போவதில் கடவுளுக்கு இஷ்டமில்லை"

ஆஹா? கொஞ்ச நேரத்துக்கு முன் எவ்வளவு நன்றாக வெயில் காய்ந்து கொண்டிருந்தது? ஆனால் கொஞ்ச நேரத்தில்...? எங்கிருந்தோ தெரியவில்லை. திடீரென்று மேகங்கள் குமுறிக் கூடின. சல்லடையிலிருந்து விழும் மாவைப் போல மழைத் துளிகள் ஆகாயத்தினின்றும் மண்ணின் மேல் விழ ஆரம்பித்தன.

அன்பு கனிந்த பார்வையுடன் மாலதி தாயைப் பார்த்து, "ஏனம்மா? பிறந்த வீட்டில் இருப்பதற்குக்கூடயாராவதுசலிப்படைவார்களா என்ன?" என்று கூறினாள்.

"அதெல்லாம் வெறும் பேச்சுத்தான்?" என்றாள் பார்வதி.

"பின்னே என்ன உன்னைக் கட்டிக் கொண்டு இங்கேயே உட்கார்ந்து விடச் சொல்லுகிறாயா?"

இவ்வார்த்தைகளை மாலதி என்னவோ வேடிக்கைக் காகத்தான் கூறினாள் என்றாலும், பார்வதியின் கண்களில் கண்ணீர் வந்து விட்டது. தாயின் கண்களில் நீரைக் கண்டதும் மாலதிக்கு என்னவோ போலிருந்தது. கையிலிருந்த புடவையை அப்படியே கீழே போட்டுவிட்டுத் தாயிடம் ஓடி வந்து அவள் கழுத்தைக் கட்டிய வாறு அவளைத் தேற்ற ஆரம்பித்தாள். ஆனால் தாயின் கண்களைத் துடைக்கப் போய் அவள் கண்களிலேயே நீர் வந்து விட்டது, கங்கை, யமுனையின் பிரவாகமெல்லாம் தோற்றுப் போகும்படி.

"இரண்டு குழந்தைகளுக்குத்

தாயாகியும் கூட இன்னும் உன் குழந்தைத் தனம் போக வில்லையா மாலதி?" என்று கேட்டாள் பார்வதி.

"ஏன்? நான் என்ன செய்தேன்...?"

"இப்படி யாராவது அழுவார்களா...?"

"ஏழு பேர்களுக்குப் பாட்டியானவள் எடுத்ததற் கெல்லாம் அழும் போது இரண்டு குழந்தைகளுக்குத் தாயானவள்......"

"மிகக் குறைவாகத்தான் அழ வேண்டும்! வேண்டுமானல் கணக்குப் போட்டுப் பார்!" என்று முடித்தாள் பார்வதி.

"இதோ பார்! மறுபடியும் வெயில் வந்து விட்டது!" என்று பேச்சை மாற்றினுள் மாலதி.

மழை நின்று, வெளியே சூரியனின் பிரகாசம் ஜ்வலித்துக் கொண்டிருந்தது. சூரியனின் பிரகாசமும், மழையின் மந்தாரமும் கண்ணுமூச்சி விளையாடிக் கொண்டிருந்தன போலும்!

திண்ணையில் மாலதியின் தந்தை பாக்கை இடித்துக் கொண்டிருந்தார். இடையிலே பாக்கு இடிக்கும் சத்தம் நின்று "மாலதீ" என்று அவர் குரல் கேட்டது."

"ஏனப்பா?" என்று உள்ளிருந்தவாறே கேட்டாள் மாலதி.

"பஸ் வரும் நேரம் ஆகி விட்டதம்மா! சீக்கிரமாகட்டும்!"

மாலதி கீழே சிதறிக் கிடந்த பொருள்களை யெல்லாம் ஒன்று சேர்ப்பதில் முனைந்தாள். அவள் மகன் நிர்மல் தவளைகளின் சப்தத்தைக் கேட்பதில் ஈடுபட்டிருந்தான். கைக் குழந்தை மாலினி தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தாள்.

பஸ்ஸின் 'ஹார்ன்' சப்தம் கேட்டது. மாலதி குழந்தைகள் சகிதம் கடவுளைக் கும்பிட்டு, பின் தாய் தந்தையரின் காலில் விழுந்து நமஸ்காரம் செய்தாள்.

"பாட்டியிடம் போய் வருகிறேன் என்று சொல்லுடா கண்ணு!" என்று மாலதி நிர்மலைப் பார்த்துச் சொன்னுள்.

"போய்ட்டு வரேன் பாட்டி!" என்ருன் நிர்மல்.

பெண் குழந்தையை மாலதி இடுப்பில் வைத்திருந்தாள். தாத்தாவைக் கண்டதும் குழந்தை அவரிடம் போகக் கையை நீட்டியது. பார்வதியின் மனம் நிரம்பி விட்டது. 'காம்பவுண்டு' சுவர் வரைக்கும் பார்வதி சென்று மகளுக்கு விடை கொடுத்து வழியனுப்பினுள். அப்பா 'மோட்டார் பஸ்' வரை சென்ருர். பார்வதி காம்பவுண்டு சுவரருகிலேயே நின்று கொண்டாள். வீட்டிற்குள் திரும்ப அவள் மனம் மறுத்து விட்டது. தாயின் இடுப்பில் இருந்தவாறு சேலையை விலக்கி எட்டிப் பார்க்கும் குழந்தையைப் போன்ற அவளது சிறு வீடு அவளுக்குப் பயங்கரமாகத் தோன்றியது. எவ்வளவு அழகான வீடு! ஆனல் இப்போது எவ்வளவு 'வெறிச்' சென்று இருக்கிறது? தேனில்லாத சப்பாத்தி பார்ப்பதற்கு அழகாகத் தான் தோன்றும். ஆனல் ருசிப்பதற்கோ...?

பார்வதிக்கு வாழ்க்கை ஒரு பப்பாளிப் பழம் போல இருப்பதாகத் தோன்றியது. ஒரு முனையில் தித்திப் பென்ருல் இன்னெரு முனையில் கசக்கிறது, அவள் தித்திப்

பான முனையிலிருந்து பழத்தை உண்ண ஆரம்பித்தாள். ஆகவே கசப்பான முனைக்கு வந்து தானே தீரவேண்டும்?

பார்வதி பெருமூச்சு விட்டபடி துக்கம் நிறைந்த பார்வையுடன், ஒரு முறை வீட்டைப் பார்த்தாள்.

இவ்வீட்டிலேயேதான் அவள் நாற்பது தீபாவளிகளைப் பார்த்திருக்கிறாள். ஆனால் இன்றைய தினத்தைப் போல், தனியாக—மிகவும் தனியாக இருக்க வேண்டிய சந்தர்ப்பம் அவளுக்கு இந்த நாற்பது வருஷங்களில் ஒரு நாள் கூட வாய்க்கவில்லை. அவளுக்குக் கலியாணமானபோது, மாமனார், மாமியார், நாத்தனர், மைத்துனர் முதலியவர்களால் வீடு நிரம்பிக் காணப்பட்டது. ஆனால் கிணற்றிலிருந்து சிறிது சிறிதாக இறைக்கப் படும் நீரைப் போல, ஒருவர் பின் ஒருவராக வீட்டிலிருந்து மனிதர்கள் குறைந்து கொண்டே வந்தார்கள். அப்படியிருந்தும் கூட கிணற்றில் பெருகும் ஊற்றைப் போல் அவர்கள் வாழ்க்கையிலும் ஒரு ஊற்று இருந்தது. பார்வதிக்கு மூன்று ஆண் குழந்தைகள் பிறந்தன. ஆசைக்கு ஒரு பெண் வேண்டுமென்ற காரணத்தாலோ என்னவோ அதற்குப்பின் கடைசிக் குழந்தையாக 'மாலதி'யும் தோன்றினாள். வருஷங்கள் கழியக் கழிய குழந்தைகள் வளர்ந்து படித்துப் பெரியவர்களும் ஆனார்கள். பெரியவர்களானதும் மூத்த இருவர் சம்பாதிப்பதற்கும், கடைசிப் பையன் படிப்பதற்குமாக வெளியூர் சென்று விட்டார்கள். மாலதி மட்டும் வீட்டிலேயேதான் இருந்தாள். நாட்கள் செல்லச் செல்ல மாட்டுப் பெண்களும் வீட்டுக்கு வந்தார்கள். அதற்குப் பின் மாலதிக்குக் கலியாணமாகி புக்ககம் சென்று விட்டாள். அதனால் வெளியூர்களில் பிள்ளைகளுடன் வசித்து வந்த மாட்டுப் பெண்கள் அடிக்கடி மாமியார் வீட்டுக்கு வந்து சில நாள் தங்கி விட்டுப் போவது வழக்கம். ஆனால் இந்த முறை பலவித வேலைகளில் முனைந்திருந்ததின் காரணமாகவும், பல அசந்தர்ப்பங்களாலும், மாட்டுப் பெண்களில் ஒருத்தியாவது வரவில்லை. பிறந்தகத்துக்கு வந்திருந்த மாலதியைக் கூடப் புக்ககம் ஆகர்ஷித்துக் கொண்டிருந்தது. பார்வதிக்கு தன் வாழ்க்கையில் முதன் முறையாகத் தன் வீடு வற்றிய குளத்தைப் போலத் தோன்றியது. அவளால் வீட்டைப் பார்க்க முடியவில்லை. மேலே பார்த்தாள். அருகிலிருந்த மரத்தின்மேல் ஒரு பறவையின் அழகிய கூடு தென்பட்டது. ஆனால் அதில் குஞ்சுகளின் கலவரம் ஒரு சிறிது கூடக் கேட்கவில்லை. 'என்ன...? இந்தப் பறவையின் கூட்டைப் போலவே தன் வீடும்சூன்யமாகி விடுமா...?' அவள் மனதில் மிக்க வேதனையாக இருந்தது. அவள் மீது கணவன் அன்பு செலுத்தவில்லை என்று சொல்ல முடியுமா? துணி மணி, நகைநட்டு, முதலிவை முதற்கொண்டு எந்தச் சிறிய வஸ்துவிலேனும் ஒரு சிறிதேனும் குறை நேர விட்டிருப்பாரா? அது மட்டுமா? வாழ்க்கையில் ஒரு நாளாவது தப்பித்தவறி பார்வதியை ஒரு தரமாவது வைதிருப்பாரா? அவள் எந்தப் பொருளை விரும்பினாலும் அந்தப்பொருளை அவர் அந்தக் கணமே கொண்டு வந்து கொடுக்கத் தவறியிருப்பாரா?... கிடையவே கிடையாது!

ஆனாலும்......? கணவனின் இந்த நிர்மலமான நாற்பது வருட அன்பு அதில் மனதைத் திருப்தி

செய்யவில்லை......! திறந்த காற்று திறந்து வயலிலும் கிடைக்கிறது. தோட்டத்திலும் கிடைக்கிறது. எனினும் தோட்டத்தில் கிடைக்கும் மணமிக்க மந்த மாருதம் வயலில் கிடைக்குமா?

அவளது இதயத்துக்கு வேறென்னவோ வேண்டியிருந்தது. அதைத் தன் கணவனின் பார்வையில் பெற முயற்சித்தாள் அவள். கலியாணத்தின் போது அவரது பார்வை பொம்மை பெற்ற குழந்தையின் மகிழ்வைப் போல, ஆனந்தத்தைச் சொரிந்தது. பின், முதல் இரவில் அவரது அந்தக் காந்தம் போன்ற பார்வை பொம்மைக்

குப் பதிலாகத் திண்பண்டம் பெற்ற குழந்தையின் மகிழ்ச்சியைச் சொரிந்தது. அதற்குப் பின் குழந்தைகள் பிறந்தன. கணவருக்குப் பணமும் பதவியும் உயர்ந்தன. அவரது பார்வையில் முதலில் இருந்த விஷமம் மறைந்து கம்பீரம் விளங்கியது. ஆனல் பார்வதி எதை விரும்பினளோ அது அவரது பார்வையில் கிடைக்கவே இல்லை. "அநேகம் மலர்களின்இதழ்கள் பார்வைக்கு மட்டும் அழகாகத் தோன்றும். அப்பேர்ப்பட்ட மலர்களை முகர்ந்து மூக்கைக் கெடுத்துக் கொள்வதால் என்ன பயன்?" என்ற எண்ணம் பார்வதிக்குத் தோன்றுவதுண்டு இந்தச் சமயத்தில் இன்னெரு நினைவும் அவளது மனதில் பலவந்தமாகப் புகுந்து கொள்ளும்......

"முதன் முறை அவள் கர்ப்பவதியான காலம். ஆருவது மாதம் நடந்து கொண்டிருந்தது. கை கால்களில் பலம் குறைந்திருந்தது. மாமியார் கொஞ்சம் முரட்டுச் சுபாவமுள்ளவள். ஆகவே அவ்வளவு சீக்கிரம் பார்வதியைப் பிறந்தகத்துக்கு அனுப்பி விட விரும்பவில்லை.

ஆனல் அதற்குப் பதிலாகப் பார்வதியின் வேலைகளில் ஏதாவது ஒரு சிறிய குறை தென்பட்டாலும் அவளது வாயினின்றும் வார்த்தைகள் மடை திறந்த வெள்ளம் போல வெளி வந்து விடும். அப்போது பார்வதியின் கணவர் பார்வதியைப் பார்த்து, "உன்னுடைய நிலைமை பரிதாபகரமாகத் தானிருக்கிறது. மனம் விரும்பும் பொருள் மீதுகூட வெறுப்பேற்படும் காலம் இது! ஆனுலும்......

பார்வதியால் மாமியாரின் தொந்தரவைச் சகிக்க முடியவில்லை. அவளும் கணவரைப் பார்த்து, "நீங்கள் சொல்வது உண்மை தான். உங்களுக்குக் குழந்தை வேண்டும். ஆனல்......"

"யார் வேண்டாமாம்?"

"என்ன ஆசை?"

"நாம் எங்காவது சென்று தனியாக வாழலாமென்று..."

"அந்த ஆசையை என்னல்

நிறைவேற்றமுடியாது." என்று கூறினர் அவள் கணவர்.

மாமியாரின் தொந்தரவிலிருந்து விடுபட வேண்டு மென்ற எண்ணத்தால் முதலில் பார்வதி இவ்விதம் கூறி விட்டாளாயினும், அதற்குப் பின் அதைப் பற்றிய எண்ணமே அவளுக்கு இல்லாமற் போய் விட்டது. ஆனல் அவளது கணவர் இவ் வார்த்தைகளை வெகு நாட்கள் மனதிலேயே வைத்திருந்தார். அன்று முதல் தான் எவ்வித சுதந்திரத்தையும் கணவனிடமிருந்து எதிர் பார்க்க முடியாது என்ற எண்ணம் பார்வதியின் மனதில் வேரூன்றி விட்டது.

கணவர் நாற்பது வருடங்களாக அவள் மீது அளவற்ற அன்பு வைத்திருந்தார். ஆனல் அந்த அன்பு, 'அவள் தன் மனைவி' வீட்டுக்கு ராணி, தன் குழந்தைக்குத் தாய்' என்ற அளவில் தான்......

மாலதியை வழியனுப்பி விட்டு, கணவர் வந்து கொண்டிருப்பதைப் பார்வதி பார்த்தாள். தோளின் மீதிருந்த துண்டால் கணவர் தனது கண்களைத் துடைத்துக் கொண்டிருப்பதைப் பார்வதி கண்டாள். வீட்டின் தனிமை அவருக்கும் துயரத்தைக் கொடுத்திருக்க வேண்டு மென்று அவள் நினைத்துக் கொண்டாள். அவர் வருவதைக் கண்ட பார்வதி அருகிலிருந்த மரத்தின் மறைவில் நின்று கொண்டாள். கணவர் நேராக வீட்டை நோக்கிச் சென்றார். ஆனல் அவர் வீட்டுக்குள் நுழையவில்லை. அக்கம் பக்கம் திரும்பிப் பார்த்தார். பள்ளிக்கூடம் விட்டதும் ஆனந்தத்துடன் வீட்டுக்கு ஓடிச் சென்று தன் தாயை "அம்மா" வென்று ஆர்வத்தோடு அழைக்கும் சிறு குழந்தையைப் போல் "பார்வதீ!" என்று கூப்பிட்டார்.

பார்வதி அவரது குரலைக் கேட்டாள். ஆனல் ஆச்சர்யத்தின் காரணமாக அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. கலியாணத்துக்குப் பின் வாலிபத் தசையின் மனே நிலையில் கூட அவளது கணவர் அவளை என்றுமே பெயர் சொல்லி அழைத்ததில்லை.

பார்வதி நாதன் (?) வாசற்படி ஏறி வீட்டுக்குள் சென்றார். 'வீட்டிற்குள் போகட்டுமா?' என்று ஒரு கணம் பார்வதிக்குத் தோன்றியது. ஆனல் மழையைக் கண்ட சாதகப் பட்சி வாயை மூடிக் கொள்ளுமா? அவள் அங்கேயே நின்றாள்.

உள்ளிருந்து மறுபடியும் குரல் கேட்டது..."பார்வதீ!" என்று.

இது வரை சூரியனின் பிரகாசம் கண்ணைக் கவர்ந்து கொண்டிருந்தது. ஆனல் இப்போது திடீரென்று மழை பெய்ய ஆரம்பித்தது.

"நாம் நனைந்து கொண்டிருக்கிறோமே என்ற நினைவு கூட பார்வதிக்குத் தோன்றவில்லை. கணவனின் குரல் மட்டும் அவள் காதில் ஒலித்துக் கொண்டிருந்தது. வீட்டின் புழக்கடையிலிருந்து அவர் குரல் கேட்டது: "பார்வதீ!"

அவரது பழக்கமான குரலைக் கேட்ட புழக்கடையிலிருந்த பசுமாடு "அம்மா......!" வென்று அழைத்தது.

தன்னைத் தேடிக் கொண்டு 'அவர்' புழக்கடைக்குச் சென்றிருக்க வேண்டுமென்று நினைத்தாள் பார்வதி. அவள் அங்கேயே நின்றாள். வாழ்க்கையின் இந்த மாது

ரியமான — களிப்புமயமான — இன்பமான — கண்ணுமூச்சி விளையாட்டை நாற்பது வருஷங்களில் முதன் முறையாக 'அவளும் — அவரும்' விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

ஆகாயத்திலும் அதே மாதிரி தான். மேற்கு நோக்கி மெதுவாக நகர்ந்து கொண்டிருந்த சூரியனும், மேகங்களோடு மிகக் களிப்புடன் கிரீடை செய்து கொண்டிருந்தான்.

சரசர வென்று பொழிந்து கொண்டிருந்த மழையில் 'அவர்' அலைந்து கொண்டிருந்தார். 'ஓ' வென்று சத்தமிட்டவாறு வெளிப் பட்டு விடலாமா என்று பார்வதி நினைத்தாள். ஆனல் மனதிற்கும் உதட்டிற்கும் எப்போதும் நட்பு இருந்து கொண்டே இருக்கிறதா என்ன? ஒரு வார்த்தை கூட அவள் வாயிலிருந்து வெளிவர வில்லை. பார்வதி நின்றிருந்த இடத்தை நோக்கி அவர் வந்து கொண்டிருந்தார். மரத்தருகில் மழையில் நனைந்தவாறு நின்று கொண்டிருந்த பார்வதியைக் கண்டதும் அவர் சிரித்துக் கொண்டே ''இவ்விதம் மழையில் நனைந்து கொண்டே நிற்பதற்கு நீ இன்னும் குழந்தையா பார்வதி!'' என்று கேட்டார்.

''நீங்களும் பெயர் சொல்லி அழைப்பதற்கு......?''

''பெயர் சொல்லி அழைக்க வேண்டிய காரணமும் இருந்தது!''

''அது என்ன காரணம்?''

''இன்று மாலதி போனது நல்ல தாயிற்றல்லவா?''

''ஊரத்தான் தெரியும் உங்களுக்கு. யாராவது இதைக் கேட்டால் கூட......''

''உண்மையில் இன்று மாலதி போனதில் எனக்கு மிகவும் திருப்தி!''

''ஆண்களின் மனமே கல் தானே!''

''நீ என்ன சொன்னலும் சரி. எனக்கென்னவோ ஆனந்தமாகத் தான் இருக்கிறது!''

''அதனுல் தான் கண்ணைத் துடைத்துக் கொண்டிருந்தீர்களாக்கும்! எந்த விதத்தில் ஆனந்த மென்ருவது சொல்லுங்கள் பார்ப்போம்?''

''எல்லாருடைய கடனையும் தீர்த்து விட்டேன். ஆனல் ஒரே ஒரு கடன் தீர்க்க வேண்டியது தான் பாக்கியிருந்தது.''

''என்ன? மாலதி அவ்வளவு சுமையாகவா இருந்தாள்? விரலை முகர்ந்தால் வயிறு நிரம்புமா? தெளிவாகச் சொல்லுங்கள்,யாருடைய கடன் பாக்கி என்று!''

''உன்னுடைய கடன் தான்''

''என்னுடைய கடனு? எனக்கு ஒன்றுமே ஞாபகமில்லையே?''

''நீ தாராள மனதுடையவள் போலிருக்கிறது. நாற்பது வருஷங்களாயின. இன்னும் அந்தக் கடனைத் தீர்க்க வில்லை நான்?

''அப்படியானல் தவணை மீறி விட்டது!''

மீறினல் என்ன? எனக்கு ஞாபகமிருக்கிறதே!

அவர் பார்வதிக்குமிகவும்அருகில் வந்தார். பார்வதியைக் காதல் கனிந்த பார்வையுடன் பார்த்து, ''உன்னுடைய ஒரு ஆசையை இதுவரைக்கும் நான் பூர்த்திசெய்யவில்லை!'' என்ருர்.

"எந்த ஆசை?" என்று கேட்டாள் பார்வதி.

"இரண்டு பேரும் எங்காவது தனியாக இருக்க வேண்டுமென்ற ஆசையை! நீயும் நானும் மட்டும் தனியாக இருக்க வேண்டுமென்ற ஆசையை! இன்று நாற்பது வருஷங்களில், இன்றுதான் சந்தர்ப்பம் வாய்த்தது பார்வதி.....!"

பார்வதி அவர் கண்களை நோக்கினாள்.

"மண மண்டபத்தில் மணப்பெண், படுக்கையறையில் பத்தினி, வீட்டில் வீட்டின் ராணி, வாழ்க்கையில் இரண்டு குழந்தைகளின் தாய்! என்ற நோக்குடன் இதுநாள் வரை 'அவர்' அவளைப் பார்த்து வந்தார்! ஆனால் அவரது இன்றைய அந்தப் பார்வை? முற்றிலும் புதிதாக இருந்தது. கிணற்றிலிருக்கும் வறண்ட ஊற்று மறுபடியும் பெருக்கெடுத்தது போல் பார்வதியின் மனதில் காதல் ஊற்று பெருக்கெடுத்து ஓடியது.

"'மிருச்சகடிகா'வைப் பார்த்திருக்கிறாயா?" என்று கேட்டார் அவர்.

"சிறு வயதில் பார்த்திருக்கிறேன்" என்று பதிலளித்தாள் அவள்.

"அதில் வசந்தசேனை இப்படித்தான் நனைந்து கொண்டு போகிறாள், இல்லையா?"

வயோதிகத்தை இரண்டாவது பாலப் பருவம் என்று சொல்வது எவ்வளவு உண்மை என்று பார்வதிக்கு இப்போதுதான் தெரிந்தது. அவள் தனது மகிழ்ச்சியை மறைக்க மேலே நோக்கினாள்.

மரத்தின் மேல் கூட்டில் ஏதோ நடமாட்டம் தென்பட்டது. மழையில் நனைந்த பறவைகளில் ஒன்று உடம்பின் மீதிருந்த தண்ணீரை உதிர்த்துக் கூட்டுக்குள் பிரவேசித்தது.

ஆகாயத்தில் வானவில் தோன்றியிருந்தது. அதன் உருவம் தெளிவாக இருந்தாலும் அதில் ஏதோ ஒரு குறையிருப்பதாகப் பார்வதிக்குத் தோன்றியது. அங்கிருந்து பார்வையைத் திருப்பிக் கீழே பார்த்தாள். கீழே இருந்த நீரிலும் ஒரு வானவில் இருந்தது. மேலே இருந்த வில்லின் பிரதிபிம்பம்தான் அது. ஆனால் அவ்வளவு தெளிவாக இருக்கவில்லை. ஆனாலும் அது எவ்வளவு தெளிவற்று இருந்ததோ அவ்வளவு கவர்ச்சிகரமாகவு மிருந்தது!

[இந்த மராத்திக் கதையைத் தமிழ்ப்படுத்தியவர் எச். விஜயகுமார்]

★

பிரதிக்ஞை

"ஸ்கந்தன்"

லக்ஷ்மி மரணப் படுக்கையில் இருந்தாள். அவளுக்கு வயது முப்பத்தெட்டுதான். ஆனால், மூச்சுத் தடுமாறிக்கொண்டு முகமெல்லாம் வெளிறிப் போய், கை கால்கள் நடுங்கிக் கொண்டு அவள் அங்கு படுத்துக் கொண்டிருந்ததைப் பார்த்தால் எண்பது வயதுக் கிழவி போலக் காணப்பட்டாள். ஏதோ பிசாசைக் கண்டு மிரள்வது போல் அவள் கண்கள் ஒரு நிலையில்லாமல் உருண்டு கொண்டு இருந்தன.

அழுதுகொண்டே படுக்கைக்குப் பக்கத்தில் சுவர்ணலதா உட்கார்ந்து கொணடிருந்தாள். லக்ஷ்மியைவிட அவள் இரண்டு வயது பெரியவள். ஒரு சோக நாடகத்திற்கு வேண்டிய நாடக மேடை போலிருந்தது அந்த அறை. படுக்கைக்குப் பக்கத்தில் ஒரு மேஜை நிறைய மருந்து புட்டிகள் அடுக்கப்பட்டு இருந்தன. உடைந்த கண்ணாடி புட்டிகள் அறையெல்லாம் சிதறிக் கிடந்தன. மூலையில் உடைந்த நாற்காலி ஒன்று விழுந்து கிடந்தது.

★

அவர்களது வாழ்க்கையே ஒரு சோக நாடகம். இருபது வருஷங்களுக்கு முன் லக்ஷ்மி பி. ஏ. வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள். தாயில்லாப் பெண்களுக்கு வாழ்க்கையில் எவ்வளவு சுதந்திரம் உண்டோ, அவ்வளவு லக்ஷ்மிக்கும் சுவர்ணுவுக்கும் இருந்தது.

எதிர் வீடுகளில் இருப்பவர்கள் எவ்வளவு காலம்தான் சிநேகிதராகாமல் காலங் கழிக்க முடியும்? சந்திரசேகரன் வெகு விரைவில் லக்ஷ்மியின் தகப்பனருக்கு அறிமுகமாகி விட்டான். நன்ருகப் பழகின பிறகு சந்திரன் தன் பெண்களோடு வார்த்தையாடுவது அவருக்கு வித்தியாசமாகத் தோன்றவில்லை. ஆனல் லக்ஷ்மியின் இளம் உள்ளத்தில் மட்டும் அது கொந்தளிப்பை உண்டாக்கி விட்டது. அவளுக்கு எல்லாம் புதுமையாக இருந்தது. ஆனல் சுவர்ணுவிற்கோ வயதிற் கேற்ப குணங்கள் முதிர்ந்திருந்தன. அடக்கமும், பொறுமையும் பொருந்திய அவள் மனம் சந்திரனிடம் ஒவ்வொரு நாளும் புதிதாக ஒரு அழகைக் கண்டு ஆனந்தப்பட்டது. சந்திரனின் மனமும் நெகிழ்ச்சியடைய அதிக நாளாகவில்லை. இந்தக் காதல் மொட்டு மலராக அரும்பி வளர்வதை அறிந்து மகிழ்ச்சி யடைந்த தகப்பனர் சூட்டோடு சூடாக கலியாணத்திற்கும் நாள் பார்த்து விட்டார். ஆனந்தமாக இருந்த இவர்களது வாழ்க்கையில் பேரிடி விழுந்தது. இன்பக் கனவுகள் கண்டுகொண்டிருந்த சந்திரனின் வாழ்க்கைப் படகு மரணச் சுழலில் அகப்பட்டுத் திடீரென்று மூழ்கியது. அவர்களது வாழ்க்கையும் அந்தகாரத்தில் மூழ்கி விட்டது.

இந்தத் துக்கத்தை ஆற்றுவதற்கு சுவர்ணுவின் தகப்பனர் வேறு

கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்தார். விவாகம் என்ற பேச்சுக்கே சுவர்ணு உடன்படவில்லை. துக்கத்துடன் படுத்த அவள் தகப்பனர் மறுபடி எழுந்திருக்கவேயில்லை. கொடிய இத்துன்பப் புயல் அடங்கிய பிறகு லக்ஷ்மியும் சுவர்ணுவும் ஒன்ருக வாழ ஆரம்பித்தனர். "விவாகமே இல்லாமல் எப்போதும் உன்னுடனேயே வாழப் போகிறேன்" என்று சுவர்ணுவிடம், லக்ஷ்மி பிரதிக்ஞை செய்தாள். தன்னிடம் உள்ள வாஞ்சையினுல் தன் தங்கை தன்னைத் தேற்றுவதற்காக பிரதிக்ஞை எடுத்துக்கொண்டாள் என்று நினைத்தாள் சுவர்ணு. அன்பு மிகுதியால் லக்ஷ்மியைத் தழுவிக் கொண்டாள். ஆனுல் லக்ஷ்மி தன் பிரதிக்ஞையிலிருந்து தவறவேயில்லை. அவர்களது துன்பங்களை அறிந்து லக்ஷ்மிக்கு அநேக வரன்கள் வந்தன. ஆனுல் அவள் ஒரே பிடிவாதமாக விவாகத்தைப் புறக்கணித்தாள். பிரதிக்ஞையின் உறுதி அதிதீவிரமாக இருந்தது. ஒழுக்கம் ஊர் வாயை மூடிவிட்டது.

★

இதெல்லாம் பழங்கதை. லக்ஷ்மியும் சுவர்ணுவும் கைகோர்த்துக் கொண்டு வாழ்க்கைப் பிரயாணம் செய்தனர். இருபது வருடங்கள் இந்த ஒன்றுபட்ட வாழ்வில் கழிந்தன.

நாளுக்கு நாள் லக்ஷ்மியிடம் மாறுதல் ஏற்பட்டு வந்தது. அவள் ஏதோ துயரத்தில் ஆழ்ந்தவள் போல் காணப்பட்டாள். பிரதிக்ஞையின் வீரியமே அவளை வருத்துவதுபோலத்தோன்றிற்று. சுவர்ணுவைவிட வயதானவள் போல தலை நரைத்து நோயாளியாக இருந்தாள். இப்போது சாகக் கிடந்தாள்.

வாய்திறந்து பேசி நாள்க் கணக்கில் ஆகி விட்டது. மூடியிருந்த வாயிலிருந்து அன்று மாலைதான் மெல்லிய குரலில் பேச்சுக் கிளம்பிற்று.

"அக்கா என் கடைசி காலம் நெருங்கிவிட்டது. என் அருகில் உட்கார். நான் உனக்கு ஒரு விஷயம் சொல்ல வேண்டும்."

உதடுகள் அசைந்த போது அவள் உடல் முழுதும் நடுங்கிற்று. பயங்கரமான கனவு கண்டவள் போல அவள் கண்கள்மிரண்டன. பயத்தினுல் உள்ளத்திலிருந்து வார்த்தைகள் வெளிவர மறுத்து விட்டன.

இந்த பரிதாபக்காட்சி சுவர்ணலதாவின் உடைந்த இதயத்தை மேலும் புண்படுத்தியது. பக்கத்தில் இருந்த மருந்தை அவசர அவசரமாக லக்ஷ்மியின் உதடுகளில் நனைத்தாள். மூச்சுத் திணறல் எல்லாம் அடங்கிய பிறகு "உடம்பு என்னம்மா செய்கிறது?" என்று கண்ணீரைத் துடைத்துக்கொண்டே கேட்டாள். கண்களை விழித்தவுடன் லக்ஷ்மி திடீரென்று தாவி சுவர்ணுவின் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

"அக்கா என்னை மன்னிப்பாயா?" என்ற கதறல் அவள் உதடுகளிலிருந்து கிளம்பியது. மேலே பேச முடியாமல் ஆயாசத்தினுல் படுக்கையில் சாய்ந்து விட்டாள்.

அறை ஒரே நிசப்தமாக இருந்தது. பட்பட வென்று அடித்துக் கொண்டிருந்த லக்ஷ்மியின் இதயத்தை ஏளனம் செய்வது போல் அங்கிருந்த கடிகாரம் நிதானமாக

டிக் டிக் கென்று ஓடிக் கொண்டி ருந்தது.

லக்ஷ்மியின் மனதை அறிய முடியாத சுவர்ணாவின் உள்ளமோ ஒரு நிலையில்லாத வழியில் ஏதேதோ எண்ணங்களுக்கிடையில் அலைந்து கொண்டிருந்தது.

"அக்கா என்னை மன்னித்து விடு; என் வாழ்க்கை பூராவும் இந்த ஒரு வேளை வரக் கூடாதென்று நான் பட்ட மனவேதனையை உன்னால் அறிய முடியாது" என்று கம்மிய குரலில் லக்ஷ்மி மெதுவாகப் பேசினாள்.

"லக்ஷ்மி, நானா உன்னை மன்னிப்பது. உன் வாழ்க்கையையே எனக்காகப் பாழாக்கிக் கொண்டதற்கு நீ தானே என்னை மன்னிக்க வேண்டும்?" ...... இதைப் பேசி முடிக்கும்படி லக்ஷ்மி விடவில்லை.

அக்கா நான் சொல்வதைக் கேள். தடை சொல்லாதே. உண்மையை முழுதும் உனக்குச் சொல்லி விடுகிறேன் ...... ஆனால், ஐயோ, பயமாக இருக்கிறது...... உட்கார், சொல்லுகிறேன்......... சந்திரன்......"

மௌனமாக உட்கார்ந்திருந்த சுவர்ணலதாவை இந்த வார்த்தை தட்டி எழுப்பியது. லக்ஷ்மி தொடர்ந்து சொல்லிக்கொண்டு போனாள்.

"......அப்பா உயிரோடு இருக்கும் போது—எனக்குப் பதினெட்டு வயது. எதிர் வீட்டில் சந்திரசேகர் இருந்தாரே? ஞாபகம் இருக்கிறதா?"

அவர் அப்பாவைப் பார்ப்பதற்கு அடிக்கடி நம் வீட்டிற்கு வருவாரல்ல? அப்போதெல்லாம் அவரைப் பார்ப்பதற்கு எனக்கு ஆனந்தம் பொங்கும்.



தீபாவளி யன்று புதுத் துணியுடன் அப்பாவை நமஸ்காரம் செய்ய வந்தாரே! அன்றுதான் முதன் முதலாக என் உள்ளத்தை அவரிடம் பறி கொடுத்தேன். அன்று முதல் என் மனதில் சந்திரன் சந்திரன் என்று ஸ்மரித்துக் கொண்டே இருந்தேன். அவர் நம் வீட்டிற்கு வந்து "அப்பா இருக்கிறாரா?" என்று புன்னகையுடன் கேட்கும் போதெல்லாம் என் மனம் பொங்கும்—அவர் என்னைக் காதலிக்கிறார் என்ற நினைவினால்!

"அப்பா ஒரு நாள் கேட்டார் "சுவர்ணாவுக்குத் தகுந்த வரன் தானே சந்திரன்? சீக்கிரம் முடிச்சுப் போட்டுவிட வேண்டும் என்ன சொல்கிறாய்? சரிதானே!" என்றார் சிரித்துக் கொண்டே.

என் இன்பக் கனவுகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தது இது. சரிதானா! என் ஆசைகளை உடைத்தெறிவது எனக்குச் சரிதானா! அன்றிரவு நான் தூங்கவேயில்லை.

மறுநாள் சாயங்காலம் அவர் மறுபடி வந்தார். நான் கதவிடுக்கால் பார்த்துக் கொண்டிருந்தேன். அவர் சிரித்த முகமாய் ஏதோ சொன்னார். நீ பூரித்துப் போனாய். என்னைப் பொறாமை பிடிங்கித் தின்றது.

கல்யாணத்திற்கு இன்னும் பத்தே நாட்கள்தான். அவர் உன்னை மணந்துக் கொள்ளப் போகிறார் என்ற எண்ணத்தை என்னால் தாங்கவே முடியவில்லை. உங்களைக் கொன்று விடலாம் போலிருந்தது எனக்கு. பொறாமை வெறுப்பாக மாறியது. அவரை மனதார வெறுத்தேன்.

தாயில்லாமல் வளர்க்கப்பட்ட என் உள்ளம் தன் இஷ்டப்படியெல்லாம் செய்து பழக்கப்பட்டிருந்தது. துணிச்சலாகத் தீர்மானம் செய்ததைத் தடுப்பவர்கள் யாருமில்லை. பாறை போல் இறுகின நெஞ்சில் காதலின் ஏமாற்றம் அன்பை அடியோடு அணைத்து விட்டது. என்னை ஏன்தான் படிக்க வைத்தீர்களோ? படிப்பின் உதவியால் என் மனம் வேகமாகப் பல யோசனைகளைச் செய்தது. கோணல் வழியில் சென்று ஒரு தீர்மானத்துக்கு வந்து விட்டது.

மறுநாள் வழக்கம் போல் அவர் வந்தார். அப்பாவுடன் ஏதோ பேசிக் கொண்டிருந்தார். தினம் செய்வது போல நீயும் அவருக்காக காப்பி போட்டாய். ஒரு அசட்டு ஆசையால் கண்ணாடியில் அழகு பார்த்துக் கொள்ளப் போனாய். ஒரு கணம் யோசனை செய்தேன். உடம்பில் திடீரென்று நடுக்கம்; நெற்றியில் வியர்வை அரும்பியது. என்ன செய்கிறோம் என்று யோசிக்காமலேயே அதைச் செய்து விட்டேன். மனது அடித்துக் கொண்டது. ஒரே ஓட்டமாக ஓடிப் போய் படுக்கையில் விழுந்தேன்... மறுநாள்......... அது உனக்குத் தெரிந்ததுதானே? அவர் இறந்து விட்டார். அது மட்டுமல்லாமல் மற்றொன்றும் தெரிந்தது. அப்பாவும் அந்தக் காப்பியை........"

"லக்ஷ்மி!" என்று அலறினாள் சுவர்ணா. பயங்கரமாக மாறிவிட்டது லக்ஷ்மியின் முகம். விடாது பேசியதால் மார்பு படபடத்தது. வெளியே மழை சிறு தூற்றலாக ஆரம்பித்து தடதட வென்று பலமாகப் பொழிய ஆரம்பித்தது.

மூச்சுத் திணறல் அடங்கிய பிறகு மறுபடி பேச ஆரம்பித்தாள் லக்ஷ்மி. "அப்பா இறந்த பிறகு என் உள்ளம் என் குரூரச் செய்கையை இடித்துக் காட்டியது. மனம் வேதனையில் தத்தளித்தது. செய்த தீமைக்கு ஈடாகத் தான் பிரதிக்ஞை செய்தேன். ஆனால் பிரதிக்ஞையின் படி நடந்தால் வேதனை பிடித்த மனம் நிம்மதியடையவில்லை. உன்னிடம் எப்போதாவது எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டு நீ மன்னித்தால் மனச்சாந்தி அடைய வேண்டுமென்று நினைத்தேன். ஆனால் சொல்லுவதற்கு ஒரு தரம் கூட தைரியம் உண்டாகவில்லை. இப்போதோ சாகக்கிடக்கிறேன். இறந்த பின் ஒரு வேளை அவரை நான் சந்திக்கலாம். உன் மன்னிப்பில்லாமல் அவருடைய முகத்தில் விழிக்க எனக்குத் தைரியமில்லை. சுவர்ணா! என்னை மன்னித்துவிடு......."

அந்த அறையில் சற்று நேரம் நீண்ட மௌனம். சுவர்ணாவின் மனம் கடந்ததை நாடிச் சென்றது. கண்களில் நீர் ததும்ப நடந்தவைகளைச் சிந்தித்தாள்.

"சுவர்ணா என்னை மன்னிக்க மாட்டாயா?" என்ற லக்ஷ்மியின் தீனமான குரல் சுவர்ணாவின் இந்தக் கனவுகளைக் கலைத்தது.

லக்ஷ்மியின் வாடிய கைகளைப் பிடித்துக் கொண்டு "உன்னை மன்னித்து விட்டேன்" என்று அழுது கொண்டே சொன்னாள் சுவர்ணா.

பெரும் பாரம் ஒழிந்தது போல் லக்ஷ்மி பெரு மூச்சு விட்டாள். ஒரு சூன்யமான வறண்ட புன்னகையுடன் கண்கள் மூடின. அசூயையால் நேர்ந்த கொடுஞ் செயலுக்குப் பிரதிக்ஞை ஈடு செய்ததா?

வாழ்க்கைக் காட்சி:

இரண்டு சித்திரங்கள்

ஆசிரியர்: "வாணி"

மொழி பெயர்ப்பு: ஜெயலக்ஷ்மி ஸ்ரீநிவாசன்

கங்காராமன் சட்டை அணிந்து கொண்டு வேலைக்குப் புறப்பட்டான். இரண்டடி எடுத்து வைப்பதற்குள் வள்ளி உட்புற மிருந்து குழந்தையை எடுத்துக் கொண்டு வந்தவள், அவன் தோளைப் பிடித்து ஆட்டி, நகைத்த வண்ணம், "நான் சொன்னது மறக்க மாட்டீர்களே?" என்ருள்.

கங்காராமன் திரும்பிப்பார்த்து சிரித்த வண்ணமே, "எதை, வள்ளி நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்?" என்ருன்.

"இப்பொழுது சொன்னதை இப்பொழுதே மறந்துவிட்டால், இன்னும் இரண்டுநாள் நினைவு வைத்துக்கொண்ட மாதிரிதான்."

"கிடக்கிறது வள்ளி, இன்னெரு தடவை சொல்லிவிடு. எனக்கு மறதி அதிகம்...... இந்தத்தடவை உன் ஆணைக்கு மறக்கமாட்டேன்"

"அதுதான் நாளைக்கு சாமுண்டேஸ்வரி பண்டிகை. கிராம தேவதை உற்சவம். எல்லோரும் பண்டிகை கொண்டாடுகிருர்கள். குழந்தைக்கு வந்திருந்த காயலாவில் ஈஸ்வரி இவ்வளவுமட்டும் தயவு காண்பித்தாளே! நாமும் பண்டிகை செய்து வேண்டுதலை செலுத்த வேண்டாமா? நாளைக்கு காலையிலே 'லீவ்'வாங்கிக்கொண்டு வந்துவிடுங்கள், அப்படியே சம்பளத்தில் கொஞ்சம் முன் பணமும் வாங்கிக்கொண்டு, வரும்வழியில் சாமான்களும் வாங்கி வந்து விடுங்கள் ... வீட்டில் ... ஒன்றும் இல்லை ..." என்ருள்.

கங்காராமன், "வள்ளி, பணம் எங்கே இருக்கு? போனமாதமே குழந்தையின் காயலாவிற் கென்றும், துணி மணிக்கென்றும் இந்த மாத சம்பளத்தை முன்பணமாக வாக்கிக் கொள்ளவில்லையா? இப்பொழுது திரும்பவும் கேட்டால் யஜமானர் என்ன நினைப்பார்?" என்ருன்.

வள்ளி சும்மா இருந்தாள். கங்காராமன் திரும்பவும், "பார்ப்போம் வள்ளி கவலைப்படாதே. இந்தத்தடவை எப்படியாவது கொடுத்துத்தான் ஆகவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒருவேளை ஐயா கொடுக்காமற் போனுலும், அம்மாவைக் கேட்டால் கொடுக்காமற் போகமாட்டார் வள்ளி. நீ எவ்வளவோ சந்தோஷமாகப் பண்டிகை, பருவங்களைச் செய்து கொண்டு சந்தோஷமாக இருந்தவள். என்னைக் கலியாணம் செய்துகொண்டு என்னதான் சுகப்படுகிருயோ! என் கஷ்டத்தைக் கடவுள் என்றைக்குத்தான் அறிவாரோ?"

"கிடக்கிறது, விடுங்கள் இதற்கேன் இத்தனை பரிதவிப்பு. உங்களைக் கலியாணம் செய்து கொண்டு சுகப்படுகிறேனே, கஷ்டப்படுகிறேனே அது எனக்கல்லவா தெரியும்! நீங்களல்ல, சொல்வதற்கு! வேலைக்கு நேரமாக வில்லையா?"

கங்காராமன் புறப்பட்டான். குழந்தை அவனைப் பிடித்துக் கொண்டு "அப்பா நானும் வருகிறேன்" என்றது.

"வேண்டாமப்பா, நான் உனக்குப் பொரிகடலே வாங்கியாரேன் இங்கேயே இரு"

"எனக்குப் பொரி ஆணும்...... நானும்...... உன்னேடே...... வாரேன்...ஊ...ஊ......ம்...!"

குழந்தைமெல்லியராகம் இழுத்துக் கொண்டே அவன் காலைப் பலமாகக் கட்டிக்கொண்டது. கங்காராமன் அதை எடுத்துக் கொண்டு, சமாதானம் செய்து, "நீ வந்தால் ஐயர் சும்மா இருப்பாரா? அவர்கள் வீட்டு வாசற்புறம் எத்தனைபருமன் பூச்சாண்டி இருக்கான் தெரியுமா? இதோ இத்தனை பருமன்! குழந்தை குட்டிகள் போனல் 'லபக்'னு முழுங்கியே விடுவானே" என்று அபிநயம் செய்து காண்பித்துக் கொண்டே பலவந்தமாகக் குழந்தையை வள்ளியிடம் கொடுத்து விட்டு "குழந்தையைப் பார்த்துக் கொள் வள்ளி; அழவிடாதே," என்று சொல்லிவிட்டுக் கொஞ்ச தூரம் போவதற்குள்ளாக வள்ளி பின்புறமிருந்து ஓடிவந்து மறுபடியும் அவன் தோள்மீது கையை வைத்தாள். கங்காராமன் திரும்பிப் பார்த்து சிரித்துக்கொண்டு "இன்னும் என்ன வள்ளி? இன்னும் என்னைப் போகவிட மனமில்லையா!" என்ருன்.?

"மனமில்லாவிடினும் விட வேண்டுமே! என் முன்னல் உட்கார்ந்திருந்தால், வயிறு நிரம்புமா? பார்!...சமயம் பார்த்துக் கேள். ஐயரிடத்தில் சும்மா வசவு வாங்காதே. நீ சிரித்துக்கொண்டு சந்தோஷமாக இருந்தால் போதும். அதே எனக்குப் பண்டிகை."

கங்காராமன் வள்ளியை அன்பு குழையப் பார்த்தான். அந்த வட்டாரத்திலேயே அழகான பெண் அவள். முகத்தில் படிந்து புரண்ட ஒன்றிரண்டு கூந்தற் சுருளும், அன்புபொழியும் கண்களும் காசு அளவு வைத்திருந்த குங்குமப் பொட்டும் களையாக இருந்தது.

சுற்றிலும் பச்சைப் பசேலென்ற வயல்வெளி. காலைப் பொழுதின் தென்றல். அப்பொழுதுதான் விழித்துக்கொண்ட இரண்டொருவர் வாய்க்கால்ப் புறம் போய்க்கொண்டிருந்தனர். கங்காராமன் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டே மனதினுள் 'இருளால் நிறைந்த இந்த வாழ்வில் ஒரு வெளிச்சத்தையாவது எனக்கு ஆண்டவன் கொடுத்திருக்கிருனே!' என்றெண்ணினவனய், "அப்படியே ஆகட்டும் வள்ளி!" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான். வள்ளி அவன் சென்ற வழியின்பக்கமே பார்த்தவாறு சற்றுநேரம் நின்றிருந்தாள்.

★

கங்காராமன் அந்தப் பக்கத்தினன் அல்ல; வடநாட்டினன். அந்தத் தடவை வந்த பிளேக் கொடுமைக்கு அவன் வீட்டினரெல்லாம் பலியாகவே; அங்கே இருக்க அருவெறுப்புக் கொண்டு இந்தப்பக்கம் வந்தான். அனதையாகவந்த பையனுக்குக் கவுண்டர் தன் வீட்டில் ஆதரவு தந்தார். சுற்று வட்டத்திலிருந்த நிலபுலன்களனைத்தும் ஏறக்குறைய அவருக்கே சேர்ந்திருந்தது. ஹொடைஹள்ளியிலிருந்த முக்கால் வாசிப் பேர்களெல்லாம் அவர் குடிகளே. எல்லோரும் ஒருவிதமில்லாவிட்டாலும் இன்னொருவிதத்தில் அவருடைய ஆதரவு பெற்றவர்களாகவே இருந்தனர். கவுண்டர் அவ்வளவு செல்வாக்குடையவர்.

வள்ளி கவுண்டரின் இளைய பெண். ரொம்பச் செல்வமாக வளர்ந்தவள் அவளுக்கு ஆரம்பத்திலிருந்தே கங்காராமனிடம் ரொம்பவும் பற்றுதல். கங்காராமனின் நடை, யுடை பாவனைகள், அவள் பார்த்திருந்த இதர ஜனங்களைவிட மாறுபாடுடன் அதிக நாகரீகமாக இருந்தன. கங்காராமன் பார்ப்பதற்கும் நன்ருக இருந்தான். மேலும் எழுதப் படிக்கத் தெரிந்தவன். ஊரையே பயமுறுத்தி அடக்கி வைத்திருந்த கவுண்டர் கங்காராமனிடத்தில் மரியாதையாகப் பேசுவதும், அவனைக்கொண்டு ஏதாவது படிக்கச் செய்வதும், எழுதவைப்பதுமாக இருந்தார். இதைக்கண்டு வள்ளி பெருமிதங் கொண்டு மகிழ்ந்து போவாள்.

வள்ளிக்குக் கலியாண வயதாகவே அடுத்த கிராமத்துக் கவுண்டன் அவளைக் கலியாணம் செய்துக்கொள்ளும் உத்தேசத்துடன் பேச்சுவார்த்தை நடத்தலானுன். கவுண்டனுக்கு அதற்குள்ளாகவே இரண்டுதடவை கலியாணமாகி இரு மனைவிகளும் காலமாகிவிட்டார்கள். அவனுடைய இருபெண்களும் கலியாணமாகிய பின் தனிக்குடித்தனம் நடத்தச் சென்றுவிட்ட பிறகு கவுண்டன் திரும்பவும் கலியாணம் செய்துகொள்வதென்று நிச்சயித்தான். பார்ப்பதற்குச் சிகப்பாகவும் நன்ருகவும் இருந்த வள்ளியின் மீது கண்வைத்தான். வள்ளியின் தகப்பனும் கவுண்டனின் ஆஸ்தியை மாத்திரம் பார்த்துவிட்டு அவன் வயதைப் பொருட் படுத்தாமல் பெண்ணை அவனுக்குக் கொடுப்பதென்று நிச்சயம் செய்துவிட்டான். வள்ளி தந்தையிடம் எவ்வளவு சொல்லியும், அவன் மனம் மாருமல்போகவே, அவள் ஒருநாள் இரவில் பிறந்த வீட்டையும் உற்ருர் உறவினரையும் துறந்து கங்காராமனுடன் இங்கே வந்துவிட்டாள்.

கங்காராமன் அவளைக் கலியாணம் செய்துகொண்டு தான் கவுண்டனிடத்தில் இருந்த பொழுது சேர்த்து வைத்திருந்த பணத்தைக்கொண்டு ஒரு குடிசையில் வள்ளியுடன் குடித்தனம் ஆரம்பித்தான். இந்தச் செய்தியறிந்த கவுண்டர் கோபங்கொண்டு இந்தப் பெண் தன்னைப்பொறுத்த வரையில் செத்தமாதிரி யென்றும் தம்மால் எதிர்காலத்தில் அவளுக்கு எந்த விதத்திலும் எத்தகைய உதவியும் கிட்டாதென்றும் சொல்லியனுப்பினர்.

முதன் முதலில் ஜீவனத்திற்கு எந்தவழியும் தோன்ருமல் வள்ளி போட்டிருந்த சில்லரை நகைகளையெல்லாம் விற்க வேண்டி வந்தால், நிலபுலன் வாங்கி விவசாயம் செய்ய வேண்டுமென்றிருந்த அவன் ஆசை நிராசையாயிற்று. கடைசியில் விதியில்லாமல் கங்காராமன், ஜமீன்தார் ரகுநாதராவிடத்தில்சேவகத்திற்குச் சேர்ந்து அவரிடம் வேலை பார்த்து வந்தான்.

★

அன்று ராயர் வீட்டில் ஒரே கோலாகலம்! கங்காராமன் அங்கே சென்றதுமே "ஏண்டா இவ்வளவு நேரம்? நாளைக்கு வீட்டில் விருந்து நடக்கிறது; இப்பொழுதே இந்த அழைப்புகளையெல்லாம் கொண்டுபோய் என் நண்பர்களிடம் சேர்த்துவிடு" என்று மேஜைமீது குவிந்துகிடந்த கவர்களைக் காண்பித்தார். கணக்குப் பிள்ளை எல்லாவற்றிற்கும் மேல் விலாசம் எழுதிக் கொண்டே தலை கவிழ்ந்தவாறு அமர்ந்திருந்தார்.

கங்காராமனின் முகம் சுண்டிப் போய்விட்டது; ராயர் வீட்டுத் 'தேநீர் விருந்து என்ருல் அவனுக்குத் தெரியும்! இரண்டுநாள் அவனுக்குத் தலை சொரிவதற்குக்கூட நேரமிருது. இப்பொழுது எப்படி 'லீவு' கேட்பது? கங்காராமனின் வேலை, முறைப்படி செய்ய வேண்டியது. இரண்டுநாள் 'டியூடி' (முறை) மூன்ரும் நாள் காலையில் வீடு சென்ருல், பிறகு இரண்டு நாட்களுக்கு வரவேண்டியதில்லை. இவ்விதம் அவன் பிந்திய டியூடி முடிந்து வீட்டிற்குச் சென்றபொழுது இந்த விருந்தின் தகவலே இருக்கவில்லை. இருந்திருந்தாப்போல் ராயர் இந்தத் தடவை எற்பாடு செய்திருந்தார்.

கங்காராமன் கடிதக்கட்டுகளை எடுத்துக் கொண்டு கிளம்பினன். 'இன்னும் நாளைவரையில் அவகாசம் இருக்கிறதே! அவர் மெச்சும்படி வேலைசெய்து அவர் சந்தோஷமாக இருக்கும்பொழுது கேட்கிறது' என்றெண்ணிக் கொண்டான். காரியம் என்னவோ ஒவ்வொன்ருக முடிய ஆரம்பித்தன. ஆனுலும் அவனுக்கு ராயரைக் கேட்பதற்குத் துணிவு வரமாட்டேன் என்றது. அவரிடம் வந்து முகத்தைப் பார்த்ததுமே ஒருவிதத் திகில் உண்டாகிவிடும். இவ்விதம் நாள் முழுவதும் கழிந்து விட்டது. இரவு எல்லோரும் படுத்துக்கொண்ட பிறகு கங்காராமன் கதவருகில் படுத்துக்கொண்டு பரிதாபமாக நக்ஷத்திரங்கள் மின் வெட்டின ஆகாயத்தையே பார்த்துக்கொண்டிருந்தான்.

விடிந்தது. வீட்டில் எல்லாவித மான காரியங்களும் திரும்பவும் துவங்கின. காலைநேர சிற்றுண்டியானபிறகு ராயர் பழவகைகள் வாங்கிவருதற்காகக் காரில் வெளியேசென்ருர்.

★

உட்புரம் திரிவேணி வீட்டை சிங்காரித்துக்கொண்டிருந்தாள். இல்லாள் என்னும் பெயருக்கு விருந்தினரை உபசரித்து அவர்கள் மனம் மகிழச் செய்யும் விஷயத்தில் அவளை மீறுபவர் யாரும் இல்லை. அவர்கள் வீட்டுச் சாப்பாடென்ருல் ஜனங்கள் வெகு உற்சாகத்துடன், உல்லாசமாக நிறைந்து விடுவார்கள்.

கங்காராமன் மற்ற வேலைகளையெல்லாம் முடித்துக்கொண்டு 'டிராயிங் ரூமை'ப்பரிசுத்தம் செய்யச்சென்ருன். அந்தக் காரியத்தில் திறமையுடைய கங்காராமன் செய்வதுகூட அவ்வளவு திருப்தியில்லாமல் நாள் தோறும் தானே எதிரில் நின்றுகொண்டு அவனிடம் வேலை வாங்குவாள் திரிவேணி.

அது வெறும் 'டிராயிங் ரூ'மாக மட்டிலும் இராமல், ஒரு அழகிய கலா மந்திரமாகவும் இருந்தது. பணம் கொட்டி வாங்கக்கூடிய சகல விதமானஅழகிய பொருள்களும், தேசவிதேசங்களிலிருந்து வரவழைத்த அபூர்வமான சாமான்களும், புகழ்பெற்ற கலைஞர்களின் வேலைப்பாடுகளும், பெரிய பெரிய தைல சித்திரங்களும் (Oil paints) அங்கே சேகரிக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்தன.

இந்தத் தடவையில் அதிகப்படி எதுவென்ருல் புதிதாக வாங்கின இரண்டு ஓவியங்கள். லளித கலைப் பொருட்காட்சியில் அவை இரண்டும் தங்கப்பதக்கம் பெற்றிருந்தன. திரிவேணி ரொம்ப சிரமப்

பட்டு அவைகளைச் சம்பாதித்திருந்தாள். அவள் பிறவிக் கலைஞள் (?) ஜமீன்தாரர் ரகுநாதராவின் மனைவியானபிறகு ரொம்பவும் பணம் செலவழித்து நல்ல சிக்ஷை பெற்று அதைமேலும் அபிவிருத்தி செய்துகொண்டிருந்தாள். பொருட்காட்சிசாலையில் அந்த ஓவியங்களைப்பார்த்ததுமே திரிவேணிக்கு அவைகளைச் சேகரிக்க வேண்டுமென்ற ஆசை பிறந்தது.

இது பற்றி விசாரிக்கையில், கலைஞன் சுந்திரமூர்த்தி, அவைகளை விற்பதில்லை என்று சொல்லிவிட்டான். ஆனாலும்கூட திரிவேணி அந்த ஆசையைவிட வில்லை. கணவனிடம் சொல்லி அவனைத் தங்கள் வீட்டிற்குத் தேநீர் விருந்துக்கு அழைத்தாள். சுந்திரமூர்த்திக்குப் போக விருப்பம் இல்லா விடினும் ராயரின் வீட்டில் அபூர்வமான ஓவியங்கள் சேகரித்து வைக்கப் பட்டிருக்கின்றன என்று கேள்விப் பட்டிருந்தான். ஆதலால் அதைப் பார்க்க வேண்டுமென்ற எண்ணத்துடன்தான் விருந்துக்கு வந்தான்.

கதவருகிலேயே ராயரும் திரிவேணியும் அவனைப் பரிவுடன் வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றனர். அங்கிருந்த ஓவியங்களைக் கண்ணுற்ற சுந்திரமூர்த்தி வியப்புற்றான். அவைகளில் திரிவேணியே தீட்டிய ''சியாம சுந்திரன்'' ''விரகம்'' இந்த இரண்டு ஓவியங்களும் அவன்உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. சுந்திரமூர்த்தி பேசாமல் அவைகளைப் பார்த்த வண்ணம் மெய்மறந்தவனாக உட்கார்ந்திருப்பதைப் பார்த்து, திரிவேணி ''அவை எப்படி இருக்கின்றன?'' என்றுகேட்டாள். சுந்தரமூர்த்திக்குத் தாராள குணம். அவன் உள்ளத்தில் அற்பமான எண்ணங்களுக்கு இடமிருக்கவில்லை. ''இந்த ஓவியங்கள் பொருட்காட்சிக்கு வராமல் மறைவாகவே இருப்பதால்தான் எங்களைப்போன்றவர்களின் சிருஷ்டிகள் பதக்கத்தைக் காண்கின்றன'' என்று மனமாரப் புகழ்ந்து பேசினான்.

மறுநாள் தன் ஓவியங்கள் இரண்டையும் திரிவேணிக்கு அன்பளிப்பாக அனுப்பிவிட்டான் சுந்திரமூர்த்தி. ஆனல் ராயர் அதை அன்பளிப்பாக ஏற்றுக்கொள்ளாமல் அதைக் கொணர்ந்தவன் கையிலேயே ஆயிரம் ரூபாய் அனுப்பிவைத்தார்.

இவ்வளவு பணம் கொட்டி அடைந்த ஓவியம்! அதனல்தான் திரிவேணி அதன்பால் அவ்வளவு பற்றும் ஊக்கமும் கொண்டு அன்று தானே அதைத் துடைத்து விட்டுப் பெருமிதம்பொங்க அதை நோக்கினாள். இரண்டு ஓவியங்களும் ஒரேமனிதனின் வாழ்வைப் பற்றி எழுதியவை. முதலாவதில் அவன் இன்னும் வாலிபன். வாழ்க்கை அப்பொழுது தான் தொடங்குகிறது. பெரிய தொரு அரண்மனை போன்ற வீட்டின் முன்னல் நின்று, உள்ளே இருக்கும் யஜமானனின் உதவியால் தன் எதிர்கால வாழ்க்கையை நிரவிக்கொள்ளக் காத்திருக்கிறான். அதற்குள்ளாகவே அவன் உள்ளத்தில் இனிய கற்பனைக் கனவுகள்! கண்களில் ஆசை மின்னுகின்றது! ஓவியம் வெகு அழகாக இருந்தது. படத்தின் அடியில் ''ஆசை'' என்று எழுதப் பட்டிருந்தது. மற்றொன்றில் வாழ்க்கைப் புதிர் கடுமையாகி, ஆதிகால ஆசை மாறுபட்டு, யந்திரத்தோடு யந்திரமாக உழைத்துத்தேயும் வயதுக் கிழவன். அவ

னுக்கு எதிலும் நம்பிக்கையில்லை! 'அன்ன தேவதை' ஒருவளைத் தான் அவன் கண்டிருப்பது. அதைப் பெறுவதற்காக என்ன செய்யவும் அஞ்சுவதில்லை! பாவ புண்ணியத்தின் பயமில்லை! மனிதத் தன்மை மாயமாகி விட்டது. அதனுடன்கூட உழைப்பின் சிரமத்தைக் குறைத்துக் கொள்வதற்காகக் குடிப் பழக்கம்வேறு! பஞ்சடைந்த கண்கள்! உதடுகளின்மீது உலகத்தையே அவமதிக்கும் சிரிப்பு! எத்தகைய ஓவியம்! படத்தின்கீழே ''நிராசை'' என்று எழுதப்பட்டிருந்தது.

நிராசையே படத்தில் உருக்கொண்டு நின்றிருப்பதுபோல் தோன்றிற்று. ஒரே மனிதன்தான் உலகின் அநியாயச் சுழியில் சிக்குண்டு எவ்வளவு மாறிவிடுகிறான்! அவனதுஅன்றைய லக்ஷ்யமென்ன இன்றைய நிலைமை என்ன! பகவானின் சிருஷ்டியில் எல்லோரும் ஒன்றுதானே? ஆனால் மனிதன் ஏன் இந்த மாறுபாட்டை வளர்த்துக்கொண்டே போகிறான்? என்று பார்த்தவர்களை யெல்லாம் கேட்பதுபோல் இருந்தது அந்த ஓவியம். திரிவேணி அதன் அழகையும், சித்திரித்திருக்கும் திறமையையும், பாவங்கள் வெளிக்கிளம்பித் தோன்றும்படி இருந்த வர்ண வேறுபாட்டையும், அதற்கேற்ற பின்னணி ஜோடனையும் பார்த்து மெச்சினளே தவிர, அதனுள் அடங்கியிருந்த உத்தேசம் அவள் மனதிற்குப் பிடிக்கவில்லை; அல்லது அதை அறிய அவள் விரும்பவில்லை.

பலரை நொடிப் பொழுதில் சிந்தனைக்குள்ளாக்கிய ஓவியம் அவள் உள்ளத்தின் மீது எத்தகைய சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. அவள் புன்முறுவலுடன் அதன் வெளியழகைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

★

கங்காராமன் ராயரின் வீட்டிலிருந்து தன் வீட்டை நோக்கிக் கிளம்பும் பொழுதே அந்தி நெருங்கி விட்டது. அன்று அவனுக்கு ரொம்ப அலுப்பாக இருந்தது. எதிலும் உத்ஸாகம் இருக்கவில்லை. நிதானமாக அடிமே

லடி வைத்துக்கொண்டு வீட்டை நோக்கி நடந்தான். என்றைக்கும் போல் பொழுது அஸ்தமிக்கும் அழகும், பறவை இனங்கள் கூண்டுகளை வந்தடையும் கலகலப்பும் அவன் மனதைக் கவரவில்லை. அதையே பார்த்துக்கொண்டு மெய் மறந்து நின்றுகொண்டிருப்பவன் இன்று அந்தப்பக்கம்கூடத் திரும்பிப் பார்க்காமல் பின்னுக்கு நடந்தான்.

பணக்காரர்களுக்கு நம் இன்ப துன்பங்களின் நிழல் கூடத் தெரிவதில்லை; அவர்கள் அறிவதற்கு விரும்புவதுமில்லை; ஆனாலுங்கூட நொடிப்பொழுது கூட நாம் இல்லாமல் அவர்களுக்குக் காரியம் நடப்பதில்லை; அவர்களை விட்டால் நமக்கும் கதியில்லை. நம் இருவர் நடுவிலும் இவ்வளவு வித்தியாசமேன்? என்று அவன் மனம் சிந்தித்துக் கொண்டிருந்தது. அது வெகு சிக்கலான கேள்வி! அவன் கலங்கிய மனதிற்கு எவ்வித பதிலும் கிடைக்கவில்லை.

வழியில் அவனுடைய அண்டை அயல் வீட்டினர் கோவிலிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தனர். பெண்கள் புதுப்புடவை உடுத்துத் தலைமீது மாவிளக்குத் தட்டம் ஏந்தி, கலகல வென்று சிரித்துக் கொண்டும் உற்சாகமாய்ப் பேசிக் கொண்டும் முன்னால் போய்க் கொண்டிருந்தனர்.

அவர்கள் எல்லாம் தகுந்தபடி நில புலன் உள்ளவர்கள்; கேவலம் மற்றொருவர் பணத்தையே நம்பிக் கொண்டிருப்பவர்கள் அல்ல. அவர்களைப் பார்த்ததுமே அவனுக்கு வள்ளியின் நினைவு வந்தது. வள்ளி காலையிலிருந்து எனக்காகக் காத்துக் காத்து எவ்வளவு அலுத்துப்போயிருப்பாளோ? இப்பவும் கூட குழந்தையும் கையுமாக என் வரவையே எதிர்பார்த்தவண்ணம் வீதி வாயிலில் நின்றிருப்பாள். அண்டை அயல் வீட்டினரெல்லாம் சம்பிரமாகப் பண்டிகை செய்து கொண்டிருப்பதைப் பார்த்துப் பார்த்து வள்ளி, பண்டிகை கிடக்கட்டும், தன் வேண்டுதலையைச் செலுத்த முடியவில்லையே என்று இன்று கண்ணீர் விட்டிருப்பாள். உண்மையாகவே இன்று அவளுக்கு என்னை மணந்து கொண்டதில் அதிகத் துயரம் ஏற்பட்டிருக்கும் என்று எண்ணினன்.

வள்ளியின் சுபாவத்தையும், அவள் காதலின் ஆழத்தையும் அறிந்திருந்தும் கூட அவனால் இவ்வித யோசனைகளைச் செய்யாமலிருப்பது சாத்தியப்படவில்லை. அது அவன் இதயத்தைப் பிளந்தது. வள்ளி என்றென்றைக்கும் அவ்விதம் எண்ணாத வண்ணம் நடந்துகொண்டு என் நிலைமையைச் செம்மைப் படுத்திகொள்கிறேன் என்று கங்காராமன் கலியாண சமயத்தில் பிரதிக்ஞை செய்துகொண்டிருந்தான். இன்றைக்கு அந்தப் "பிரதிக்ஞை" அவனைக் குத்திக்காட்டுவதுபோல் தோன்றவே, வாழ்க்கையே வெறுப்பாகத் தோன்றிற்று; வீடு நெருங்க நெருங்க வள்ளியின்பால் ஒருவித அசட்டை தோன்ற ஆரம்பித்தது. "இந்தக் குடும்பத்திற்காக அல்லவா எல்லாக் கஷ்டத்தையும் பொறுத்துக் கொள்ள வேண்டி இருக்கு. இதற்குக் குழந்தைவேறு; அவள் கழுத்தில் முடிவிழுந்திராவிடில் என்றைக்கோ இந்த அடிமைத் தனத்தை உதறித் தள்ளிவிட்டுச் சுதந்திரமாக வாழ்ந்திருக்கலாம்" என்று அவன் எண்ணினன்,

ஆஹா! மனிதன் நன்றியே இல்லாதவன். அச்சமயம் கங்காராமன்

வள்ளியால் அடைந்த இன்பங்கள் அனைத்தையும், என் மன அமைதியையும்கூட மறந்திருந்தான்.

தூரத்துக் குடிசைகளிலிருந்து வெளிச்சம் தென்பட்டது. வரவர எங்கிருந்தோ தாலாட்டும் பாட்டுக் கேட்டது. சில வீடுகளில் பெண்கள் மெதுவாகப் பாடிக்கொண்டு, மாவு அறைத்துக் கொண்டிருந்தனர். ஆனால்... கங்காராமனின் இதயம் துணுக்குற்றது! அவன் குடிசையில் விளக்கைக்காணோம்! இருட்டில் தோய்த்த மாதிரி இருந்தது வீடு.

கங்காராமன் குடிசைக்கு எதிரில் நின்று "வள்ளி" என்று கூப்பிட்டான். வள்ளி உள்ளே இருந்து "என்! இதோ வந்துவிட்டேன்" என்றாள். கங்காராமனுக்குப் போன உயிர் திரும்பின மாதிரியாயிற்று. கூட கோபமும் உண்டாயிற்று. உள்ளே நுழைந்து, "விளக்கேற்றுவதற்கு உனக்கென்ன கேடு?" என்றான்.

வள்ளி நடுநடுங்கிப் போனாள். அவன் வாய்மூலம் அத்தகைய வார்த்தையை அவள் அதற்கு முன் என்றைக்கும் கேட்டதில்லை. அந்த இருளிலும் அவனையே பார்ப்பதுபோல் தலை நிமிர்ந்து "எண்ணெ, திரியொன்றும் இல்லை. கடைசிக்கு ஒரு நெருப்புக்குச்சி கூட இல்லை. விளக்கை எப்படி ஏற்றட்டும்?" என்றாள்.

கங்காராமன் கற்சிலைபோல் நின்றுவிட்டான். முதல் நாள் வள்ளி, 'வீட்டில் ஒன்றும் இல்லை' என்றபொழுது — பண்டிகைக்கு வேண்டிய சாமான்கள் மாத்திரம் இல்லை என்று நினைத்தான். வள்ளி என்றைக்கும் அவ்விதம் சொல்லி அவனுடைய இதய பாரத்தை அதிகரிக்கச் செய்தவளல்ல. அன்று அவளையும் மீறி அந்த வார்த்தை வெளிவந்து விட்டது.

"வள்ளி, எங்கே இருந்தாவது ஒரு இத்தனை எண்ணெ, திரி, நெருப்புக்குச்சி கொண்டாந்து விளக்கு ஏத்தப்படாதா?"

"எப்படிப் போகட்டும்? நேத்திருந்து திரும்பவும் குழந்தைக்கு ஜுரம் வந்துவிட்டது. சாயந்திரத்திலிருந்து நினைவே யில்லை. மடி மீது ஒடுங்கிக்கொண்டு கிடக்கு. யாரிடம் விட்டு விட்டுப் போகட்டும்?"

கங்காராமனுக்கு தான் வீட்டை விட்டுச் சென்று வந்த ஒன்றரை நாளில் என்னவாகி இருக்கிறதென்ற எண்ணமே இல்லை. உண்மை; என்னதான் ஆகக்கூடாது? குழந்தைக்கு உடம்புக்குவரவே வள்ளி, தான் கூலிவேலை செய்து சம்பாதித்த ஒருபொழுது கூழுக்கு ஆகும் அளவு மாவையும், ஒன்றிரண்டு சில்லரைக் காசையும் காணிக்கையாகக் கொடுத்து குழந்தைக்கு 'யந்திரம்' கட்ட வைத்தாள்!

கங்காராமன் மறுபடியும் "வள்ளீ, கொஞ்சம்பொறு. இப்பொழுதேபோய் என்னவாவது கொண்டுவருகிறேன்..." என்றான்

"இப்போ ஒன்றும் வேண்டாம். இந்த இருட்டில் எங்கேபோவாய்? காலம்பரப் பார்த்துக் கொள்ளலாம்!" என்றாள் வள்ளி.

கங்காராமன் அன்று பித்தனைப் போலிருந்தான். அவன் மனது அவன் பிடியிலிருக்கவில்லை. வள்ளி இருட்டில் உட்கார்ந்திருந்தாள். தானும் ஒன்றும்கொண்டுவராமல் சும்மா அவள் அருகில் உட்கார்ந்திருந்தாலும், அவளுக்கு அது எவ்

வளவு சமாதானமாக இருக்கு மென்று அவன் அறிந்திருந்தான். ஆனால் அதை யொன்றையும் யோசியாமல் திடீரென்று எழுந்து நின்று, "வள்ளி, ஆனால் நான் இங்கே இருந்து கொண்டு என்ன செய்ய வேண்டும்? அவ்விடத் திற்கே போகிறேன். இன்று லீவு என்று கேட்டுவிட்டு, இன்னொரு நாள் லீவு கேட்டால் ராயர் "இதென்னடா இது; இப்பொழுதுதானேடா லீவு வாங்கினாய் என்பார்" என்று வெளியே கிளம்பிவிட்டான்.

இருளில் வள்ளியின் கண்களிலிருந்து கண்ணீர் அருவிபோல் பெருக்கெடுத்தது.

★

கங்காராமன் திரும்பி வந்த பொழுது ராயரின் வீடு முழுவதும் வர்ண விளக்குகளால் ஜொலித்துக் கொண்டிருந்தது. நண்பர்களனைவரும் அப்பொழுதுதான் தத்தம் வீட்டிற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தனர். பலகார வாசனை, சந்தன புஷ்பங்களின் மணம் ஊதுவத்திகளின் பரிமளம், இவையெல்லாம் நெடுகப் பரவியிருந்தன. ராயர் வீட்டு வாயிற்புறமாக சாய்வு நாற்காலியில் சிகரெட் பிடித்த வண்ணம் சுருள் சுருளாக மேலேபுகை செல்வதைப் பார்த்தவாறு அதில் ஈடுபட்டிருந்தார். கங்காராமன் போய் கம்பத்தைக் கட்டிக் கொண்டு நின்றான்.

நிழல் விழுந்ததைப் பார்த்து ராயர் "யாரடா அங்கே?" என்றார்.

கங்காராமன் தாழ்மையான குரலில் "நான் தான் சாமீ......" என்றான்.

"நீதானா? பண்டிகை, வேண்டுதலை என்று லீவ்வாங்கிக் கொண்டு போனாயாமே?

"ஆமாம் சாமீ ... கேட்டேன் ஆ...னா...ல்... வீட்டில் ஒன்றுமே இருக்கவில்லை. பண்டிகை செய்யவில்லை. அதனால் வந்துவிட்டேன்"

"ரொம்ப நல்லதாயிற்று. அதோ அந்தத்தட்டம், கிண்ணங்களையெல்லாம் இந்தச் சின்னப் பையன் எப்படி அலம்பமுடியும் என்றுதான் யோசித்துக் கொண்டிருந்தேன். எல்லாம் பீங்கான் சாமான்கள். எங்கே உடைத்து விடுவானோ என்று பயமாக இருந்தது. போ, அதையெல்லாம் சரியாக எடுத்துவை" என்று சொல்லிக்கொண்டே தன் நண்பர்கள் சாப்பிட்டு அதிகப்படி மிஞ்சி, எறிந்து, குவிந்து கிடந்ததும், பலகாரங்கள் இருந்தது மான தட்டங்களைச் சுட்டிக்காட்டினார்.

கங்காராமன் யந்திரம்போல் நடந்தவாறு அவர் காண்பித்த பக்கம் சென்றான். அங்கே வேலை செய்துகொண்டிருந்த பொழுது என்னவோ கேட்டதுபோல் ஆகவே அவன் தலை சுழன்றது.

அன்றைய தேநீர் விருந்து ரொம்ப நன்றாக நடைபெற்றது. வந்தவர்கள் எல்லாம் திரிவேணியைப் புகழ்ந்தவாறு சென்றனர். எஜமானிக்கு இதைக்காட்டிலும் என்னதேவை? ஆனாலுங்கூட அவளுக்குச் சமாதானம் ஏற்படவில்லை, ரகுநாதராவ் வந்து தம் திருப்தியைத் தெரிவிக்கும் வரைக்கும்! அவரை எதிர்பார்த்த வண்ணம் ஆனந்தமிகுதியால் 'சாம சுந்தரனி'ன் ஓவியத்தின்முன்னால் நின்று, மெல்லியக் குரலில் மதுரமாகப் பாடிக் கொண்டிருந்தாள் திரிவேணி.

வாழ்க்கை லட்சியம்

[ரா. நா]

பிரிய சகோதரா,

இயற்கையாகவே உன்னிடம் அமைந்துள்ள நல்ல குணங்களாலும் சத்சகவாஸத்தாலும் உன் மனம் பண்பட்டு விட்டது. தவறான வழிக்கு நீ செல்வதில்லை; செல்லவும் மாட்டாய். ஆனால் உன்னைச் சுற்றியுள்ள மாணவர்கள் நவநாகரிகத்தின் தீமைகளுக்கு பூரணமாக அடிமையானவர்கள் என்று தெரிகிறது. தற்போதைய ஹாஸ்டல் வாழ்க்கை மாணவர்களுக்கு தன்னம்பிக்கையளிக்கிறது. நான் மகிழ்ச்சியடைந்து வந்திருக்கிறேன். ஆனால் அதனால் ஏற்படும் தீமைகளே அதிகமாயிருக்கின்றன. இதே நிலை நீடித்துக்கொண்டு போனால் எதிர்கால இந்தியாவை ஒளியுறச் செய்வதற்குப் போதிய ஆள்பலம் இருக்காது என்று அஞ்சுகிறேன்.

மனிதனுக்கு கடவுள் என்று அறிவைக் கொடுத்தானோ அன்றே அவனுக்கு உயர்ந்த வழியில் செல்ல வழியையும் காண்பித்தான்.

ஆனால் தற்போது செல்லும் பாதையிலேயே இளைஞர்கள் சென்று கொண்டிருந்தால் உயர்வதற்கு வழியே கிடையாது. ஹாஸ்டல் வாழ்க்கைக்கு வந்தவுடன் பெரியவர்கள் கட்டுப்பாடு போய்விட்டது. அவிழ்த்துவிட்ட கன்று மாதிரி துள்ளிக் குதிக்கக் கிளம்பி விடுகிறார்கள் இளைஞர்கள்.

நீ நல்வழியில் செல்கிறாய். உன்னுடன் இருப்பவர்களையும் அதே வழியில் திருப்புவதற்கு நீ முயற்சி செய்ய வேண்டும். சோம்பேறித்தனம்தான் மனதைத் தீயவழியில் செல்லத் தூண்டுகிறது. மனதிற்கு நல்லுணவு அளித்தால் கெட்ட உணவை நாடாது. நீ படித்து இன்புறும் இலக்கியங்களை உன் நண்பர்களுக்கும் படித்துக் காட்டு. அதில் ருசி ஏற்பட்டவுடன் அவர்களும் படிப்பில் நாட்டம் கொள்வார்கள். இலக்கிய வாசக வகுப்பு ஒன்று ஆரம்பி. முதலில் அதிகமானபேர்கள் சேரா விட்டாலும் போகப்போக அதிக நண்பர்கள் வருவார்கள்.

உன்னிடத்தில் அபிமானமுள்ள நண்பர்களை மோசமான சினிமாக்களுக்குச் செல்லலாகாது என்று நயமாக உபதேசம் செய். முக்கியமாக இரவுக் காட்சிகளுக்குச் செல்லலாகாது என்று வற்புறுத்து. இரவு படம் பார்த்து விட்டுத் திரும்புகையில் மனம் சஞ்சலமான நிலையிலிருக்கும். அந்த சமயம் பார்த்து சைத்தான் உட்புகுந்து விடுவான்.

இப்பொழுது பெண்களும் ஆண்களும் சமமாக கல்லூரிகளில் படிக்கிறார்கள். இந்த முறையில் நல்லது என்றால் அதனால் தீமை ஏற்படாமல் காப்பது ஆண்கள் பொறுப்பு. சமூகத்திலேயே ஆண்களுக்குத்தான் அதிக உரிமைகள் இருக்கின்றன. அவர்கள் தவறு செய்தால் அது வெளிப்படுவதில்லை. ஆனால் பெண்கள் தவறு செய்து விட்டால் அது அவர்களை ஆயுள் முழுதும் கஷ்டத்திற்கு ஆளாக்கி விடுகிறது.

பிற பெண்களை சகோதரிகள் போல் பாவிக்க வேண்டுமென்று

சொல்வது சுலபம். அனுஷ்டிப்பது கடினம் என்பது எனக்குத் தெரியும். ஆனால் தற்காப்புக்கு வழி இருக்கிறது. உன்னைப் பற்றி உனக்கே சந்தேகம் இருந்தால் பெண்களுடன் பேசாதே. அவர்களைக் கண்டால் வேறு பக்கம் போய்விடு. தன்னடக்கம் ஏற்பட்டவுடன் தைரியமாக யாருடனும் பழகலாம். இதுமட்டுமல்ல. உன் நண்பர்கள் யாராவது தவறாக நடந்து கொண்டால் அவர்களைக் கண்டித்துத் திருப்பப்பார். அதற்கும் அவன் மசியாவிட்டால் அவனை அவமானப்படுத்தி மாற்றுவதற்கு முயற்சி செய்யலாம்.

இன்று பள்ளியிலும், கல்லூரியிலும் படித்துவரும் மாணவர்களை நம்பித்தான் எண்ணற்ற பெற்றோர்கள் அம்மி விற்று அரிவாள் விற்று தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்கிறார்கள் என்பதை நண்பர்களுக்கு ஞாபகப் படுத்து. 'பெரும்பாலும் விளையாட்டு மைதானங்களில்தான் பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் தயாராகிறார்கள்' என ஒரு ஆங்கிலப் பழமொழி உண்டு. அது மாதிரி இன்று கல்லூரிகளில் படிப்பவர்கள்தான் நாளைக்கு நம் நாட்டை ஆளும் மன்னர்கள் என்பதை மறந்து விடலாகாது.

தீய வழியில் மனம் நாட்டம் கொள்ளாமலிருப்பதற்கு இன்னுமோர் வழியும் இருக்கிறது. இப்பொழுதிருந்தே ஏதாவது ஒரு சமூக சேவை ஸ்தாபனத்தில் சேர்ந்து பொது சேவை செய்யப் பழகிக் கொள். அதில் உற்சாகம் ஏற்பட்டால் சில்லரை விஷயங்களில் மனம் செல்லாது. நல்வழிக்கு மார்க்கம் தேடிக் கொள்வதுடன் சமூக முன்னேற்றத்திற்குப் பாடுபட்ட பெருமையும் ஏற்படும்.

> "காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
> கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
> மாலை முழுதும் விளையாட்டு - என்று
> வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா"

என்று பாரதியார் குழந்தைகளுக்கு எழுதினார். இதே நீதி சற்று வயதான இளைஞர்களுக்கும் பொருந்தும்.

ஒன்று மட்டும் மறந்துவிடாதே. உன் நண்பர்களையும் மறக்க விடாதே. உங்கள் பெற்றோர்கள் எவ்வளவோ தியாகம் செய்து உங்களைப் படிக்க வைக்கிறார்கள். அவர்கள் எதிர்பார்த்து ஏமாற்றமடையாமல் இருக்க வேண்டுமானால் நீங்கள் நாணயமாக நடந்து கொள்ள வேண்டும். நாணயம் உங்கள் வாழ்க்கை லட்சியமாயிருக்க வேண்டும். அப்புறம் நீங்கள் மேன்மையுறுவது பற்றி சந்தேகமே வேண்டாம்.

உன் அன்புள்ள,

....

ஓரங்க நாடகம்:

ஞானோதயம்

[எம். எஸ். ஹமீத்]

(1)

[மாலை வேளை. ஸ்ரீராமர் கோவிலுக்கு எதிரில் உள்ள நந்தவனத்தில் துளசிதாசரும், ரத்னாவளியும் அமர்ந்து உல்லாசமாக சம்பாஷித்துக் கொண்டிருக்கின்றனர். மாமரக் கிளையின் மேலிருந்து குயில் கூவுகிறது.]

துளசிதாஸர்: ரத்னா, வாழ்வு முழுவதும் இந்த மனோகரமான மாலைவேளை தங்கி விடலாகாதா! இப் பூஞ்சோலையின் குளுமையும், பூங்குயிலின்குரலும், மலர்களின் மணமும், தென்றலின் சுகமும், அருவியின் கீதமும், அந்திவானத்துக் கோமளச் சித்திரமும் அப்படியே தங்கி விட்டால்!... ...ஆஹா!......... (கண் இமைகள் சொருகுகின்றன)

ரத்னாவளி: தங்கள் வர்ணனையில் நான் இடம் பெறத் தகுதியற்றவளா?

துளசி: ரத்னா, என்-கண்ணே, சுவரில்லாமல் சித்திரம் எது? என் வர்ணனை இன்னும் பூர்த்தியடையவில்லை. (ஆர்வத்துடன்) ரத்னா உண்மையில் சொல்லுகிறேன். நீ எனது இதயத்தின் அரியாசனத்தில் அமர்ந்துள்ள அழகு ராணி!

ரத்னா: என் பாக்கியம்...... தவப் பயன்! (தன் இரு கரங்களையும் மார்போடு சேர்த்துக் கொண்டு பெருமூச்சு விடுகிறாள்.) தங்கள் அன்புக்கு நறி செலுத்துகிறேன். தாங்கள் சில சமயங்களில் என் மனக் கோயிலின் ஜீவ மணியைத் தட்டி விடுகின்றீர்கள். தங்களுடன் தனித்து உறவாடும் எனக்கு எங்கோ கனவு லோகத்தில் சஞ்சரிப்பது போல் ஒரு பிரமை ஏற்படுகிறது. தங்கள் முன்னிலையில்நான் செயலற்ற பொம்மையாகி விடுகிறேன்!

துளசி: (கைகளை வருடியபடி) ரத்னா, ஏன்உன் கரங்கள் நடுங்குகின்றன?

ரத்னா: நாதா!... (நடுங்குகிறாள். உதடுகள் துடிக்கின்றன. துளசி அவளைத் தழுவிக்கொள்ளுகிறார்)

['டக், டக்' கென்ற பாதக் குறட்டின் ஓசை கேட்கிறது. குருமஹான் நரஹரி தேவர், அவ்வழியாக கோவிலுக்குச் செல்பவர், துளசியையும் ரத்னாவையும் கண்டுவிடுகிறார். காதலர்கள் மிரண்டு எழுகின்றனர்]

ரத்னா: வந்தனம்...... தந்தையே!

துளசி: (பயபக்தியோடு) நமஸ்காரம்!......

குரு: துளசி, ரத்னா, நீங்களா!... (இருவரும் குருமகானின் சமீப

மாய் வருகின்றனர்) ரத்னவளி, அந்தி மயங்கி விட்டது; நீ வீட்டிற்குப் போ. துளசி, நீ என்னேடு வா.

[ரத்னு வீட்டுக்குப் போகிருள். குருவும் சீடனும் கோவிலை நோக்கி நடக்கின்றனர்.]

குரு : துளசி, எத்தனையோ முறை உன்னிடம் சொல்லியாகி விட்டது. நீ என் வாக்கைப் புறக்கணித்து வருகிருய். மாயை, பெண் மோகம், தாயன்பு போன்ற உலக பந்தங்கள் கடமையை நிறைவேற்றும் மார்க்கத்தில் முட்டுக்கட்டை போடுபவை. ஆகையால், இனி நீ ரத்னவளியின் உறவை அறவே ஒழித்துவிட வேண்டும்.

துளசி : சுவாமி, இது தாங்கள் பல முறை என்னிடம் சொன்ன விஷயம் தானே? எனக்குக் குருமகானின் வார்த்தையை மீற வேண்டும் என்ற ஆர்வம் இல்லை. ஆனல்.........

குரு : ஆனல் என்ன ?

துளசி : என் இதயத்தை நொறுக்கிக்கொள்ள விரும்பவில்லை சுவாமி. ரத்னவளியின் கனிந்த இதயம் அழுகிப் போய்விடும்!

குரு : உங்கள் இரண்டு உள்ளங்களும் உடையவேண்டும் என்பதே என் விருப்பம்.

துளசி : என்ன, என்ன ?

குரு : ஆம் துளசி, இதனல் மக்கள் சமுதாயத்திற்கே ஒரு மகத்தான நன்மை விளையப் போகிறது! உலகம் உள்ளளவும் உன் கீர்த்தி நிலைக்கப் போகின்றது. உன் அறிய முயற்சியினல் அகிலம் புதுமை பெறப் போகிறது. அக்கிரமங்களும், அநியாயங்களும் மங்கி மடியப் போகின்றன ! ...

[குரு மகானின் முகம் செந்தாமரை போல் மலர்கிறது]

குரு : பலகோடி மக்கள் நிரம்பிய சமுதாய சமுத்திரத்தின் கொந்தளிப்பை அடக்கி, அங்கு அமைதியும் சாந்தியும் நிலவவேண்டும் என்பதற்காக உன் அற்ப ஆசையை யாசகமாகக் கேட்கிறேன். துளசிதாஸா, கோடிக் கணக்கான உள்ளங்கள் பண்பட்டு மேன்மை யடைவதற்காக உன் ஒரு உள்ளத்தை உடைத்துக் கொள்வது பிரமாதமல்ல; உடைத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

துளசி : (விம்மியபடியே) என் சக்திக்கு மீறிய காரியத்தைச் செய்யச் சொல்லுகின்றீர்களே! குருதேவா !

குரு : (கோபமாக) சை ... நீ நரஹரியின் மாணக்கன் தானு? என் பெயருக்கு நீ பெரிய கேடு விளைவிக்கிருய் ! ...

[குருமகான் கோபமாகப் போகிருர். துளசிதாஸ் அவர் கால்களைப் பிடித்துக்கொள்ள நரஹரி உதறித் தள்ளிவிட்டு வேகமாகப் போய் விடுகிருர். துளசி, மனங்கலங்கியவராய் கோவிலுக்குள் ஒடி ஸ்ரீராமனின் கால்களைப் பிடித்துக்கொள்கிருன்

துளசி : பரந்தாமா நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும் நான் என் செய்வேன்! அவர் சினத்தைத் தணித்து அருள் புரிய மாட்டாயா ! என் மனத்தைக் கரிய இருள் சூழ்ந்து கொண்டது. உன் அருள் ஜோதிதான் வழி காட்டியாக வந்து துணை புரிய வேண்டும்.

(2)

குருமஹான் நரஹரிதேவர் வீட்டுக்கு மறுநாள் துளசி தாஸர் போகிறார். வால்மீகியின் சம்ஸ்கிருத இராமாயண ஏடு களைப் புரட்டிக் கொண்டிருந்த குருமகான், துளசியைக் கண்ட தும் புன்னகை ததும்ப வரவேற்கிறார்.

குரு : வா அப்பா துளசிதாஸா! வா. மங்களம் உண்டாகுக, சித்தம் தெளிந்ததா?

துளசி : (பயந்து) தெளிந்தது.

குரு : (ஆனந்தமாக) ஆத்ம சாந்தி உண்டாயிற்ரு?

துளசி : ஆம்சுவாமி. ஆனல்... எது வரையில் நான் இருப்பேனே, அதுவரை அவளும் என் உள்ள த்தில் குடியிருப்பாள்.

குரு : துளசி, இன்னும் உன் மனம் ஊசலாடுகிறது! உன்னை நீ தெரிந்து கொள்ளவில்லை. போய்வா!

[துளசி போகிருர். குரு மகான் தனக்குள் சொல்லிக் கொள்கிருர்]

குரு : நீதான் வால்மீகி, நீயே தான் ஸ்ரீ ராமச்சந்திரன்! ...... உம், வேறு வழியில்லை. ரத்னுவளி யிடம் உண்மையைச் சொல்ல வேண்டியதுதான்! ......

(3)

துளசிதாசரின் குடில். மாலை நேரம். துளசியும் ரத்னு வும் பேசிக்கொண்டிருக்கின்றனர். ரத்னுவளி, தன் மடியில் மலர்களை வைத்துக்கொண்டு, ஒவ்வொரு மலராக எடுத்து, மாலையாகத் தொடுக்கிறள்.

துளசி : ரத்னு, உன் மடியைப் பார்க்கிலுமா இந்த மலர்கள் மென்மையானவை? அப்படி எனக்குத் தெரியவில்லையே!

ரத்னு : உம், கவிஞர்களுக்கு மங் கையரைப் புகழ்வதுதான் சுலப மாயிற்றே! ஹ...ஹ...ஹா!... [சிரிக்கிருள். துளசியும் சிரிக் கிருன்.]

ரத்னுவளியின் மெல்லிய மடி யின் மீது துளசி தலையைச் சாய் த்துக் கொள்கிருன்

துளசி : எல்லோரையும் போல் நீ சாதாரணமான பெண்ணல்ல. அழகோவியமாகிய உன்னை தெய்வாம்சம் பொருந்திய கவி களால்தான் பாட முடியும். ஞாபகமிருக்கட்டும்.

[எக்காளச் சிரிப்பு. யாரோ கதவைத் தட்டும் சப்தம். ரத்னு வளி கதவைத் திறக்கிருள். குரு மகான் சிந்தனை தேங்கிய முகத் துடன் உள்ளே நுழைகிருர்.]

ரத்னு : வாருங்கள் தந்தையே!

துளசி : வாருங்கள் குரு தேவரே!

குரு : மங்கள முண்டாகட்டும். அம்மா ரத்னுவளி, நமஸ்காரம்!

[ரத்னுவை, குருதேவர் நெடுக விழுந்து நமஸ்கரிக்கிருர்.]

ரத்னு : தந்தையே ! அபசாரம் ! ... எழுந்திருங்கள் ! ...... (கண்ணீர் சிந்துகிருள்.)

குரு : அபசாரம் இல்லையே அம்மா! துளசிதாஸருக்கு நீதானே ஸ்ரீ ராமச்சந்திரனுக விளங்குகிருய்? அப்படியிருக்க அபசாரம் எப்படியாகும் ?......

[ரத்னு, தவறுதலை உணர்ந்து அழுகின்ருள். குருமகான் துளசியைக் கோபமாகப் பார்த்து]

குரு : துளசி, இன்று ராம நவமி என்பது கூடத் தெரியவில்லையா? வெளியில் சென்று தின்பண்டங்களும், கனி வர்க்கங்களும் வாங்கிவா.

[துளசி வெளியில் போகிருர். குருமகான் பலகையில்அமருகிருர். ரத்னுவின் கண்கள் கலங்கி யிருக்கின்றன.]

குரு : ரத்னுவளி, ஏனம்மா அழுகிருய்? கண்களைத் துடைத்துக் கொள். நான் அவமானம் செய்து விட்டேனு?

ரத்னு : இல்லை, தந்தையே! ஒரு கணவன் தன் மனைவியின் மேல் பிரேமை கொள்வது தப்பல்லவே!

குரு : ரத்னுவளி, நான் சொல்வதைக் கேள். பல வருஷ காலமாக என் மனதிற்குள் அழுந்திக் கிடந்த ரகஸியத்தை இன்று உன்னிடம் வாய்விட்டுச் சொல்லப் போகிறேன். நீ எனக்கு உதவி புரிய வேண்டும்.

ரத்னு : என் முழு உதவியும் தங்களுக்குத்தான். சொல்லுங்கள்.

குரு : (முகம் மலர்ந்து) மகளே, துளசிதாஸர், ரத்னுவளியின் கணவராக இருந்து, சிற்றின்பப் புழுவாக, தமது வாழ்நாளை வீணுக்கிக் கொள்ளப் பிறக்கவில்லை. இந்த உலகத்தின் மாயை, மோகம் முதலிய இன்பச் சாயைகளில் மூழ்கிக் கிடக்கும் மக்களைக் கடைத்தேற்றத்தான் துளசிதாஸர் — உன் கணவர் — ஜென்மம் எடுத்தார். உண்மையில் அவர் வால்மீகியின் அவதாரம் !

ரத்னு : (திகைத்தவளாய்) என்ன? வால்மீகியா !

குரு : ஆம் மகளே, முழு விபரத்தையும் கேள். சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன்பு நடந்த சம்பவம். ஒரு தினம் தீப ஆராதனைக்குப் பின், நான் ஸ்ரீ ராமபிரானின் முன் நின்று "பரந்தாமா, தர்மத்தைக் காப்பாற்ற வேண்டி அவ்வப்போது அவதாரம் எடுக்கும் தங்களுக்கு உலகநிலை தெரியாததா? உலகம் சீரழிந்து, தர்மம் தலை குனிந்து அதர்மம் தலைதூக்கித் தாண்டவமாடுகிறதே? ஏ ராமா, நான் வால்மீகி ராமாயணத்தை உலகோருக்கு எடுத்துச் சொல்லி, தங்களுடைய அன்பு மயமான ஜீவிய தத்துவங்களைப் பரப்ப முயன்றேன். ஆனல் அது எடுபடவில்லை. ஏனெனில், சமஸ்கிருதம் பாமர ஜனங்களுக்குப் புரிவதில்லை ; வால்மீகி மஹரிஷியின் உயர்ந்த கற்பனைகளையும், பரந்த கற்பனைகளையும் ஜனங்கள் புரிந்து கொள்வதில்லை —" என்று நான் வேண்டிக் கொண்ட அன்றிரவு, கனவில் ராமச்சந்திரப் பிரபு தோன்றி "கவலை கொள்ளாதே, வால்மீகியே, துளசிதாஸர் என்ற நாமத்துடன் உலகில் அவதரிக்கப் போகிருர்—" என்று சொல்லி மறைந்தார். அந்தத்

துளசிதாஸர்தான் – வால்மீகி மஹரிஷிதான் – உன் கணவர்!

ரத்னு: (ஒன்றும் தோன்ருமல்) தந்தையே! என் மனம் குழம்புகிறது. உலக மக்களுக்கு ஒவ்வொரு நாளும் என்னையே அறியாமல் நான் பெரிய தீங்கு இழைத்து வந்திருக்கிறேன். வால்மீகி மகரிஷியைக் கடமையிலிருந்து தவறும்படி செய்து வந்திருக்கிறேன். அபசாரம்!...... தந்தையே, இப்போது நான் என்ன செய்ய வேண்டும் என்பதைத் தாங்கள் தயை கூர்ந்து தெரிவிக்க வேண்டும்.

குரு: ஜீவ கோடிகளுக்காகவும், புது உலக சிருஷ்டிக்காகவும், நீ உன் கணவரை மனமார எனக்குத் தானம் செய்து விடு!

ரத்னு: (ஆனந்தக் கண்ணீர் பொங்க) தந்தையே! உலக நன்மைக்காக என் காதலையும், என் ஆருயிர்க் கணவரையும் இதோ தியாகம் செய்து விட்டேன்!

[ரத்னவளி தனது மாங்கல்யத்தைக் கழற்றி முத்தமிட்டு, மறுபடியும் அணிந்து கொள்கிருள். கண்கள் குருடாகும்படி மின்னல் வெட்டுகிறது. பேரிடி புடைக்கிறது. மழை கொட்ட ஆரம்பிக்கிறது.]

குரு: (சற்றுநேரம் அதைப் பார்த்தபடி நின்று விட்டு) பாரத நாட்டு மாதரசிகளின் கற்புக்காகவும், தியாகத்திற்காகவும் பெய்யும் மழை!...... மகளே, நீ வாழ்க!......

[குருதேவர் செல்கிருர். ரத்னவளி பிறந்தகம் புறப்படுகிருள்.]

(4)

ராமநவமிக்காக வேண்டிய பொருள்களை வாங்கிக் கொண்டு வந்த துளசிதாஸர், வீட்டில் ரத்னவளி இல்லாதது கண்டு திகைக்கிறர். மழையின் கடுமையும் இடிகளின் கோர முழக்கமும் காதைச் செவிடாக்குகின்றன. பளீரென மின்னல் ஒளிக்கற்றைகள் பாய்ச்சி இருளைக்கிழித்து விளையாடுகிறது. துளசிதாஸர் தனிமை தாங்க முடியாமல் மனைவியைத் தேடிக்கொண்டு அவள் இருப்பிடம்போய்ச் சேர்கிறர். உடலெல்லாம் நனைய மெய்ம்மறந்த நிலையில், பித்தன் போல, சுவரேறிக் குதித்து ரத்னவளி நித்திரை செய்யும் அறைக்குள் நுழைகிறர். ரத்னவளி நித்திரை கலைந்து திடுக்கிட்டு எழுகிறள்.

ரத்னு: யாரது!......

துளசி: நான்தான் ரத்னு!

ரத்னு: நீங்களா, இந்நேரத்திலா!

துளசி: ஆம், ரத்னு!......

[துளசிதாஸர் உணர்ச்சிப் பெருக்கில் ரத்னவளியை இறுகத் தழுவ முயல்கிருர். ரத்னு திமிறி விலகி நின்று கொள்கிருள்.]

துளசி: (திகைத்து) ரத்னு, என்ன இது! என்னை நீ வெறுக்கிருயா?

ரத்னு: இல்லை சுவாமி, நாம் இருவரும் இனி ஒன்று கூடி இருப்பது பாவம்.

துளசி : என்ன, பாபமா?

ரத்னு : ஆம், பலகோடி மக்களின் க்ஷேமத்திற்கு ஒருவர் இடை யூருக இருப்பது பாபம்தானே?

துளசி : கணவன் மனைவியைத் தழுவுவது பாபமல்லவே!

ரத்னு : பாபமில்லேதான், ஆனல், அந்த அணைப்பில் கடமை தவறு வது மகா பாபம் சுவாமி.

துளசி : ரத்னு, குருதேவர் உன்னை என்னவோ செய்து விட்டார்!

ரத்னு : ஆம், என் கண்களைத் திறந்து அற்றிற்கு நேர்மையான பார்வை யளித்தார்.

துளசி : இல்லை, அதை உன்னிட மிருந்து எடுத்துக் கொண்டார். ரத்னு அவர் உனக்கு என்ன போதித்தார்?

ரத்னு : நீங்களும் நானும் கூடி இருப்பதால் தமது சர்வ மனே பீஷ்டங்களும் மண்ணுகின்றன என்று சொன்னர். தூய்மை யான துளசிதாஸர் மாய்கையில் மயங்கி இருப்பதாகச் சொன் ஞர்.

துளசி : ரத்னவளி, என் கண்ணே, இதெல்லாம் வெறும் கற்பனை. குருதேவர், என்னை தெய்வாம் சம் பொருந்தியவன் என்று தவறுதலாக மதிப்பிட்டிருக்கி ருர். தமது மாணவன் கீர்த்தி பெற்று விளங்க வேண்டும் என்ற போதையில் அவர் இம் மாதிரியான காரியங்களைத் தொடர்ந்து செய்து வருகிருர். ரத்னு, அன்பே, இங்கு வா! என்னைத் தவிக்க விடாதே ரத்னவளி!.........

[துளசிதாஸர் ரத்னவளியை வலுவில் அணைத்துக் கொள்கிருர். ரத்னுவின் கண்கள் கனல் கக்கு கின்றன.

ரத்னு : பிரபு!... குருதேவரின் மீது ஆணை. என்னை விடுங்கள். (துளசி விலகுகிருர்) தாங்கள் உலகிற்கு நியாயம் வழங்க வந்த நீதிபதி! இந்த உண்மையை இன்னும் தாங்கள் அறியவில்லை. என்னுல்தான் தாங்கள் கடமை யைச் செய்யத் தவறுகின்றீர் கள். இம்மாதிரியே இன்னும் சில வினுடி வரை, என் மீதுள்ள பாசத்தினுல், துளசிதாஸர் தமக் குரிய கடமையைச் செய்யத் தவறுவாரானுல், அதற்குத் தடையாயிருக்கும் என் உயிர் இந்த உடலை விட்டுப் பிரிய வேண்டி நேரிடும்.

துளசி : என்ன, என்ன சொன் ஞய்! ரத்னு, என் உன் அறிவு மங்கிப்போய்விட்டதா? என்ன இது?

ரத்னு : (உறுதி தொனிக்கும் குர லில்) மங்கி விடவில்லை சுவாமி! அது முன்னிலும் புத்தொளி பெற்றுப் பூரித்துப் பிரகாசிக் கிறது.

துளசி : (வருந்திய குரலில்) ரத்னு நான் நிற்கும் இந்த நிலை கண்டு கூட உனக்குப் பச்சாதாபம் ஏற்படவில்லையா? ரத்னு நீ எப் பேர்ப்பட்ட அரக்கியாக மாறிப் போய் விட்டாய்! உன் மென்னெஞ்சம் கன்னெஞ் சமாய் மாறி விட்டதா?

ரத்னு : கன்னெஞ்சம் உடையவர் தாங்கள் தான். அதனுல்தான் சீறும் புயலை எதிர்த்து, அதுவும் இந்த நள்ளிரவில் இங்கு வந்தி ருக்கிறீர்கள்.

துளசி : ரத்னவளி! (விம்முகிருர்.)

ரத்னா : அகாரணமாகக் கண்ணீர் சிந்த வேண்டிய அவசியமே இல்லையே!

[புயற்காற்று வீசுகிறது. இடி முழக்கம். துளசி, ரத்னா இருவர் மீதும் மின்னலொளி தடவிச் செல்கிறது.]

ரத்னா : பாருங்கள். நமது கேவலமான நிலையைக் கண்டு வானம் அலறி அழுகிறது. மின்னல் தங்கள் கோழை மனதைக் கண்டு சிரிக்கிறது. புயல் நம் விதியைப் போல் எள்ளி நகையாடுகிறது. நாதா! என் மீது இதுகாறும் கொண்டிருந்த பிரேமையையெல்லாம் ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியின்பால் செலுத்துங்கள். யாருடைய திருநாமத்தின் மகிமையால் ஜன்ம ஜன்மாந்திரப் பாபிகளுக்கும் மோக்ஷம் கிட்டியதோ, யாருடைய ஸ்பரிசத்தால் அகல்யா போன்ற கற்புக்கரசிகள் கரையேற்றப் பட்டனரோ அவர் மேல் காதல் கொள்ளுங்கள். இந்தப் பாவக் கடலினின்றும் மீள வழி தேடுங்கள். ராமநாம மகிமை தங்களுக்குத் தெரியாததா? என் மோகன தேக வனப்பில் மதி மயங்கி அலைகின்றீர்கள்; ஆனால் அதன் உண்மைத் தோற்றத்தைத் தாங்கள் என்றேனும் எண்ணிப் பார்த்ததுண்டா?

[துளசிதாசருக்கு ரத்னவளியின் தேகம் வெறும் எலும்புக் கூடாகத் தென்படுகிறது.]

ரத்னா : நாதா, பாருங்கள், நன்றாகப் பாருங்கள்! காமம் கக்கும் கள்ளக் கருவிழிகள் எங்கே? இனிமை ததும்பும் சிவந்த அந்த இதழ்கள் எங்கே? முறுவல் பூக்கும் முத்துப் பற்கள் எங்கே? கனிந்து சிவந்த ரோஜா நிறக் கன்னங்கள் எங்கே? தங்கச்சிலை எனப் போற்றிய அந்தத் தங்க உடல் எங்கே? அதன் மீது விம்மி நின்று பார்வையைக் குத்திய அமுதக் குடங்கள் எங்கே? யௌவனம் கொப்புளித்த லாவண்ய ரூபம்தான் எங்கே? அவையெல்லாம் எங்கு சென்றன!......... இந்த நிலையற்ற பொருள்களில் மோகம் கொண்டு பரந்தாமனாகிய ஸ்ரீ ராமனை மறந்தீர்களே, சுவாமி! தாங்கள் பித்தேறி அலைந்த இனிய உருவம், யௌவனத்தின் அழகு தளும்பும் மாயக் கூடம்!......... பிரபு! என்னை மறந்து விடுங்கள். குருதேவரின் ஆக்ஞைகளை ஏற்றொழுகுங்கள். தங்களையும் லோக மக்களையும் கடைத்தேற்றி பிறந்ததின் முழுப் பயனையும் அடைய இதோ தங்கள் அடிமை வேண்டுகிறேன்.

[எலும்புக்கூடு சுய ரூபம் அடைகிறது.]

துளசி : (ஆனந்தக் கண்ணீர் ததும்ப, மலர்ந்த முகத்துடன்) ரத்னவளி!...... நீயே என் குரு! நீயே என் தேவி! என் மனக் கண்ணைத் திறந்து விட்ட மகா உத்தமி நீ! .... பரந்தாமா! ஸ்ரீ ராமச்சந்திரா! ...... (பாடுகிறார்)........

ரகுபதி ராகவ ராஜா ராம்
பதித பாவன சீதா ராம்

துளசிதாசர் பாடிக்கொண்டே வெளியேறுகிறார். நீல வானம் பூமாரி பொழிகிறது.

ஆசிரியர்:
சரத் சந்திர சட்டர்ஜி

சாவித்திரி

மொழிபெயர்ப்பு:
ஆர். ஷண்முகசுந்தரம்

காதலித்தவர்களை எப்படிப் பூஜிப்பது என்பது பற்றி யாரிடத்திலும் விவாதிக்க வேண்டியதில்லை. என்னை விரும்பாத சமூகம், எனக்கு எதிராக இருக்கும் சமூகம், எனக்கு இருக்க இடம் கொடுக்குமா?

நேற்றுக்கூட வயது முதிர்ந்த தந்தையின் முகம் மனக்கண் முன் தோன்றியது. உபேந்திர அண்ணா வீட்டிற்குப் பக்கத்திலிருக்கும் பட்டாசார்ய மஹாஷயரின் கடூரமான குரல் காதில் ஒலிப்பது போலிருந்தது. தெருவிலுள்ள சிநேகிதர்கள், விரோதிகள் அனைவரும் நான் செய்யும் காரியத்திற்காகச் சிரிப்பது தெரிந்தது. இருந்தாலும் இவ்வளவு அவமானத்திற்கு முன்பும் சரோஜினியின் சாந்தமயமான முகமல்லவா எனக்கு வெற்றி அளித்தது?

இன்று எனக்கு ஒரு பயமும் இல்லை. ஒரே ஒரு நாளில் வழி பிறந்து விட்டது. கெட்ட நினைவுகள் பறந்தோடி விட்டன. ஆபத்து நீங்கியது.

இவ்வெண்ணங்கள் மனதில் எழ திடுக்கிட்டான் சதீஷ். எதிரில் உட்கார்ந்திருந்தவர்களும் தலை குனிந்தபடியே மௌனமாக உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். சரோஜினியை நம்பிக்கையுடன் பார்த்தான். ஆனால் அவள் முகத்தில் எவ்வித மாறுதலையும் காணவில்லை. உடனே சதீஷ், அவள் பெயரைச் சொல்லி அழைத்து, "நீங்கள் ஒரு நாள் கல்கத்தாவில் என் வீட்டிற்குச் சென்று உலரப் போட்டிருந்த சேலையைப் பார்த்து விட்டு வந்தீர்களே, அந்தச் சேலை சாவித்திரியினுடையது. ஒரு நாளைக்கு எல்லா விஷயத்தையும் தங்களுக்குச் சொல்லலாமென நினைத்தேன். ஆனால் அப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அதற்குத் துணிவும் எனக்கு உண்டாகவில்லை" என்று கூறினான்.

அவன் எழுந்து நின்றுகொண்டு,

"ஜோதிஷ் பாபு, குற்றம் என்னுடையது தான். இது எனக்குத் தெரியும். இதனுல் மனதிற்கு நிம்மதி இல்லாமல் இருந்தது." பிறகு சிறிது பொறுத்து, "நான் எந்த விஷயத்திற்காகவும் யாரையும் ஏமாற்றியதில்லை. எனக்குஏமாற்ற வேண்டிய அவசியமுமில்லை. சரி. இனி நான் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை" என்முன்.

ஜோதிஷ் ஏதோ சொல்ல விரும்பினுன். ஆனுல் அவன் வாயிலிருந்து வார்த்தை கிளம்ப வில்லை.

சதீஷ் பெருமூச்சு விட்டுக் கொண்டு, "நான் போகிறேன். அதற்கு முன் ஒரு சிறு வேண்டுகோள். என் விஷயத்தைப் பற்றிச் சிந்தித்து நீங்கள் மனதைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள். நான் இனி எப்போதும் உங்களிடம் வரமாட்டேன். என்னை நீங்கள் மறந்து விடுங்கள்" என்று கூறிவிட்டு அவன்மெள்ள மெள்ள வெளியே சென்று விட்டான்.

ஜோதிஷ் அருகில் திரும்பிப் பார்த்தான். சரோஜினி தலை கவிழ்ந்திருந்தாள். "சரோஜினி! சரோஜினி!" என்று கூப்பிட்டுக் கொண்டு அருகில் வந்தான். அதற்குள் அவள் மயக்க மடைந்து நாற்காலியிலிருந்து கீழே விழுந்து விட்டாள்.

சதீஷ் இவ்விதம் விடை பெற்றுச் சென்றது, சரோஜினியின் உள்ளத்தில் எத்தகைய கலக்கத்தை உண்டு பண்ணியது என்பது அவனுக்குக் கோபத்தால் தெரியவில்லை.

வெகு நேரத்திற்குப் பிறகு சரோஜினி மயக்கம் தெளிந்து எழுந்து அவளுடைய அறைக்குப் போன பிறகுதான் ஜோதிஷின் தலையில் ஒரு பெரிய பாரம் ஏறியது போலிருந்தது.

தங்கையைத் தனது உயிரினும் மேலாக நேசித்து வந்தான். தனது அழகிய தங்கையிடம் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தான். ஆனுல் அவள் இவ்விதம் ரகசியமாகக் காதல் கொள்ளக் கூடும்; தனது கௌரவத்தை மறந்து ஒரு நடத்தை கெட்டவனுக்குத் தன்னையே ஒப்படைத்து, உலர்ந்த சருகு போல ஒடிந்து விழக்கூடுமென அவன் கனவில்கூட நினைத்ததில்லை. அவனுக்கு உண்டான வேதனைக்கு அளவில்லை. அவன் கற்சிலைபோல உட்கார்ந்து கொண்டிருந்தான். வெகு நேரம் கழித்து சஷாங்க மோகனைப் பார்த்து, "நீங்கள் இன்று இரவு கல்கத்தா போகிறீர்களா?" என்முன்.

"இல்லை. அப்படி ஒன்றும் முக்கியமான காரியம் இல்லை" என்முன் சஷாங்கன்.

ஜோதிஷ் பிறகு வேறு ஒன்றும் கேட்கவில்லை. அவன் எழுந்து அறைக்குள் சென்று படுக்கையில் படுத்துக் கொண்டான். அன்று இரவு சஷாங்கமோகன் தனியாகத்தான் உட்கார்ந்து சாப்பிட்டான். ஏனென்முல் ஜோதிஷ் அருகில் கூட வரவில்லை.

ஜகத்தாரிணி ஒவ்வொன்முக மகன் கூறக் கேட்டாள். வெகு நேரம் வரையிலும் ஒன்றும் பேசவில்லை. கடைசியாக, "ஜோதிஷ், இது எனது தலைவிதி" என்முள். பிறகு தனது கணவனை நினைத்துக் கொண்டு, "அவர் உயிரோடிருந்த போதே நான் புழுங்கிக் கொண்டு தானிருந்தேன். இப்போது கஷ்டப்படாவிட்டால் தந்தையின் பாபத்தை எப்படிப் போக்குவது? சரி அப்பா, உனக்கு இஷ்டமான

வனுக்கே அவளைக் கலியாணம் செய்து கொடுத்து விடு. நான் வேறு ஒன்றும் சொல்லப் போவதில்லை'' என்று கூறி விட்டு, இதனால் தான் திடீரென அவன் வரும் செய்திகேட்டு நான் கலக்கமடைந்தேன்'' என்றாள்.

ஆனால் ஜோதிஷ் ஒன்றும் பேசவில்லை. இது அவ்வளவு சுலபமான காரியமல்ல என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டான். நடந்தது நடந்து விட்டது என்று கண்ணை மூடிக் கொண்டு உட்காரவும் முடியாது. ஒரு நாளைக்கு இந்தத் துன்மார்க்கனிடம் போக வேண்டி யிருக்கலாம்.

நேற்று முழுதும் சரோஜினி அறையை விட்டே வெளிவரவில்லை. இன்று சாயங்காலம் டீ குடிப்பதற்கு வெளி அறைக்கு வந்து சஷாங்க மோகனிடம் பேசிக் கொண்டிருந்தாள்.

ஜோதிஷ் அருகில் வந்து மௌனமாக ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். தங்கையின் வாடிய முகத்தைப் பார்த்தான். இருந்தாலும் மனதிலிருந்த பாரம் சிறிது குறைந்தது போலிருந்தது.

டீ குடித்தான பிறகு சிறிது பேசிக் கொண்டிருந்தார்கள். ஆனால் யாரும் அன்று நடந்ததைப் பற்றிப் பேசவில்லை. சாயங்காலம் தங்கை கவலையற்று இருப்பதைப் பார்த்து அன்று நடந்ததைப் பற்றி தான் நினைத்தது தவறு என்று ஜோதிஷ் கருதினான். சிறிது நாளில் எல்லாம் சரியாகப் போய் விடும் என்று நினைத்தான்.

அன்று இரவு வெகு நேரம் வரையிலும் நண்பர்களிருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள். தன் மனதிலுள்ளதைக் கூட சிறிது ஜாடையாக சஷாங்கனிடம் தெரியப் படுத்தினான் ஜோதிஷ்.

சரோஜினி, தனது அந்தரங்கக் காதல் கவிழ்ந்ததும், சதீஷின் துர் நடத்தையையும் சஷாங்கனையும் சீர்தூக்கிப் பார்ப்பாள் என்று இருவரும் நம்பினார்கள்.

அடுத்த நாள் மத்தியானம் சாப்பிட்டதிற் கப்புறம் சரோஜினி தனது படுக்கை அறையில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். சிறிது தூரத்தில் சாமான்கள் ஏற்றி வரும் ஒரு மாட்டு வண்டிக்குப் பின்னால் பிஹாரியும் இன்னொரு மனிதனும் வந்து கொண்டிருப்பதைப் பார்த்தாள். சரோஜினி ஜன்னலைப் பிடித்துக் கொண்டு எழுந்து நின்று கொண்டாள். வண்டி ஜன்னலருகில் வந்ததும் ஒரு மனிதன் அண்ணாந்து ஜன்னலைப் பார்த்தான். அவன் வேறு யாருமில்லை, பிஹாரி தான். சரோஜினி அவனை வரும்படி சைகை செய்து அழைத்தாள். பிஹாரி ஜன்னலருகில் வந்து நின்றான். சரோஜினி, ''பிஹாரி, கதவுக்குப் பக்கத்தில் மாடிப்படி இருக்கிறது. மேலே வா'' என்றாள். அப்போது வீட்டில் அனைவரும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். பிஹாரியும் மாடிப்படி ஏறி சரோஜினியிடம் வந்து சேர்ந்தான்.

''உங்களுக்கு இரவு பதினொரு மணி வண்டி தானே? இன்னும் ரொம்ப நேரமிருக்கிறது. சமையல்காரன் கூடவே இருக்கிறான். சாமான்களை இறக்கி வைத்து விடுவான். நீ சிறிது உட்கார்.'' என்றாள். சதீஷ் இங்கிருந்து எங்கோ புறப்பட்டு விட்டான் என்ப

தைச் சொல்லாமலேயே சரோஜினி புரிந்து கொண்டாள்.

பிஹாரி கீழே உட்கார்ந்தான்.

சரோஜினி சிறிது நேரம் ஒன்றும் பேசவில்லை. அதற்கப்புறம் மெதுவாக, "நீ எப்போதும் பொய் பேச மாட்டாயல்லவா?" என்றாள்.

"பொய் பேசினால் நான் கடைத்தேற முடியுமா? எழு ஜன்மத்திற்குக் காசி வாசம் செய்தால் கூட பாபம் தொலையாதே!"

சரோஜினி அன்புடன் அவனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டு, "நீ எப்போதும் பொய் பேச மாட்டாய் என்பது தெரியும். இருந்தாலும் நான் உன்னை ஒன்று கேட்கிறேன். அதை நீ வேறு யாரிடத்திலும் சொல்லக் கூடாது?" என்றாள்.

"நான் என்னத்திற்காகப் பிறரிடம் சொல்லப் போகிறேன்?"

"சரி, சாவித்திரி என்பவள் யார் பிஹாரி?"

பிஹாரி அவளையே பார்த்துக் கொண்டு, "சாவித்திரி, எங்கள் சாவித்திரியா? அவளை என் சொந்த மகளாகப் பாவித்து வருகிறேன். அவளைப் பற்றியா நீங்கள் கேட்கிறீர்கள்? அடடா! யார்இட்ட சாபத்தாலோ அவள் இந்த உலகத்தில் பிறந்து இத்தனை துக்க மனுபவிக்கிறாள். ஆஹா! அவள் சாக்ஷாத் லட்சுமியே தான்!" என்றான்.

பிஹாரி ரொம்ப நாளாகச் சாவித்திரியின் எண்ணமே இல்லாமலிருந்தான். இன்று அவளுடைய பெயரைக் கேட்டவுடன் கண்களில் நீர் நிறைந்தது.

சாவித்திரி பெயரைக் கேட்டதும் பிஹாரி இவ்வித நிலை அடைந்ததைக் கண்டு சரோஜினி ஆச்சரியமடைந்தாள்.

பிஹாரி கண்ணைத்துடைத்துக் கொண்டு, "என் தாய் சாவித்திரி ராகால் பாபு விடுதிக்கு வேலைக்கு வந்ததும் அனைவரும் அவளைக் கண்டு திடுக்கிட்டார்கள். ஒரு தெய்வீகக் களை சதா அவள் முகத்தில் துலங்கிக் கொண்டிருக்கும். ராகால் பாபு, மானேஜர்; நான் வேலைக்காரன் தான். இருந்தாலும் அனைவரையும் சமமாகவே பாவித்து வந்தாள். ஏகாதசியின் போது அவள் விரதமிருப்பாள். ஆனால் எப்போதும் அவள் சோர்வின்றி இருப்பாள்" என்றான்.

கிழவன் சாவித்திரியின் அன்பில் ஈடுபட்டு மெய் மறந்து பேசிக் கொண்டிருந்தான். அதைக்காண சரோஜினிக்குப் பொறுமையாக இருந்தது.

"அம்மா, ஏதோ ஒரு குற்றத்திற்காக ஒரு காலத்தில் லக்ஷ்மி தேவி, நாராயணனுடைய ஆக்ஞையால் வேலைக்காரியாக ஜன்மமெடுத்தாள் என்று புராணத்தில் படித்திருக்கிறோம். சாவித்திரி அப்படி ஏதோ ஒரு குற்றத்திற்காகத் தான் வேலைக்காரியாக வந்தாள். கடைசியில் பலவிதத் துக்கத்தை ஏற்றுக் கொண்டு போய் விட்டாள். அவள் போன அன்று நான் அடைந்த துக்கத்தைச் சொல்ல முடியாது" என்றான்.

"இப்போது அவள் எங்கிருக்கிறாள், பிஹாரி?"

பிஹாரி இக்கேள்விக்கு உடனே பதில் அளிக்கவில்லை. மௌனமாக அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்? உனக்குத் தெரியாதா பிஹாரி?"

"நன்றாகத் தெரியாது. இருந்தாலும் கொஞ்சம் தெரியும். ஆனால் அவள் சொல்லக் கூடாதெனத் தடுத்திருக்கிறாளே. நான் எப்படிச் சொல்லட்டும்?"

"ஏன் தடுத்திருக்கிறாள்?"

ஏன் தடுத்திருக்கிறாள் என்பது பிஹாரிக்குக் கூட விளங்காமல்தானிருந்தது. இதைப் பற்றி அவன் அநேக தடவை யோசித்திருக்கிறான்; ஆனால் அவனுக்கு என்னமோ விளங்கிய பாடாயில்லை. ஆனால் அவள் கட்டளையை மீறியதில்லை. சாவித்திரி எப்படி இருக்கிறாள்; அவள் எப்படிப் பிழைக்கிறாள் என்பதொன்றும் அவனுக்குத் தெரியாது. இன்னொரு முறை பார்க்க வேண்டுமென்று மிகுந்த ஆவலுடையவனாக இருந்தான். சதீஷ் எதற்காவது வீணாக சாவித்திரியைத்திட்டினால் அப்போது எல்லாவற்றையும் கூறி விட வேண்டுமென்று மனதில் தோன்றும். ஆனாலும் கிழவன் இதுவரையிலும் சாவித்திரிக்கு அளித்த வாக்குறுதியை மீறியதில்லை. சதீஷிற்கும் உண்மை நிலையைக் கூறியதில்லை. எப்பவாவது ஒரு நாளைக்குப் பொறுக்க முடியாமற் போய் விட்டால் அப்போது, சாவித்திரி குற்றமற்றவளாய் இருந்தும் சகலத்தையும் பொறுத்துக்கொண்டு போய் விட்டதை நினைத்துக் கொள்வான். சாவித்திரியிடம் அவனுக்கு அளவுகடந்த நம்பிக்கை இருந்தது. என்ன இருந்தாலும் ஒன்றுமறியாத ஒரு அன்புடைய யுவதி கேட்கும்போது அவனால் சொல்லாமல் இருக்க முடியவில்லை. அவன் சிறிது நேரம் பேசாமலிருந்துவிட்டு "சொல்லுகிறேன் அம்மா! ஆனால் இதை பாபுஜியிடம் சொல்லக் கூடாது" என்றான்.

சரோஜினி மனதிற்குள் மிகுந்த குழப்பமடைந்தாள். பிஹாரிக்குத் தெரியும். ஆனால் சதீஷிற்குத் தெரியாது! இதற்கென்ன காரணம் என்பது அவளுக்குப் புரியவில்லை. "இல்லை பிஹாரி, நான் நான் யாரிடமும் சொல்ல மாட்டேன்." என்றாள்.

பிஹாரி மெதுவாக சதீஷ் டாக்டருக்குப் படிப்பதற்காக கல்கத்தா வந்து முதன் முதலில் ராகால் பாபு விடுதிக்கு வந்ததிலிருந்து இன்று இந்த வனவாசம் வரையிலும் எல்லாவற்றையும் சொல்லி முடித்தான்.

சாவித்திரியை, சதீஷ் உயிரினும் மேலாக நேசித்ததையும், அதைக் கண்டு ராகால் பாபு கொதிப்படைந்ததையும், சதீஷ் விடுதியை விட்டதையும், அவன் சில சமயங்களில் குடிப்பதையும் கூடக் கூறி விட்டான்.

சரோஜினி இம்மாதிரி எந்த விஷயத்தையும் கவனமாகக் கேட்டதில்லை. ராகால் பாபு என்ற மனிதன் மூலம் சஷாங்கனுக்கு சதீஷ் சம்பந்தமான விஷயங்கள் எல்லாம் தெரிந்திருந்தது. ஆனால் இன்று அகஸ்மாத்தாக அந்த ராகால் பாபுவைப் பற்றி சரோஜினி தெரிந்து கொண்டாள்.

சாவித்திரி ஊர் எங்கிருக்கிறதென்றோ, அல்லது அவள் தாய் வீட்டைப் பற்றியோ மாமியார் வீட்டைப் பற்றியோ பிஹாரிக்கு ஒன்றும் தெரியாது. ஆனால் அவன் அடிக்கடி, "அவள் பிராமணப் பெண், விதவை. மிகுந்த அழகுடையவள். நன்கு எழுதப் படிக்கத் தெரிந்தவள். ஏதோ தலைவிதியால் வேலை செய்ய வந்தாள்" என்று கூறினான். "பாபு அவளை அவ்வளவு நேசித்தாலும் அவளைக்

கண்டால் ஓநாயைக் கண்ட ஆட்டுக் குட்டியைப் போல நடுங்கினார். குடித்து விட்டு பாபு விடுதிக்கு வரத் துணிய மாட்டார். விபின் என்று பாபுக்கு ஒரு நண்பர் இருந்தார். அவரோடு சேர்ந்து கொண்டு போகாத இடத்திற்கெல்லாம் போவதும் வருவதுமாய் இருந்தார். இந்தச் சங்கதி சாவித்திரிக்கு எட்டியதும், பாபு போவதை நிறுத்திக் கொண்டார். சாவித்திரியை மீறி விட்டு அங்கு போவதற்கு அவருக்குத் துணிவு உண்டாகவில்லை" என்று கூறிவிட்டு சரோஜினியைப் பார்த்தான்.

சதீஷிடம் ஒரு பெண்ணுக்கு இருந்தஉரிமையைக் கேட்டதும் சரோஜினியின் உள்ளம் வாடியது. இருந்தாலும் அவள் அதை வெளிக்குக் காட்டாமல், "சதீஷ் பாபுக்கு அவளிடம் எதனால் அவ்வளவு பயம்?" என்றாள்.

"அவள் அவ்வளவு தேஜஸ். பாபு மட்டிலும் அல்ல, விடுதியிலிருந்த அனைவரும் அவளிடம் பயந்தார்கள். அவள் அந்த விடுதியிலிருந்து போய் விட்டாள். அன்று பாபு எங்கோ போய் குடித்து விட்டு ஒருபுட்டியுடன் வந்தார். பக்கத்தறையில் சாவித்திரி இருக்கிறாள் என்று தெரியவே புட்டியை வெளியே எறிந்து விட்டார். அவளைத் தவிர வேறு யாராலும் பாபுவை வசப்படுத்த முடியாது" என்றான்.

"சதீஷ் பாபு, இப்போதும் குடிக்கிறாரா, பிஹாரி?"

"இல்லை. ஆனால் மறுபடியும் ஆரம்பிப்பதற்கு எவ்வளவு நேரம் ஆகும்? கடந்த இரண்டு நாளாக பாபு இருப்பதைப் பார்த்தால், இந்தச் சமயத்தில் சாவித்திரி இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று தோன்றுகிறது" என்றான்.

சரோஜினி உற்சாகத்துடன், "என் பிஹாரி? அப்படி என் நினைக்கிறாய்?" என்றாள்.

"நான் ரொம்ப நாளாகப் பார்த்து வருகிறேன். மனது கெட்டால்தான் குடிக்க ஆரம்பிக்கிறார். உபேந்திர பாபுவிடம் பயந்து கொண்டிருந்தார். ஆனால் அவருக்கும் இவருக்கும் என்ன நடந்ததோ தெரியவில்லை. அன்று வீட்டிற்குள் நுழைந்ததும் சாவித்திரியைப் பார்த்தார். அவர் உடனே திரும்பிப் போய் விட்டார். அதற்கப்புறம் அவரைப் பற்றி நினைப்பது கூடக் கிடையாது. இந்நிலைமையில் சாவித்திரியைத்தவிர அவரை யார் சமாளிக்க முடியும்?" என்றான்.

மறுபடியும் பிஹாரி, "உடம்பு சரியில்லை என்று கேள்விப்பட்டு இந்தநாலைந்து நாளாக பாபு என்ன பாடு படுகிறார் தெரியுமா? நான் என்கண்ணால் பார்க்கிறேன். மூந்தா நாள் தூங்கி எழுந்ததும் தந்தி வந்தது. தந்தியைப் படித்ததும் கண்ணை மூடி படுக்கையிலேயே நாள் முழுதும் படுத்துக் கொண்டார். அதற்கப்புறம் இரவு வண்டியில் ஊருக்குப் புறப்பட்டு விட்டார். 'நீ எல்லா சாமான்களையும் எடுத்துக் கொண்டு ஊருக்கு வா' என்று கூறி விட்டுப் போனார்" என்றான்.

"யாருக்கு உடம்புக்கு சரியில்லை பிஹாரி?"

பிஹாரி ஆச்சரியத்துடன், "பாபு போகும் போது உங்களிடம் ஒன்றும் கூறிப் போகவில்லையா?" என்றான்.

"இல்லை, யாருக்கு உடம்பு சரியில்லை?"

"அப்படியானால் இங்கு வர மறந்து விட்டு நேராகப் போய்

விட்டார். இங்கு சாப்பாட்டிற்கு அழைத்திருந்த அன்று ஊரிலிருந்து தகப்பனருக்கு உடம்பு சரியில்லே என்று கடிதம் வந்திருந்தது. இதனுல் சாப்பாட்டிற்கு வர முடியவில்லே. தந்தி கொடுத்து விட்டு பதிலுக்காக தபாலாபீசிலேயே நாள் முழுதும் காத்துக் கொண்டிருந்தார். ஆனுல் பதில் ஒன்றும் வரவில்லே. இதற்கப்புறம் முந்தாநாள் காலேயில் கடைசிச் செய்தி வந்தது. ராத்திரி வண்டியில் பாபு புறப்பட்டு விட்டார்'' என்ருன்.

சரோஜினி திடுக்கிட்டு, "சதீஷ் பாபுவின் தந்தை இறந்து விட்டாரா?'' என்ருள்.

"ஆமாம்!''

"என்ன நோய்?''

"ரொம்ப வயதாகி விட்டது. ஏதோ சாதாரண நோவினுல் தான் இறந்து விட்டார்'' என்று கூறி பிஹாரி கண்ணேத் துடைத்துக் கொண்டு, "நான் வேறு ஒன்றுக்காகவும் கவலேப் பட வில்லே, தந்தை இறந்து போன பிறகு பாபுக்கு வேறு யாருமில்லேயே என்ற கவலே தான். இரண்டு நாளாக இதைப் பற்றித் தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். அவர் இனி என்ன செய்வாரோ, கடவுளுக்குத் தான் தெரியும்'' என்று கூறி விட்டு மறுபடியும் ஒரு முறை கண்ணே நன்கு துடைத்துக் கொண்டான். சரோஜினி கண்களிலும் நீர் நிறைந்தது. "இம்மாதிரி சந்தர்ப்பத்தில் சதீஷ் பாபு நல்ல வழியைத் தான் கடை பிடிப்பார். கெட்ட வழியில் போய் விடுவார் என்று நீ ஏன் பிஹாரி பயப்படுகிருய்?'' என்ருள்.

பிஹாரி எதையோ நினேத்துக் கொண்டு, "யார் கண்டார்கள்?'' என்ருன். பிறகு, "உன் வாய்க்குச் சர்க்கரை போட வேண்டும், அம்மா? பாபு, நல்லவழியிலேயே நடக்கட்டும். ஆனுல் வண்டியில் ஏறிப் போகும் போது ஒரு வார்த்தைச் சொன்னுர். 'சரி' ஒரு வழியாகத் தீர்ந்தது. இனி உலகத்தில் யாரையும் சிந்திக்க வேண்டியதில்லே' என்ருர். இதைக் கேட்டதிலிருந்து எனக்கு பயமாயிருக்கிறது. இனி கைக்குப் பெரிய சொத்து வந்து விடும். பாபுவினுடைய நண்பர்கள் சரியில்லே. கெட்ட வழியில் போனுல் யார் அவரைத் தடுத்துநிறுத்த முடியும்? அவளால் தான் அது முடியும்?'' என்று கூறினுன்.

"அப்படியானுல் அவளே வரும்படி ஏன் கடிதம் எழுதக் கூடாது?''

"விலாசம் தெரியாது. ஒரு தரம் காசிக்குப் போனுல் எப்படியும் கண்டு பிடித்து விடலாம். ஆனுல் எனக்கு சந்தர்ப்பம் இல்லேயே. பாபுவைத் தனியாக விட்டுப் போகவும் மனதிற்கு விருப்பமில்லே. நான் காசிக்குப் போனதும் இல்லே. அங்கு யாரும் தெரியாது'' என்று கூறிவிட்டு சரோஜினியின் முகத்தைப் பார்த்தான். ஆனுல் சரோஜினி ஒன்றும் பேசாமல் மௌனமாக இருந்தாள்.

"நான் போய் வருகிறேன்'' என்று கூறி எழுந்து புறப்பட்டான். ஆனுல் உடனே திரும்பி வந்தான்.

"என், பிஹாரி?'' என்று சரோஜினி கேட்டாள்.

"ஒரு வேண்டுகோள்.''

"என்ன வேண்டுகோள்?''

"நான் ஒரு படிக்காத முட்டாள். இந்நேர வரையிலும்

பேசிக்கொண்டிருந்ததில் ஏதாவது தப்பாகப் பேசியிருந்தால் மன்னிக்க வேண்டும்.''

சரோஜினி கண்ணீர் விட்டாள். அவள் மிகுந்த அன்புடன், ''சரி'' என்றாள்.

அவள் வாய் திறந்து 'சரி' என்று கூறி விடவே பிஹாரிக்குக் கவலை நீங்கியது. சரோஜினி, சாவித்திரியைப் பற்றிக் கேட்பதற்கு ஏன் கூப்பிட்டாள் என்பது இப்போது அவனுக்கு நன்கு விளங்கி விட்டது. அவளுடைய மனோபாவம் தெரியாமல் இந்நேரம் வரையிலும் பேசிக் கொண்டிருந்ததற்காக வருத்தப் பட்டான். அவன் மிகுந்த அன்புடன், ''உங்கள் வார்த்தையையும் பாபு ஒரு நாளும் மீற மாட்டார். இது எனக்குத் தெரியும். உங்களுக்கு இஷ்டமிருந்தால் பாபுவை சமயத்தில் காப்பாற்றலாம். ஆனால், நீங்கள் அவரை இழந்து விட்டது போல என் மனம் கூறுகிறது'' என்றான்.

சரோஜினியின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. கண்ணீர்த்துளிகள் கன்னங்களில் உருண்டோடின. அவள் அதைத் துடைத்துக் கொண்டு, ''முடியாது பிஹாரி; என்னால் ஒன்றும் முடியாது. நான் இனி அவர் விஷயத்தில் தலையிடமாட்டேன்'' என்றாள்.

''நான் உனது அடிமை. அவரிடம் ஏதாவது தவறு நேர்ந்திருந்தால் நான் அதை எனது தவறாகக் கொள்கிறேன். உங்களுக்குத்தான் பாபுவைத் தெரியுமே! இந்த ஆபத்துக் காலத்தில் அவரிடம் கோபித்துக் கொண்டு அவரை மேலும் துன்புறுத்துவதா? இதை நான் என் கண்ணால் பார்த்துக் கொண்டிருப்பதா? இது என்னால் முடியாது.''

சரோஜினியின் ரோஷமெல்லாம் பறந்து விட்டது. அவளுடைய உள்ளம் கரைந்து உருகியது. சதீஷை மன்னிக்கத் தயாரானாள். இருந்தாலும் சாவித்திரியைப் பற்றி உள்ளத்தில் எண்ணம் எழுந்தது. அவளுடைய மனம் பழையபடி சோர்வடைந்தது. அவள் கோபத்துடன், ''முடியாது பிஹாரி. நீ பயப்பட வேண்டாம். சாவித்திரி வந்தால் எல்லாம் சரிப்பட்டுப் போகும். என்னால் உங்களுக்கு ஒன்றும் நன்மை உண்டாகாது'' என்றாள்.

இம்மாதிரி அவள் கூறுவாள் என்று பிஹாரி எதிர் பார்க்கவில்லை. அவன் சிறிது நேரம் ஒன்றும் பேசாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அதற்கப்புறம் அவன் ஒன்றும் பேசாமல் அங்கிருந்து வெளியே சென்று விட்டான்.

(தொடரும்)

197238

1957-ல் ஒரு சந்தோஷ தினத்திற்கு
1945-ல் திட்டம் போடப்படுகிறது

சிறு சேமிப்புக்காரர்கள் 5 ரூபாய்க்கு ஒரு ஸெர்டிபிகேட்டையாவது, ஒன்று 4 அணு, 8 அணு, 1 ரூபாய் மதிப்புள்ள ஸேவிங்ஸ் ஸ்டாம்புகளையாவது வாங்கலாம். ஸெர்டிபிகேட்டுகளும் ஸ்டாம்புகளும் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற யாதொரு ஏஜென்டினிடமாகிலும், ஸேவிங்ஸ் பீரோ, தபால் ஆபீஸுகள் ஆகிய இந்த இடங்களிலாகிலும் கிடைக்கும்.

"என் குழந்தைகளின் கலியாணச் செலவுகளை நான் தாங்க முடியுமா?"
இக் கேள்விக்குப் பதில் நீர் இப்போது செய்யும் காரியத்தைப் பொறுத்ததாகும்.

கலியாணங்கள் என்றால் பணச் செலவுதான். பல வருஷங்களுக்கு முன்னால் முன் யோசனையுடன் திட்டம் போட்டு பணம் சேர்த்து, அதைப் புத்திசாலித்தனமாய் வட்டிக்குப் போட்டுவைத்தால்தான் உமது குழந்தைகள் பெரியவர்களாகும்போது தங்கள் கலியாண வாழ்க்கையை சரியான வகையில் நிச்சயமாய் ஆரம்பிக்க முடியும்.

நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகள்

★ பிரதி **10**ரூபாயும் **12**வருஷங்களுக்குப்பிறகு **15**ரூபாய் ஆகிறது.

★ தனிவட்டி $4\frac{1}{6}$ சதவிதம். இதற்கு இன்கம் டாக்ஸ் கிடையாது.

★ இரண்டு வருஷங்களுக்குப் பிறகு [**5**ரூபாய் ஸெர்டிபிகேட் விஷயத்தில் **18**மாதங்களுக்குப் பிறகு] அதுவரையில் சேர்ந்துவந்த வட்டியுடன் பணமாக மாற்றிக்கொள்ளலாம்.



No. 4... டைப் டிஸைன்ஸ்

காங்கீரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியா செய்து வரும் பல காரியாம்ஸங்களில் டைப் டிஸைன்ஸ் ஒன்ருகும். அந்தந்த இடங்களுக்குக் கேற்றபடி சில்லறை வேலைப்பாட்டுடன் இவைகளின் அவசியம் எல்லோருக்கும் இன்றியமையதாகும்.

காங்கிரிடை உபயோகிக்கும் ரோடு, பாலம், ஆபிஸ் அல்லது குடியானவனின் ஏழ்மை குடிசையாகட்டும் — இவைகளை நிர்மானிப்பதில் ஆரம்பத்தில் இலவச சேவையையும் கட்டும்பொழுது மேற்பார்வை சம்பந்தமாய் உதவியையும் கொடுக்க இந்த அஸோஸியேஷன் வசதி அளிக்கிறது.

நாள்பட்ட அனுபவமும் நுட்பமான அறிவும் பெற்றுள்ள இந்த அஸோஸியேஷனின் இலவச சேவையைபயன்படுத்திக் கொள்ளுங்கள். பூரா விவரங்கள் 199, மவுண்ட் ரோட், மதருஸ் விலாசத்தில் கிடைக்கும்.

ஸி.எம்.ஐ
டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ்
ஆப்

Vasantham, Dec., 1945.

காங்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியா

தி ஸிமெண்ட் மார்கேட்டிங் கம்பெனி ஆப் இந்தியா
லிமிட்டெட்

★

அரவிந்த்

வஸ்திரங்கள் கம்பீரமான ஆடைகளுக்கு

இந்தியாவின் அதி பிரபலமான வஸ்திரங்கள்:

நூல் புடவை, வேஷ்டி, ஷர்டிங், டுவில், கிரேப், பாப்ளின், நயின்ஸுக், லான், மல், டோரியா, வாயில் முதலிய தினுசுகள் உள்ளன.

நீங்கள் வாங்கும் துணிகளின் மேல் இக் குறியை பார்க்கவும்

அரவிந்த் மில்ஸ் லிமிடெட், அஹமதாபாத்

எங்கும் விற்பனையாளர்கள் உள்ளனர்

471

★

சந்தை கலைந்ததும்

இந்தியாவிலுள்ள லட்சக்கணக்கான கிராமவாசிகள் வாரம் மாதக் கணக்கான உழைப்பின் பலனைச் சந்தை நாளிலேயே தான் அடைகிறார்கள். தானிய வியாபாரி வருஷத்துக் கிருமுறையே வரக்கூடும். காய்கறி பலசரக்கு விற்பவர்களோ வாரந்தோறும் கூடுகிறார்கள். தூசியைக் கிளப்பும் கால் நடை வியாபாரமோ மிகவும் கடினம்.

கிராம வாசிகளிடையே பெரும்பாலாகப் புழங்குவது தீப்பெட்டி எண்ணெய் வகைகளே. வருஷத்துக்கு ஒரு முறை பண்டிகைகளை முன்னிட்டுத் துணிமணிகள் நடமாடலாம். ஆனால் சந்தை கலைந்ததும் எல்லோரும் எப்போதும் வாங்குவது எது? ஒரு கோப்பை சூடான இனிய தேனீரே.

பரந்த விநியோகம்—
புத்தப் புதிய தேயிலை.

ஒவ்வொரு சந்தையிலும் நஷ்டமடைந்தவனுக்கு ஆறுதலையும், லாபமடைந்தவனுக்குக் கொண்டாட்டத்தையும் கொடுப்பது புதுமணங் கமழும் ப்ரூக் பாண்ட் தேயிலையே.

ப்ரூக் பாண்ட்

" இரு இலையும் ஒரு மொட்டும் "

Printed at the Vasanta Mills Press, and Published by K. P. Sundaram at 4/12 A. Trichy Road, Coimbatore. Editor: R. Thirugnanasambandam.